SIR THOMAS MUNRO



THE OTTRUMAI OFFICE
SAIDAPET, MADRAS.

All Rights Reserved] [Price As. 12

சர் தாமஸ் மன்ரோ

மணி. திருஞான சம்பந்த முதலியார்
எம். இ. வீரபாகு பிள்ளை, பி.ஏ. எல்.டி.

ஒற்றுமை ஆபீஸ்,
சைதாப்பேட்டை, மதராஸ்.

காபிரைட்] 1930 [அணா 12.

PRINTED AT THE B. N. PRESS,
MOUNT ROAD, MADRAS.

நான்முகம்

சர் தாமஸ் மன்ரோ என்னும் பெருந்தகையாரின் ஒளி மிக்க குணங்களும், புகழ்ததும்பும் ஆற்றல்களும் அளவிடுதற் கரியன. அவர் ஆங்கிலேயர்களுக்குள் விலை மதிக்க இயலாத ஒரு மாணிக்கம்போல் திகழ்ந்தவர். அவர் பூத உடம்பு நீங்கி னும் புகழுடம்பு இன்னும் இங்கிலாந்திலும், இந்தியாவிலும் ஒளிர்கின்றது. அப்பெரியார் அரசாங்கத்தார்க்கும், இந்தியர் களுக்கும் புரிந்துள்ள நன்மைகள் அளவிடற்பாலனவல்ல. அப்புண்ணியரது பொறையும், வாய்மையும் நீதியும், நல் லொழுக்கமும், பொன்னினும், மணியினும், போற்றத் தகுந்தவை. அவ்வுத்தமரது களங்கமில்லாக் குழவியின் உள்ளமும், கனியினும் சுவை மிக்க இன்மொழியும் பெரிதும் கொண்டாடத்தக்கன.

மன்ரோ சாதாரண குடும்பத்தில் பிறந்து, வறுமைக்கட லில் உழன்று, முதலில் சென்னையில் மிகச் சிறிய உத்தியோ கத்தில் அமர்ந்து, இறுதியில் மிகப் பெரிய கவர்னர் பதவியை அடைந்தவர். அவர் உழைப்பின் பெருமையும், ஊக்கத்தின் மான்பும், பொறையின் பொற்பும், வாய்மையின் நேர்மையுமே, அவர் பெரும்பதவி அடைந்தமைக்குக் காரணங்களாகும். அப்புனிதர் ஆங்கிலேயர் என்றும், இந்தியர் என்றும் ஒரு தினை யளவும் வேற்றுமை பாராட்டாதவர். இந்தியர்கள்மீது பெருங்கருணை வைத்து அவர்களைப் பற்பல துறைகளில் முன்னேற்ற மடையுமாறு செய்தவர்; அவரே இந்தியர் களுக்கு முதல் முதல் உன்னத உத்தியோகங்களை யளிக்கு மாறு ஏற்பாடு செய்தவர்.

மன்ரோ அழுத்தமான சிறந்த கல்வியும், பாண்டித்திய மும், ஆழ்ந்த சிந்தனையும், நுண்ணிய புத்தி கூர்மையும், கற்பனை சக்திகளும், அழகான வர்ணிப்பின் சுவைகளும், நகைச்சுவை ததும்ப எழுதும் ஆற்றல்களும், நன்கு அமையப் பெற்றவர். இச் சிறு நூலில் மன்ரோவே எழுதிய பற்பல பெருமை மிக்க கடிதங்களின் பகுதிகள் மொழிபெயர்த்து எழுதப்பட்டுள்ளன. அவ்வரிய கடிதங்களே அவர் உத்தியோகத்தின் ஆற்றலையும், வாழ்க்கையின் நலத்தையும், அரசாட்சியின் சிறப்பையும், குடிகள்மீது வைத்த அன்பையும், இன்னும், இவைபோன்ற பல அரிய விஷயங்களையும் நமக்கு நன்கு விளக்கும். மனம் வைத்துக் கூர்ந்து கவனித்து அக்கடிதங்களை வாசிப்பவர்கள் உள்ளத்தில் பெருங்களி ததும்பும் என்பதில் ஐயமில்லை.

மன்ரோ நெடுங்காலமிருந்த பல்லாரி, கடப்பை ஜில்லாக்களிலிருக்கும் குடிகள் தாங்கள் புதல்வர்களை இன்றும் "மன்ரோலப்பா" என்னும் திருநாமம் வைத்து அழைக்கின்றார்கள். கடப்பை ஜில்லாவிலுள்ள அங்குமிங்கும் திரியும் பிச்சைக்காரர்கள் இன்றும் அவர்மீது பாடல்கள் பாடி வருகின்றார்கள். குத்தியில்(Gooty) அப் புண்ணியருக்கு மண்டவரிஷி என்னும் ஒரு பெயரும் வழங்கி வருகின்றது. இப்போதும் சேலம் ஜில்லாவில் ஒரு சிவில் உத்தியோகஸ்தருக்கு எல்லாவற்றினும் பெரிய கௌரவம் கொடுப்பது என்னவென்றால் அவர் மன்ரோவைப் போன்றவர் என்றுரைப்பதே யாகும். இவற்றால் மன்ரோ எத்துணைப் பெரியார் என்பது இனிது விளங்கும். அவரைப்பற்றி எழுதிய இப்புத்தகத்தைக் களிப்புடன் வாசிப்பவர் பெருநலம் உறுவர் என்பது மிகையன்று.

சர் தாமஸ் மன்ரோ

அதிகாரம் ஒன்று

இளமைப் பருவம்

தாமஸ் மன்ரோ என்னும் பெயரிய பெருந்தகையார் கிளாஸ்கோ என்னும் திருநகரில் 1761-ஆம் ஆண்டு பிறந்தார். அவர் தந்தையார் ஒரு வியாபாரி. அவருக்கு நான்கு சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும் உண்டு. அவர் தம் பெற்றோர்க்கு இரண்டாவது புதல்வர்.

மன்ரோ முதலில் சிறு கல்விச்சாலையில் மிக ஊக்கத்துடன் கல்விகற்றுப் பின்னர் பெரிய கல்லூரியில் செம்மையுறக் கற்று, ஏனைய மாணவர்களினும் மிகச் சிறந்து பொலிவுற்றார். அவர் கணித சாஸ்திரத்தில் மிக வல்லுநர்; தேச சரித்திரம் வாசிப்பதிலும், ஆங்கில மொழியின் அருமைச் சாரத்தைப் பருகுவதிலும் பெரியதோர் ஆர்வம் கொண்டவர்; போர்களின் வரலாறுகளையும், அவற்றுள் அமைந்த திட்ப நுட்பங்களையும் அறிந்துகொள்ளுதற்கு அவருக்கு விருப்பம் அதிகம். ஸ்பெயின் தேசத்துச் சரிதை ஒன்றின் அருமை பெருமைகளை அறியுமாறு, அவர் தாமாகவே அத்தேசத்துப் பாஷையை ஒருவாறு கற்றுக் கொண்டார். ஒரு சரித்திரத்தை வாசித்து, அதன் உண்மைப் பெருமையை அறிதற்கு ஒரு பாஷையைப் புதிதாகக் கற்றுக் கொண்டார் மன்ரோ துரை என்றால், அவர்

ஊக்கத்தின் மாண்பும், அறிவின் மாட்சியும் எத்துணைச் சிறந்தவையென நாம் சொல்ல வேண்டியதில்லை. அப்பெரியார் புதிய பாஷையைக் கற்றதின் பயனாக ஒரு பரிசில் பெற்றார். அது எவ்வாறெனின், ஸ்பெயின் தேசத்துக் கப்பல் ஒன்றைக் கிளாஸ்கோ நகரத்தின் கம்பெனி ஒன்று பிடிக்க நேர்ந்தது. அக்கப்பலில் சில கடிதங்கள் காணப்பட்டன. அவை அத்தேசத்துப் பாஷையில் எழுதப்பட்டிருந்தமையால், இங்கிலாந்து தேசத்தில் அப்பாஷை அறிந்தார் ஒருவரும் அப்போது இல்லை. ஆதலால், மன்ரோ துரை அக்கடிதங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தமையால், அவர் அறிவை வியந்து, கம்பெனியார் அவருக்கு மேற்கூறிய பரிசில் ஒன்று அளித்தார்கள். இப்பரிசை அவர் தம் அருமை அன்னையாருக்குத் தம் வாழ்நாட்களில் தாம் முதலில் சம்பாதித்த அரும் பொருளாக எண்ணி அளித்துவிட்டார். அவ்வம்மையார் தம் செல்வப் புதல்வன் அன்பை மிகவும் பாராட்டி மகிழ்ச்சியுற்றார்கள்.

மன்ரோ பெருந்தகையார் ஒரு போர்வீரனுக்கும், ஒரு தேசத்தை ஆட்சி செய்பவனுக்கும் உரிய ஆற்றல்களை இயற்கையிலேயே பெற்றிருந்தார். அவர் உயரமான தோற்றமும், திடமான தேகமும் பெற்றிருந்தமையால், தேகப்பயிற்சியின் சம்பந்தமான ஆடல்களிலும், பந்தயங்களிலும் மிகச் சிறந்து விளங்கினார். அவர் தம் விடுமுறை நாட்களை இயற்கை அழகில் சிறந்த ஒரு கிராமத்தில் மீன் பிடிப்பதிலும், நீரில் நீந்துவதிலும் இன்பமாகக் கழித்து வந்தார்.

1777-ஆம் ஆண்டில் மன்ரோ துரையின் தந்தையார் ஒரு கம்பெனியில் தம் புதல்வர்க்கு ஒரு கிளார்க்குவேலை சம்பாதித்துக் கொடுத்தனர். சிறிதுகாலம் சென்றதும், பல நியா

யாதிபதிகள் மன்ரோவின் ஆற்றல்களை அறிந்து, அவரை இராணுவத்தில் அமருமாறு நன்மதி கூறினார்கள். மன்ரோ துரைக்கும் தாம் ஒரு வீரனாக அமர்ந்து உத்தியோகம் செய்யப் பேரவா இருந்தது. ஆனால், அவர் தந்தைக்கு அது சிறிதும் பிரியமில்லை. ஆதலால், அவர் மன்ரோ துரைக்கு இராணுவத்தில் உத்தியோகம் செய்ய அனுமதி அளிக்கவில்லை. மன்ரோ துரைக்கு அப்போது மனவருத்தம் உண்டாயிற்று. இருப்பினும், அவர் தம் தந்தையின் விருப்பத்திற்கு மாறாக நடக்க மனம் துணியவில்லை.

அடுத்த ஆண்டில் மன்ரோவின் தந்தைக்கு எதிர்பாராத கஷ்டம் வந்துவிட்டது. அதாவது, அவருக்கு வந்திருந்த வருவாய் நின்றுவிட்டது. ஆதலால், வறுமை என்னும் பேய் அவர் இல்லத்தில் குடிபுக ஆரம்பித்தது. அப்போது அவருக்குப் பணம் சம்பாதிக்கும் வழி ஒன்றும் தோன்றாமையால், அவர் தம் அருமைத் தவப்புதல்வராகிய மன்ரோவை இந்தியாவில் ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரிடத்தில் ஒருசிறியவேலையைப் பார்க்க மனந்துணிந்து அனுப்பிவிட்டார். மன்ரோ தம் தந்தையாரின் விருப்பத்தின்படி மனமகிழ்வுடன் 1780-ஆம் ஆண்டு, ஜனவரிமாதம் 15-ஆம் தேதி சென்னைக்கு வந்துசேர்ந்தார்.

அவர் தம் இனிய அன்னையாருக்கு ஒரு களிததும்பும் கடிதம் வரைந்து அனுப்பினர். அக்கடிதத்தில் அவருடைய பெருந்தன்மையும், பணிவும், அடக்கமும், நகைச்சுவை ததும்ப எழுதும் ஆற்றலும், வாழ்க்கையின் சிறுமையும் புலனாவதால், அது படிப்போர்க்கும் உவகை அளிக்குமென்பதில் ஐயமின்று. அவ்வருமைக் கடிதம் கீழ்வருமாறு:—

"அருமை அன்னையே! நான் ஏறிவந்த கப்பல்சென்னைமா நகரைச்சேர்ந்ததும், கப்பலுக்குள்ளேயே அநேக இந்திய வேலைக்

காரர்கள் வந்து விட்டார்கள். அவர்கள் அனைவரும் வெண்மையான நீண்ட ஒரே அங்கியைத் (Gown) தரித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் மிகவும் ஒழுங்காகவும், கம்பீரமாகவும் காணப்பட்டான். அவன் தன் கரத்தில் ஒரு கற்றைக் கடிதங்கள் வைத்துக்கொண் டிருந்தான். அவற்றை அவன் என்னிடம் அளித்து, என்னை அவைகளை வாசிக்குமாறு வேண்டிக்கொண்டான். அவை ஒவ்வொன்றும் அவன் முன்னர் வேலை செய்திருந்த எஜமானர்கள் அவன் வேலையின் திறத்தையும், நன்றி விசுவாசத்தையும் சிறப்பித்து எழுதித் தந்த உறுதிச் சீட்டுகளாக (Certificates) இருந்தன. அம் மனிதன் அயல் நாட்டார் தங்களுக்கு வேண்டிய சாமான்களை அந்நாட்டில் எவ்விடங்களில் பெறுவதெனத் தெரியாமல் திகைப்பது வழக்கமென்றும், தானே எனக்கு வேண்டிய எல்லாச் சாமான்களையும் ஒரு கஷ்டமும் இன்றி வாங்கித் தருகின்றேன் என்றும் கூறினன். அதுவன்றியும், அவனை நான் என் வேலையாளாக வைத்துக்கொண்டு, எனக்கு எவ்வளவு சம்பளம் அவனுக்குக் கொடுப்பது நியாயமென்று தோன்றுகின்றதோ அதையே கொடுக்கலாம் என்றும் மிக மரியாதையாகவும், வணக்கமாகவும் உரைத்தான். அவன் தோற்றமும், நடையும் எனக்கு மகிழ்ச்சியை விளைவித்தமையால், அவனையே என்வேலையாளாக வைத்துக்கொள்ள நானும் மிக விரும்பினேன். பின்னர் அவன் தான் கடற்கரைக்குச் சென்று, வேறொரு பணியாளையும் அழைத்துக் கொண்டு வருகின்றேன் என்றும், அவன் நாட்டில் ஒரு துரைமகன் இரண்டு பணியாட்களுக்குக் குறையாமல் வைத்துக் கொள்ளுதல் அத்தியாவசியம் என்றும் இயம்பினன். பின்னர் அவன் அழுக்கு ஆடைகளைக் கொண்டுபோய்ச் சுத்தமாக்கித் தரு

வதாகவும் கூறினன். நான் சில நாணயங்களை வைத்துக் கொண்டு, சிறிது தொகை பணம் அவனிடம் அளித்தேன்.''

"இரண்டு தினங்கள் கழிந்த பின்னர், நான் கடற் கரைக்கு வந்தபோது, மேற்கூறிய வேலையாள் ஆறு வேறு பணியாட்களுடன் எனக்காகக் காத்துக் கொண்டிருந்தான். அவர்கள் என் சாமான்களைக் கேப்டன் ஹெண்டர்சன் வீட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்த்தனர். நான் அன்று முன்னதாகவே படுத்து உறங்கிவிட்டேன். என் கப்பலில் என்னுடன் வந்த போர்வீரர்களை விட்டு நீங்கி இருத்தலே எனக்கு மிகக் களிப்பாகத் தோன்றிற்று."

"அடுத்த நாள் காலையில் நான் உடை தரித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் என் வேலைக்காரன் எனது அறைக்கு வந்தான். அவன் என்னையும், எனது படுக்கையையும் வியப் பாக உற்று நோக்கினன். பின்னர் அவன் என் அறையில் பாதி பாகத்தை அடைத்துக்கொண்டிருந்த என் பெட்டி திறக்கப்பட்டிருத்தலைக் கண்டான். அவன் அப்பெட்டிக்குள் இருந்த பொருள்களைக் கூர்ந்து கவனித்துத் தன் தலையை ஆட்டிக்கொண்டான். நான் அவன் வியப்பிற்குக் காரணம் யாதென வினவினேன். அவன் அதைக் கேட்டு, "ஐயா! இந்நாட்டில் தாங்கள் கொண்டு வந்துள்ள பொருள்கள் பயன்படமாட்டா. தங்கள் படுக்கையும், உடைகளும், கம்பளமும் சூடான இந்நாட்டிற்குத் தகுந்தவையாகா. தாங்கள் ஒரு மேஜையும், சில நாற்காலிகளும், ஒரு புதிய படுக்கையும் வாங்கிக் கொள்ளவேண்டும்'' என்று கூறினன். அவன் கூறியதைக் கேட்டதும், எனக்கு மனவருத்தம் உண்டாயிற்று. ஏனென்றால், நான் மிகப் பத்திரமாகப் பாதுகாத்து வந்த என்

ஆடைகள் அனைத்தும் ஒரு சிறிதும் பயன்படமாட்டா என்று நான் முன்னர் அறிந்தேனில்லை. அறிந்திருந்தால், நான் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கு அவற்றைப் பாது காத்து வந்த கஷ்டத்தை அடைந்திருக்க மாட்டேனே என்று எண்ணினேன்.''

''பின்னர் அவ்வேலைக்காரன் என் பெட்டியிலுள்ள உடைகளையெல்லாம் பரிசோதித்து, அவை ஒன்றும் பயன்படமாட்டா என்று சொல்லி விட்டான். எனக்குப் புதிய உடைகள் ஒரு தையற்காரன் தைத்துக் கொடுக்கும் வரையில், மூன்று நான்கு உடைகளை மாத்திரம் வைத்துக் கொண்டேன். அப் பணியாள் ஐரோப்பியர்கள் தங்கள் தேசத்துச் சாமான்களையெல்லாம் இந்திய தேசத்திற்கு வந்தால், இங்குள்ள வேலைக் காரர்களுக்குப் பரிசாக அளித்து விடுதல் வழக்கமென்றும், ஆனால், அவ்வாறு தனக்கு என் சாமான்கள் பரிசாக வேண்டியதில்லையென்றும், அவற்றைத் தன்னால் கூடிய வரையில் அதிக விலைக்கு விற்றுக்கொடுக்கின்றேன் என்றும் சொன்னான். நான் அவன் கூறியபடியே செய்யச் சம்மதித்தேன். பின்னர் அவன் கேட்டவண்ணம் மேஜைக்கும், நாற்காலிகளுக்கும், ஆடைக்கும் நான்கு கினிகளும், படுக்கைக்கு, இரண்டு கினிகளும் அவனிடம் கொடுத்து அனுப்பினேன். அவன் சென்றதும், நான் ஒரு சாமானும் இல்லாமல் வெறுங்கையோடு இருந்து கொண்டு, எனக்குத் தையற்காரன் எவ்விதமாக உடைகள் தைத்துக் கொடுப்பானோ என்று பல எண்ணங்கள் எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால்,என் எண்ணங்களெல்லாம் பாழாகி விட்டன. ஏனென்றால், அவ்வேலைக்காரனுக்கு என்ன எதிர் பாராத கஷ்டம் வந்துவிட்டதோ தெரியவில்லை. அவன் என்னிடம் திரும்பி வரவேயில்லை.''

"எனக்கு நேர்ந்த கதியை நான் என்னென்று கூறுவேன்? அநேக மாதங்களாக நான் வாரத்திற்கு இரண்டு, மூன்று முறைகள்தான் வெளியே செல்ல இயன்றது. மற்றைய வேளைகளில் எங்கும் செல்ல வழியில்லாமல் நான் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தேன். அவ்வாறு இரண்டு, மூன்று முறைகள் வாரத்தில் வெளியே சென்று, என் நண்பர்களைப் பார்த்துக்கொண்டு வந்தேன். டாக்டர் கோனிக் என்பவர் இராஸ் என்பவருடன் வசிக்க வந்ததிலிருந்து, நான் பெரும்பாலும் என் காலத்தை அவர் வீட்டிலேயே கழித்தேன். அச்சமயங்களில் பலவித மலர்களின் அழகுகளையும், அமைப்புக்களையும் பார்த்து நான் எனக்குள்ளேயே இன்பம் துய்ப்பது வழக்கம்"

"விடியற்காலையில் எழுந்து நான் என் உடைகளைச் சோதித்து, எவ்வுடை எனக்குப் பொருத்தமாகவுளதோ அதைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு, அதற்கு வேண்டிய தையல் வேலையைக் காலைப்போஜனம் அருந்தும் வரையில் செய்துகொண் டிருப்பேன் பின்னர் நான் என் சமையற்காரன் கணக்குகளைப் பரிசோதித்து, அவன் என்ன பதார்த்தங்கள் அன்று செய்யவேண்டுமென்று அவனுக்குச் சொல்லிவிடுவேன். அதன்பின்னர்ச் சாயங்காலம் வரையில் புத்தகங்கள் வாசிப்பதைவிட எனக்கு வேறு வேலை கிடையாது. மாலைப்போது வந்ததும், வீட்டின் மெத்தையின்மீதேறி, நான் படித்த வானசாஸ்திரத்தில் குறிப்பிட்ட நட்சத்திரங்களை உற்று நோக்கிக்கொண் டிருப்பேன்."

"சென்னைமா நகரில் நான் உத்தியோகம் செய்துகொண் டிருந்தபோது எனக்கு மாதச்சம்பளம் எட்டு வராகனாகும். அத்தொகையில் இரண்டு வராகன் என் வேலைக்காரனுக்கும்,

ஒன்று என் சமையற்காரனுக்கும், ஒன்று என் வண்ணானுக்கும் நான் கொடுத்து வந்தேன். மீதியிருந்த நான்கு வராகனைக் கொண்டுதான் நான் என் செலவுகளையெல்லாம் பார்த்துக் கொள்ள வேண்டியவனாக இருந்தேன். சென்னைமாநகரில் எல்லாச் சாமான்களும் விலை அதிகம். அத்தகைய நகரில் நான்கு வராகன்கள் என் வாழ்க்கைக்குப் போதும் போதாவென்று நான் சொல்லவேண்டியதில்லை.''

"எவ்வளவு சிக்கனமாகக் காலத்தைக் கழித்த போதிலும், நான் ஆறு மாதங்கள் கழிந்த பின்னர்த்தான், இரண்டு மூன்று புதிய உடைகள் தைத்துக்கொண்டேன். நான் அங்கிலையில் இருந்தபோதிலும் இராஸ் என்பவரை ஒன்றும் அளிக்கும்படி கேட்கவில்லை. ஹெண்டர்சன் நான் சென்னைமா நகரில் இருந்தவரையில் எனக்கு எவ்வித உதவியும் செய்யவில்லை. ஆனால், இராஸ் நான் கர்னல் பெயில்லியின் சேனையில் ஒருவனாக அமர முயற்சி செய்தார். ஐதர் அலி சேனை கர்னாடகம் வந்து சேர்ந்ததும், நான் விரும்பியபடி எனக்கு மேற்கூறிய பெயில்லியின் சேனையில் உத்தியோகம் கிடைத்தது.''

அதிகாரம் இரண்டு.

வாய்மையின் சிறப்பு.

சர் தாமஸ் மன்ரோ சென்னைமாநகருக்கு வந்தபோது, அந்நகரின் கவர்னரும், அவருடன் இருந்த அங்கத்தினர்களும் ஒற்றுமையின்றித் தங்கள் காரியங்களை நடத்தி வந்தமையால், ஐதர் அலிக்கும், ஐதராபாக்கத்து நவாப்பிற்கும் தங்கள்

அதிகாரத்தை விருத்தி செய்து கொள்ளுதற்கும், ஆங்கிலேயர்களை அடியோடு இந்தியாவை விட்டுத் துரத்திவிடுதற்கும் எண்ணம் உதித்தது. அவ்விருவரும் மகராஷ்டிரர்களைத் தங்கள் வசப்படுத்திக்கொண்டு ஆங்கிலேயர்களைத் தாக்கவேண்டுமென்றும் நினைத்தனர். ஆனால், ஹேஸ்டிங்ஸ் துரை தம் நுட்ப புத்தியைக் கொண்டு ஐதராபாக்கத்து நைசாமையும், மகராஷ்டிரர்களையும் தம் வசப்படுத்திக் கொண்டார்.

மன்ரோதுரை ஆங்கிலேயர் ஐதர் அலியினிடம் போர் புரிந்தபோது இராணுவத்தில் அமர்ந்திருந்தமையால், தம் வேலையை மிகச் சமர்த்தாகக் கவனித்துத் தம்மேல் உத்தியோகஸ்தர்களுக்கு மிகவும் உதவியாக இருந்தார். அவர் தம் வரையில் ஆங்கிலேய அரசாட்சி நிலைக்குமாறு மிக உண்மையாகவும், ஊக்கமாகவும் உழைத்தார். ஆனால், அவருக்கு இராணுவத்தில் பெரிய உத்தியோகம் அப்போது இல்லாமையால், தம் பேரறிவையும், பேராற்றலையும் காட்டுவதற்கு வழியில்லாமல் போயிற்று. மன்ரோ மிக புத்திநுட்பம் உடையவராதலால், இராணுவத்தில் அமர்ந்திருந்த பல சேனாதிபதிகள் போரில் காட்டிய சாமர்த்தியத்தையும், குற்றத்தையும் உள்ளவாறு அறிந்ததுமன்றி, மிக உயர்ந்த பதவியிலிருந்த கவர்னர், போரின் சம்பந்தமாக அவ்வப்போது விதித்த கட்டளைகள் பொருத்தமுடையனவா அல்லவா என்பதைச் சரியாக உணரும் சாமர்த்தியமும் பெற்றிருந்தார். ஆங்கிலேயர்கள் கஞ்சம், விசாகப்பட்டணம், கோதாவரி, கிருஷ்ணா ஆகிய இந்த ஜில்லாக்களை நைசாமைப் பயமுறுத்தித் தங்கள் இராச்சியத்தோடு சேர்த்துக்கொண்ட செய்கையைக் குறித்துக் கீழ் வருமாறு அவர் எழுதியுள்ளார். அதிலிருந்து அவர் எத்துணைய சிறந்த அறிவும், உண்மையும், நியாயமும் உடையவ

ரென்றும், எத்துணைய தைரியம், பெருந்தன்மை, பெருங் குணம் உடையவரென்றும் நாம் ஒருவாறு அறியலாகும். அவர் எழுதியதாவது:—

“ஐதர்அலி கர்ணுடகத்தின்மீது படையெடுத்த பின்னர் ஆங்கிலேய கம்பெனியார் மற்ற ஜில்லாக்களின் பொருட்டுக் கட்டவேண்டிய கப்பத்தைக் கட்டாமையால், நைசாம் குண்டூர் மாகாணத்தைத் தம் வசமாக்கிக்கொண்டார். கம்பெனியார் அச்சமயம் அவரை அம்மாகாணத்தைத் திருப்பிக் கொடுக்குமாறு கட்டாயப்படுத்தச் சக்தியற்றவர்களாக இருந்தமையால், மௌனமாக இருந்தனர். ஆதலால், நைசாம் அதைப் பல ஆண்டுகளாகத் தம் வசத்தில் வைத்துக் கொண்டிருந்தனர். சர் ஜான் மெக்பர்சன் ஜான்சனை ஐதராபாக்கத்திற்கு அனுப்பி நைசாமை மேற்கூறிய மாகாணத்தைத் திருப்பிக்கொடுக்குமாறு கேட்டபோது, அவர் அதைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. பின்னர், கம்பெனியாரின் நிலைமை ஒழுங்காக இருந்தபோது, அவர்கள் நைசாமைப் பயமுறுத்தியேனும் தங்கள் சொந்த சொத்தாகக் கருதிய மேற்கூறிய மாகாணத்தைத் திருப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தனர். அவர்கள் லார்ட் காரன் வாலிஸ் துரையை நைசாமிடம் தாங்கள் கட்டவேண்டிய கப்பத்தைக் கட்டிவிடுகின்றோம் என்றும், பின்னர், ஒழுங்காகக் கப்பம் கட்டிக்கொண்டு வருகின்றோம் என்றும், ஆதலால், அவர் குண்டூர் மாகாணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்றும், அதற்கு இணங்காமற் போனாலும், அல்லது அம்மாகாணத்தை அளிக்கத் தாமதமானாலும், பதினைந்து தினங்களில் அவர் இராச்சியம் தாக்கப்படும் என்றும் தெரிவிக்குமாறு கட்டளை விதித்தார்கள்.

“1788-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 9-ஆம் தேதி கர்னல் எடிங்டன் தகுந்த சேனையோடு குண்டூரைச் சேர்ந்திருந்தார். கேப்டன் கென்னவே கல்கத்தா நகரிலிருந்து வந்து நைசாமிடம் ஒரு கடிதம் அளித்தார். கம்பெனியார் அக்கடிதத்தில் நைசாம் தங்களுக்குச் சொந்தமான மாகாணத்தைக் கொடுத்துவிட வேண்டுமென்றும், தாங்கள் செலுத்தவேண்டிய பழைய கப்பத்தையெல்லாம் செலுத்திவிட வாக்குறுதி செய்கின்றோம் என்றும், பின்னர் கப்பத்தை ஒழுங்காகச் செலுத்திக்கொண்டு வருகின்றோமென்றும், அவர் தாங்கள் குறித்த காலத்திற்குள் தங்கள் மாகாணத்தைத் திருப்பி அளிக்காமற்போனால் அவர்மீது படையெடுப்போமென்றும் எழுதியிருந்தனர். நைசாம் அச்சமயம் தமக்கு உதவிபுரிபவர் ஒருவரும் இல்லாமையாலும், போராற்றல் வாய்ந்த ஆங்கிலேயர்களைத் தாக்கத் தமக்குப் போதிய ஆற்றலும், வசதியும் இன்மையாலும், கம்பெனியார் விருப்பத்திற்கு இணங்கினர். அவர் இணங்கியபோதிலும், கம்பெனியாரின் கொடுமையையும், அநியாயத்தையும் நோக்கி அவர், “கம்பெனியார் தாங்கள் கட்டவேண்டிய கப்பத்தை முதலில் கட்டிவிட்டுப் பின்னர்த் தங்கள் மாகாணத்தைக் கேட்பது நியாயமாகும். அவ்வாறன்றி, அவர்கள் திடுக்கெனத் தங்கள் மாகாணத்தை நான் கொடுக்கவேண்டுமென்று கேட்பது நியாயமாகாது. அவர்கள் இனிமேல் தங்கள் கப்பத்தை ஒழுங்காகச் செலுத்திக்கொண்டு வருவார்கள் என்று நம்புதற்கு எனக்கு என்ன ஆதாரம் இருக்கின்றது” என்று கூறினர்.

“உண்மையாகச் சொல்ல வேண்டுமானல், கம்பெனியார் முதலில் தாங்கள் கட்டவேண்டிய கப்பத்தைக் கட்டிவிட்டுப் பின்னர்த்தங்கள் இராச்சியத்தைக் கேட்பது தான் ஆண்மைத்

தனமாகும்; அதுதான் மரியாதை உடையதும் ஆகும். அவர்கள் அவ்வாறு செய்யாமையால், ஆங்கிலேயர்களின் அருமைப் பெயர் இழிவுற்றது. அவர்கள் தங்கள் தேசத்தில் நடந்த துர்அதிர்ஷ்டமுள்ள போரினால் தங்கள் வீரத்தன்மையை ஒருவாறு இழந்திருந்தமையால், இத்தேசத்திலும் தங்களை மறந்து, ஆண்மைத்தனமுள்ள ஏற்பாட்டைச் செய்யாமல், இழிந்த ஏற்பாட்டைச் செய்யத் துணிந்தனர்போலும்! அவர்கள் ஒரு கபடமுமின்றி வெளிப்படையாக நைசாமைக் கேட்கவேண்டிய முறையில் கேட்டிருந்தால், அவர்களுக்கு ஒருவித தீமையும் நிகழ்ந்திராது என்பது திண்ணம். ஆனால், தாங்கள் கட்டவேண்டிய கப்பத்தைக் கட்டிவிட்டால் நைசாம் அப்பணத்தைத் தங்கள்மீது படையெடுப்பதற்கே உபயோகப் படுத்துவார் என்றும், தங்கள் இராச்சியத்தைத் திருப்பிக் கொடுக்கமாட்டாரென்றும் அவர்கள் பயந்தமைக்கு ஒரு காரணமும் இல்லை. ஏனென்றால், மொத்தம் கட்டவேண்டிய தொகை மேற்கூறிய மாகாணத்தில் ஒரு வருடத்தில் வரும் வருமானத் தொகையின் கால்பாகத்திற்குச் சமானம் ஆகாது. அத்தொகை இன்னும் பத்துப்பாகம் அதிகமாக இருந்தாலும், நைசாமுக்குப் போர் புரிவதற்கு ஒரு சிறிதும் பயன்பட்டிராது. ஏனென்றால், அவர் துரைத்தனம் ஒழுங்குடையதுமன்று, வன்மையுடையதுமன்று. அதுவுமன்றி, அவருக்குத் தகுந்த சேனை என்பதும் இல்லை. ஒரு அரசன் வெறும் பணத்தை வைத்துக்கொண்டு போர்புரியும் தொழிலில் பேராற்றலும், பெருநுட்பமும், பேரறிவும் வாய்ந்த பகைவரை எவ்வாறு வெல்ல முடியும்? நைசாமுக்குத் தாம் கம்பெனியாரை எதிர்ப்பதில் ஒரு பயனும் உண்டாகாது என்று நன்றாகத் தெரியும். அவ்வாறு அவர் எதிர்த்தால்

கம்பெனியாருக்குத் தாங்கள் செலுத்த வேண்டிய கப்பத்தைச் செலுத்தாமல் இருப்பதற்குத் தகுந்த சாக்குக் கிடைக்குமென்றும் அவருக்குத் தெரியும். ஆதலால், அவர் கம்பெனியாருக்கு அவ்வசதியைக் கொடுக்கவில்லை; இது மிக அறிவுள்ள செய்கையாகும். அதுவுமன்றி, கம்பெனியார் குண்டூரைக் கேட்பது ஒருவிதத்தில் நியாயந்தான் என்று அவர் எண்ணியது அவர் கௌரவத்திற்கு அழகாயிற்று. கேப்டன் கென்னுவே என்பவர்க்கு அவர் அளித்த பதில் களங்கமற்றதாகவும், அறிவுள்ளதாகவும் இருக்கின்றது. அப்பதில் ஒரு அரச குமாரனுக்குரிய உயர்ந்த நடையில் வரையப்பட்டிருப்பதன்றி, தமக்கு அகாரணமாக இடையூறு விளைவித்த ஒரு பகைவனைத் தாம் திருப்பித் தாக்குவதற்குச் சக்தியற்றிருப்பதை நோக்கித் தாம் மிகவும் வருத்தமடைவதையும் காட்டுகின்றது. அதனைப் படித்துப் பார்ப்போர் உள்ளம் உருகும் என்பதில் ஐயமில்லை. அதில் ஒரு மகத்தான மன்னன் தன் கௌரவத்தைச் சமயத்தை நோக்கி விதியின்றி இழக்க நேர்ந்ததைக் குறித்தும், கம்பெனியார் கொண்டுவந்த ஏற்பாட்டிற்குத் தாமே நட்பின் பொருட்டுச் சம்மதித்ததாகச் சொல்லப்பட்டிருத்தலைக் கண்டும் தமது கோபத்தைத் தணித்துக்கொள்ள வேண்டியிருத்தலைக் குறித்தும் எழுதப்பட்டுள்ளன.''

ஆங்கிலேயர் ஐதர்அலியினிடமும், திப்புவினிடமும் போர் புரிந்தகாலம் வரையில் மன்ரோ தமக்குரிய இராணுவ உத்தியோகத்தை மிகச் சமர்த்தாகப் பார்த்துத் தம் மேல் உத்தியோகஸ்தர்களின் சிறந்த அபிப்பிராயத்தைப் பெற்றார். அப்போர்கள் நடந்த பின்னர் சிற்சில ஆண்டுகள் வரையில் மன்ரோவின் உத்தியோக முறையின் சம்பந்தமாக ஒரு விசேஷ

மும் சொல்லுவதற்கில்லை. அவர் வாழ்க்கை அப்போது அமைதியாக இருந்தமையால், தம் அரிய காலத்தை வீணுக்காமல், இந்துஸ்தானி பாஷையையும், பெர்ஷியன் பாஷையையும் மிக ஊக்கத்துடன் கற்று, அப்பாஷைகளில் எழுதப்பட்டுள்ள கிரந்தங்களையும் வாசித்து இன்புற்றூர். அவர் கிளாஸ்கோ நகரிலிருந்த தம் நண்பர் ஒருவருக்கு ஒரு கடிதம் எழுதினூர். அதில் அவர் பெர்ஷியா தேசத்து நூலாசிரியர்களில் சிலர் எழுதிய விஷயங்களின் குற்றங்களையும், குணங்களையும் வரைந்திருந்தார். அதனுல் அவர் எவ்வளவு விரைவில் பிறபாஷைகளின் நுணுக்கங்களை அறிந்து கொள்ளும் திறமை வாய்ந்தவர் என்பது விளங்குகின்றது. மன்ரோ உத்தியோக வழியில் நாளுக்குநாள் மேல் நிலையை அடைந்து கொண்டுவந்ததல்லாமலும், இந்திய துரைத்தனத்தார் போரின் சம்பந்தமாகச் செய்துவந்த காரியங்களின் அருமைகளையும், குற்றங்களையும் நுணுகி ஆராய்ந்துகொண்டும், ஐரோப்பா கண்டத்தில் ஆங்கிலேயர்கள் இராஜாங்க சம்பந்தமாகச் செய்த காரியங்களின் குணங்களையும், குற்றங்களையும் இந்தியாவிலிருந்துகொண்டே சரியாக அறிந்துகொண்டும் இருந்தார்.

அதிகாரம் மூன்று.

வறுமையின் கொடுமை.

மன்ரோ துரை இந்தியாவில் தாழ்ந்த உத்தியோகம் செய்துகொண்டிருந்தபோது, தம் வாழ்க்கையின் தன்மை எவ்வாறு இருந்ததென்றும், வறுமை தம்மை எவ்வாறு வாட்டியதென்றும் படிப்போர் உள்ளத்தை உருக்குமாறு

தம் சகோதரிக்கு ஒரு கடிதம் வரைந்திருந்தார். அக்கடி தம் கீழ்வருமாறு:—

"என் அருமைச் சகோதரியே! இந்தியாவிலுள்ள மக்கள் மிக ஆடம்பரமாகவும், கம்பீரமாகவும் தங்கள் வாழ்க்கையைப் பெருங் களிப்போடு கழிக்கின்றார்கள் என்று நம் தேசத்தார் கொண்டுள்ள அபிப்பிராயம் உனக்குத் தெரிந்ததே. அது எவ்வளவு உண்மையென்று நீ அறியும்பொருட்டு, நான் இப்போது தங்கியுள்ள அறையில் சிறிதுநேரம் நீ தங்கியிருக்கக் கூடுமானால், மிகவும் களிப்படைவேன். ஏனென்றால், அப்போது தான் உனக்கு நம்மவர்கள் கொண்டுள்ள கருத்து எவ்வளவு தவறென்று தெரியவரும். இங்கு உத்தியோகம் செய்ய வந்துள்ள நம்மவர்கள் வாழ்க்கையும் மிகச் சிறந்ததென்றே நீ எண்ணியிருக்கலாம். அதுவும் முற்றிலும் தவறே. முக்கியமாக நீ என் வாழ்க்கை மிக உயர்ந்ததென எண்ணிக்கொண்டிருப்பாய் என்பதில் ஐயமில்லை. நான் வெளியே போகும்போது யானையின்மீதுதான் அமர்ந்து செல்வேனென்றும், எனக்குப் பணிபுரியும் வேலையாட்கள் அநேகர் இருப்பார்களென்றும், என் தேகமுழுவதும் விலையுயர்ந்த பட்டாடைகளையே நான் தரித்துக்கொண்டிருப்பேன் என்றும், நான் ஒரு சோபாவில் அமர்ந்து, பல பணியாட்கள் எனக்கு விசிறிக் கொண்டிருக்க, மென்மையான இன்ப சங்கீதத்தைக் கேட்டுக் கொண்டே என்காலத்தைக் கழிக்கின்றேன் என்றும் நீ நினைக்கலாம். ஆனால், நீ எண்ணிக் கொண்டிருப்பது எவ்வளவு தவறென்று நான் கீழே எழுதியுள்ள விஷயங்கள் நன்கு விளக்கும்."

"நான் மேலே போட்டுக்கொள்வது ஒரு பழைய மேல் சொக்காயும் (Coat) உள்ளே போட்டுக் கொள்வது ஒரு

கிழிந்த உட்சட்டையும் (Shirt) ஆகும். எனக்குப் படுக்கக் கட்டில் கிடையாது. ஒரு கான்வாஸ் துணியையும் நான்கு சிறு தடிகளையும் கொண்டு ஒருவிதமான படுக்கை நான் செய்து கொண்டேன். எனக்குத் தலையணை கிடையாது. ஏதேனும் ஒரு புத்தகத்தையாகிலும் அல்லது ஒரு பையையாகிலும்தான் நான் தலையணையாக உபயோகித்துக் கொண்டேன். நான் இந்தியாவிற்கு வருவதற்குமுன் எனக்கு உண்மையில் பசி, தாகம், களைப்பு, வறுமை என்பவற்றில் அனுபவம் கிடையாது. ஆனால், நான் இங்கு வந்த பிறகு அவற்றில் நல்ல அனுபவம் அடைந்தேன்; முதல் மூன்றும் என்னை அடிக்கடி துன்புறுத்தும்; நான்காவதாகிய வறுமையோ என்னை எப்போதும் விட்டு நீங்காத் துணையாயிற்று. என் சகோதரன் அலெக்சாண்டர் வங்காளத்திற்குப் போகும் போது எனக்கு ஒரு கட்டில் கொடுத்துச் சென்றான். அப்போதுதான் நான் ஒரு தலையணையும், ஒரு சமுக்காளமும் வாங்கிக்கொண்டேன். இவ்வளவு சௌகரியம் கிடைத்துவிட்டதென்று நான் செருக்குற்று, மேஜைக்கு வேண்டிய இரண்டு கரண்டிகளும், காப்பித்தண்ணீரும், தேத்தண்ணீரும் குடிக்க உபயோகப்படும் இரண்டு கரண்டிகளும், வேறு ஒரு நாற்காலியும், ஒரு மேஜையும், இரண்டு மேஜைத் துணிகளும் வாங்கிக்கொண்டேன். ஆனால், மூன்று மாதத்திற்குள் என் கரண்டிகளில் மூன்றும், ஒரு நாற்காலியும் உடைந்துவிட்டன. எனக்கு இரண்டு நாற்காலிகள் மொத்தம் இருந்தன. அவற்றில் ஒன்றைத்தான் நேபியர் துரையின் துணைவர்களில் ஒருவர் உடைத்துவிட்டார். இந்த நஷ்டம் மறுபடியும் என்னைத் தலையெடுக்க விடவில்லை. நான் வெளியே செல்லும்போது ஒரு கிழக்குதிரையின் மீது ஏறிச் செல்லு

வேன். அது சரியாகப் போவதில்லையாதலால், நான் முக்கால் வழித் தூரம் நடந்தே செல்லுவேன். அக்குதிரையை எவராகிலும் விலைக்குக் கேட்டிருந்தால், அதை விற்றுவிட்டிருப்பேன். ஆனால், அதைக் கேட்பார்தான் ஒருவரும் இல்லை. நான் சூரிய உதயத்திலிருந்து சூரியன் அஸ்தமிக்கும் வரையில் நடப்பது வழக்கம். அப்போது எனக்குச் சிற்றுண்டியும், நற்பானமும் கிடைப்பதில்லை. வெறும் தண்ணீரையே நான் அருந்திக் கொண்டிருப்பேன். இந்த விதமாக நான் கால் நடையாகவே சென்று விசாகப்பட்டணத்திலிருந்து மதுரைவரையில் உள்ள அநேக இடங்களைப் பார்த்திருக்கின்றேன். அது சுமார் எண்ணூறு மைல்கள் இருக்கும்.

வேலூரிலுள்ள என் வீட்டில் ஒரு கூடமும், ஒரு படுக்கை அறையுந்தான் உண்டு. கூடத்தில் ஒரு பழைய கட்டிலும், ஒரு சமுக்காளமும், ஒரு தலையணையும் இருந்தன. இன்னும் அவ்வறையில் புத்தகங்கள் அடங்கிய ஒரு பெட்டியும், சாமான்கள் வைத்துக்கொள்ளும் இரண்டு தகரப்பெட்டிகளும் இருந்தன. ஒரு பெட்டியில் சுமார் ஒரு டஜன் ஆடைகள் நான் உடுத்திக்கொள்ள இருக்கும். இன்னொரு பெட்டியில் ஐந்தாறு தட்டுகளும், கத்திகளும், கவர்முட் கருவிகளும் இருக்கும். இச்சாமான்களோடு நான் ஆறு வேறு கரண்டிகளும், இரண்டு மெழுக்கு வத்திகளும் ஐரோப்பாவிற்குப் போய்க்கொண்டிருந்த ஒரு குடும்பத்திலிருந்து விலைக்கு வாங்கிக்கொண்டேன். மாதத்தில் ஏறக்குறைய மூன்றுமுறை நான் விருந்து வைப்பேன். அச்சமயங்களில் என் வீடு மிக உயர்வாகத் தெரியும். ஏனென்றால், விருந்தாளிகளாக வரும் ஒவ்வொருவரும் தாங்களே ஒவ்வொரு நாற்

காலியும், ஒவ்வொரு தட்டும் என் வீட்டிற்கு எடுத்துக் கொண்டு வருவார்கள்.''

"என் அற்புதச் சாமான்களின் வர்ணிப்பை நீ அறிந்து கொண்டமையால், இனி நான் எவ்வாறு என் அருமைக் காலத்தைக் கழிக்கின்றேன் என்று நீ அறிய விரும்புவாய் என்று நம்புகின்றேன். அரேபியா தேசத்துச் சரித்திரங்களில் நாம் படித்த அதிர்ஷ்டவரசனான அல்லாவுதீன் சாயபு நான் அல்ல. எனக்குப் பணியாட்களும் சங்கீத வித்துவான்களும், யானைகளும், மற்றைய அமைப்புக்கள் ஒன்றும் இல்லை. நான் காலை ஏழுமணிக்கு என் காலைப்போஜனத்தை முடித்துக் கொள்ளுவேன்; பிறகு வெளியே தனிமையாகச் சென்றுவிடுவேன். எனக்கு அப்போது வண்டியும் கிடையாது, குதிரையும் கிடையாது; கால்நடையாகத்தான் செல்லுவேன்; தினந்தோறும் 10 மணிக்குள் வீட்டிற்குத் திரும்பி வந்துவிட வேண்டுமென்று நானே ஒரு விதி ஏற்படுத்திக் கொண்டேன். ஆனால், சில தினங்களில் நான் வயல்களைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு, பகல் ஒரு மணிக்குத்தான் வீட்டிற்குத் திரும்பி வருவேன்.''

"நான் ஏற்படுத்திக்கொண்ட விதிப்படி சரியாகப் பத்து மணிக்கு நான் என் வீட்டிற்குத் திரும்பி வந்துவிட்டால், பகல் ஒருமணி வரையில் பெர்ஷியன் பாஷையைப் படித்துக்கொண்டு இருப்பேன். ஒரு மணி ஆனதும் நான் அன்னம் அருந்தச் செல்லுவேன். போஜனம் முடிந்ததும், அரை மணி நேரம் தூங்கினாலும் தூங்குவேன், அல்லது சும்மா இருந்தாலும் இருப்பேன்; பிறகு பெர்ஷியன் பாஷையை எழுதிக்கொண்டேனும் அல்லது பேசிக்கொண்டேனும் சூரியன் அஸ்தமிக்கும் வரையில் இருப்பேன்;

பிறகு படைக்களத்திற்குச் சென்று, என் நண்பர்களோடு மங்கையர்களைக் காணச் செல்லுவேன்; அல்லது அந் நண்பர்களோடு எங்கள் இராணுவத்தலைவர் வீட்டிலேயே காகிதம் ஆடிக்கொண்டிருப்பேன். மேற்கூறியவாறு நான் இரவு ஒன்பது மணி வரையில் என் காலத்தைக் கழித்துப் பின்னர் இரவு போஜனத்தை முடித்துக்கொண்டு, நான் படுக்கும்வரையில் இராச்சிய பரிபாலன விஷயங்களைப் பற்றி யேனும் அல்லது பல பயனற்ற விஷயங்களையேனும் படித் துக்கொண் டிருப்பேன். அவ்வாறு படித்துவிட்டு நான் இரவு 12 மணிக்கோ அல்லது 1 மணிக்கோ அல்லது இரண்டு மணிக்கோதான் படுப்பேன். எப்படியும் இரவு இரண்டு மணிக்குள் படுத்துக்கொள்ளுவேன்.''

"வேலூர் நகரின்மீது எனக்கு அதிக பிரியம் உண்டு. ஏனென்றால், அதன் இயற்கைக் காட்சிகள் எனக்குப் பெரு மகிழ்ச்சியை விளைவித்தன. அந்நகர் அழகான பள்ளத்தாக் கில் அமைந்திருக்கின்றது. அப்பள்ளத்தாக்கில் பலவிதமான புல்வெளிகளும், தோட்டங்களும், நெல்வயல்களும் இருக் கின்றன. ஒவ்வொரு பக்கத்திலும் அழகிய மலைக்குன்றுகள் உண்டு. அவை சில அருகாமையிலும், சில தூரத்திலும் காணப்படும்.''

மன்ரோ பெருந்தகையார் மேற்கூறியவாறு வறுமைப் பிணியால் பெருங்கஷ்டம் அடைந்தபோதிலும், தாமும் தம் சகோதரரும் சேர்ந்து வருஷத்திற்கு நூறு பவுன் தம் தந் தைக்கு அனுப்பிக்கொண்டிருந்தனர். அவர் சகோதரர் அலெக்சாண்டர் இந்தியாவில் வேறொரு இடத்தில் உத்தி யோகம் பார்த்துக்கொண்டிருந்தனர். அவர்கள் இருவரும் மிகக் கஷ்டத்துடன் சேமித்துத் தங்கள் தந்தைக்கு

அனுப்பிய மேற்கூறிய தொகையைக் கொண்டுதான் அவர் தந்தை தம் வாழ்நாட்களைக் கழித்துவந்தனர். அவர் முதலில் நல்ல நிலையிலிருந்து பின்னர் தாழ்ந்த நிலைக்கு விதியின் கொடுமையால் வந்து விட்டமையால், அவர் புதல்வர்கள் தங்கள் சுகத்தை மாத்திரம் கவனித்திருந்தால் அவர் மிகவும் கஷ்டப்பட்டிருப்பார். ஆனால், அவர் புதல்வர்கள் அருங்குண வந்தர்கள் ஆனமையால், அவருக்கு வறுமையின் கொடுமை தெரியாமற் போயிற்று. மன்ரோ எவ்வளவு கல்வியில் சிறந்தவரென்றும், வேலையில் நிபுணரென்றும், விஷயங்கள் எழுதுவதில் வல்லாளரென்றும் இப்புத்தகத்தை வாசிப்போர் அறிந்திருப்பார்கள். ஆனால், அவர்கள் அப்பெருங்குணசிலர் எவ்வித பெருந்தன்மையும், கனிவும், தத்துவஞானமும் பெற்றவரென்று அறிந்திருக்கமாட்டார்கள். அவ்விஷயங்களை ஒரு சிறிது விளக்குமாறு தம் சகோதரர்களில் ஒருவர் இறந்து விட்டபோது அவர் தம் அருமை அன்னையார்க்கு எழுதிய ஒரு கடிதத்தில் எழுதியவிஷயங்களை இங்கே குறிக்கின்றேன். அக்கடிதம் கீழ்வருமாறு: —

"என் அருமைத் தாயே!

நான் எண்ணியவாறு என் நிலைமை தற்சமயம் நன்றாகஇல்லை என்றாலும், நான் நம்பிக்கையை இழந்து விடவில்லை. எப்படியும் என் நிலைமை சிறப்புறுமென்றே எண்ணுகின்றேன். நான் எதற்காகவும் வருந்தவில்லை. ஆனால், என் தந்தைக்கு நான் விரும்பியபடி பொருளுதவி செய்யத் திறமையற்றிருப்பதை நோக்கியும், அவர்தம் செல்வத்தை இழந்து விட்டதை எண்ணி நீ அடைகின்ற துன்பத்தை நோக்கியுமே நான் மனவருத்தம் அடைகின்றேன். உனக்கு எவ்வளவு துன்பம் இருந்தாலும், நீ சந்தோஷம் அடைவதற்குப்

பல காரணங்கள் உண்டு. உன் மக்கள் உன்னைப் பெரிய செல்வத்தில் திளைக்கச் செய்யச் சக்தியற்றவர்களாக இருந்தாலும், உன் வாழ்க்கைக்கு முக்கியமாக வேண்டிய பொருள்களை அளிக்கக் கூடியவர்களாகத்தான் இருக்கின்றார்கள். அம்மணி! அவர்களுக்கு நல்ல காலம் வராமற்போகாது. அது வரும்போது அவர்கள் உனக்கு மேலான சௌகரியங்கள் எல்லாம் செய்வார்கள். உன் வாழ்க்கை முதலில் எவ்வளவு சந்தோஷகரமாக இருந்ததோ அவ்வளவு சந்தோஷகரமாகவே அதைச் செய்வார்கள் என்பது நிச்சயம். இன்னும் பல தாய்மார்களின் நிலைமைகளை உன் நிலைமையோடு ஒப்பிட்டுப்பார்த்தால், நீ அவர்களைப்போல் வருத்தமடைவதற்கு ஒரு காரணமும் இல்லை. சிறந்த செல்வக் குடும்பங்களில் இருக்கும் அநேக அன்னைமார்கள் சந்தோஷம் சிறிதும் இன்றித் துக்கத்தையே அனுபவித்துக்கொண்டிருக்கின்றார்கள். செல்வம் அழிந்தது பெருந்தீமையாகாது. ஆனால், பெருந்தீமையாவது என்னவென்றால் நன்றி விசுவாசமில்லாதவர்களைப் பெற்றிருப்பதேயாகும். ஆனால், உன் மக்கள் அனைவரும் நன்றி விசுவாசம் பெரிதும் உடையவர்கள். அன்னையே! நீ செல்வத்தில் இருந்த காலத்தில் உன்னுடன் குலாவியிருந்து, உன் செல்வம் மறைந்த காலத்து, உன்னை விட்டுப் பிரிந்த உன் நண்பர்கள் உன்னிடம் பின்னர் எப்போதும் இருக்க யோக்கியதை அற்றவர்கள் என்பதை அறிந்து கொள்வாயாக. உன்னை எப்போதும் பிரியாத நண்பர்கள்தான் உத்தமகுண சீலர்கள் ஆவார்கள். நானும், அலெக்சாண்டரும் சேர்ந்து, எம் தந்தைக்கு வருடத்திற்கு நூறு பவுன் அனுப்ப எங்களுக்குள் ஒரு ஏற்பாடு செய்து கொண்டோம். எனக்கு வரவேண்டிய சில நிலுவைத் தொகைகள் வந்துவிட்டால்,

நான் சிறிது காலம் கழிந்ததும், என் தந்தைக்கு வருஷத்தில் 200 பவுன் அனுப்புவேன்.''

அதிகாரம் நான்கு.

அறிவின் மாட்சி.

ஆங்கிலேயர்கள், திப்பு சுல்தான் திருவாங்கூர் மகாராஜாவின் நாட்டின்மீது படையெடுக்கத் தயாராக இருந்ததைக் கண்டு, அவனிடம் இரண்டாவது மைசூர் யுத்தம் செய்யத் தொடங்கினார்கள். டச்சுக்காரர் கிராங்கனூர் என்னும் ஒரு கோட்டையைத் திருவாங்கூர் மகாராஜாவிற்கு விற்றார்கள். கொச்சின் தேசத்து மகாராஜா அந்தக் கோட்டையை டச்சுக்காரருக்கு முதலில் விற்றுவிட்டார். அந்த அரசர் திப்பு சுல்தானுக்குக் கப்பம் கட்டும் சிற்றரசர். ஆதலால், திப்பு அவருக்கு அக்கோட்டையை டச்சுக்காரருக்கு விற்க அதிகாரமில்லை என்று அபிப்பிராயம் கொண்டார். ஆங்கிலேயர்கள் திருவாங்கூர் மகாராஜா தங்கள் அதிகாரத்திற்கு அடங்கினவர் ஆதலால், திப்பு அவர் மீது படையெடுத்தல் கூடாதென்று அவருக்கு அறிவித்தார்கள். திப்பு தாம் போர் தொடங்காமல் இருக்க இயலாதென்று பதில் தெரிவித்தார். ஆதலால், ஆங்கிலேயர்கள் அவர்மீது படையெடுக்கச் சித்தமாயிருந்தார்கள். அவர்கள் அதுவரையில் மகராஷ்டிரர்கள் பலத்தை ஒடுக்கத் திப்புவைத் தங்கள் துணைவராக வைத்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணியிருந்தார்கள். ஆனால், அவர் அவர்கள் சொல்லைக் கேளாமல் திருவாங்கூர் அரசர்மீது படையெடுக்கத் தயா

ராக இருந்தமையால், ஆங்கிலேயர்கள் மகராஷ்டர்களிடத்தும், ஐதராபாக்கத்து நைசாமிடத்தும் திப்புக்கு விரோதமாக ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அச்சமயம் மன்ரோதுரை ஆம்பூர் என்னும் ஒரு சிறு நகரில் தங்கியிருந்தார். அவர் 1790-ஆம் வருஷம், ஜனவரிமீ 17-ந் தேதி அச்சமயம் இராஜாங்கம் இருந்த நிலையைப்பற்றியும், ஆங்கிலேயர்கள் திப்புவின் சம்பந்தமாகக் கொண்ட அபிப்பிராயம் தமக்குச் சரியாகத்தோன்றவில்லை என்பதைப்பற்றியும், அவர்கள் அவரிடம் நடந்துகொண்ட தன்மை சரியல்ல என்பதைப்பற்றியும் சுவை மிக்க ஒரு பெரிய கடிதம் எழுதினார். அக்கடிதத்தை முழுவதும் இங்கு எழுதுவதென்றால், இப்புத்தகம் இடம்தராது. ஆதலால், அக்கடிதத்தில் அடங்கிய சிற்சில அருமையான விஷயங்களை மட்டும் கீழே குறிக்கின்றேன்:—

"நம்மவர்கள் ஒரு சேனையைக் கூட்டுதற்குச் சிறிது காலம் ஆகும். அதற்குள் திப்பு திருவாங்கூரையும், தென்னாட்டில் அநேக பாகங்களையும் பிடித்துக்கொள்ளுவார். நாம் அனுபவத்தாலும், துர்அதிர்ஷ்டத்தாலும் அறிந்துகொண்டது ஒன்றுமில்லை. நாம் ஐரோப்பாவிலிருந்து பல சேனைகள் இந்தியாவிற்குக் கொண்டுவந்ததால், நமது சேனையின் தொகை அதிகமாயிற்றேயன்றி, அதன் பலம் அதிகரிக்கவில்லை. நமது தேசத்துப் போர்வீரர்களால் இந்திய போர்வீரர்களின் அருமைச் செயல்களும் நடைபெறமாட்டா என்பது நிச்சயம். ஏனென்றால், நமது தேசத்துப் போர்வீரர்கள் யுத்தகளத்தில் களைப்பிலும், கஷ்டத்திலும் சண்டைசெய்யமாட்டார்கள். அதுவுமன்றி, அவர்கள் உணவுப் பொருள்களையும், சாமான்களையும் இழுத்துக் கொண்டுபோக ஏராளமான மாடு

கள் வேண்டும். இந்திய போர்வீரர்களின் தொகையை நம்ம வர்கள் அதிகப்படுத்தவேயில்லை. இந்தியாவில் நமது அர சாட்சி நிலைபெறுதற்கு அவ்விந்திய போர்வீரர்களின் சகாயத் தையும், நன்றி விசுவாசத்தையும் நாம் எப்போதும் நம்பி இருந்தோம். இன்னமும் நாம் அச்சமின்றி அவர்களை முற்றி லும் நம்பலாம். நாம் நமது தேசத்தின் போர்வீரர்களின் தொகையை அதிகரித்தமையால், நமது சேனையின் பலத்தை அதிகப்படுத்திக் கொள்ளவில்லை; அநாவசியமாக நமது சேனையைப் பெரிதாக்கினேமேயன்றி, உள்ளபடி போரு க்கு வேண்டிய சௌகரியத்தை நாம் சரிப்படுத்தவில்லை. நம்மிடத்தில் சில எருதுகள் இருப்பது உண்மைதான். ஆனால், அவை பீரங்கி வண்டிகளை இழுத்துக்கொண்டு போகுமா? நமது ஆங்கிலேய போர்வீரர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை இழுத்துக்கொண்டு போகுமா? இந்நிலையில் நமக்கு ஒன்றும் வசதி ஏற்படவில்லை. இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்குப் போர்வீரர்களை அனுப்பியதைக் காட்டிலும், அதற்குச் செலவான தொகையில் பாதித் தொகையைக் கொண்டு இந்திய போர்வீரர்களையும், எருதுகளையும் அதி கப்படுத்தி இருந்தால் மகாவீரராகிய நம் பகைவரைச் சுலப மாகத் தாக்குதற்குத் தகுந்த வசதி ஏற்பட்டிருக்கும்.''

"இந்தியாவிலும், இங்கிலாந்திலும் உள்ள நம் காரிய நிர்வாக சபையார் எப்போதும் மகராஷ்டிரர்களுக்கும், நமக் கும் உள்ளுக்குள் பகைமை இருப்பதால், அவர்கள் பலத் தைக் குறைப்பதற்காகத் திப்புவைப் பக்குவமாக நம் வசத் தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கருதுகிறார்கள். இந்த அபிப்பிராயம் அவ்வளவு சரியானதாகத் தோன்ற வில்லை. திப்பு வன்மையும், பேராசையும் உடைய பகைவர்.

அவரைக்கொண்டு வன்மையற்ற மகராஷ்டிரர்கள் நம்மைத் தாக்காமல் இருக்குமாறு நாம் பார்த்துக்கொள்ளவேண்டு மென்று கூறுவதில் அர்த்தமேயில்லை. திப்பு விஷயத் தில் நாம் பெரிதும் அஞ்ச வேண்டியவர்களாக இருக்கின் றோம். மகராஷ்டிரர்களைப்பற்றி நாம் சிறிதும் அஞ்சவேண் டியதேயில்லை. இது எவ்வளவு உண்மை என்பது அவ்விரு வர் அரசாட்சியின் தன்மைகளை நாம் உற்றுநோக்கினால் நன்கு விளங்கும். திப்புவின் அரசியல் ஆடம்பரமில் லாதது. ஆனால், அவர் உலகில் எவரும் பெறாத அள வற்ற அதிகாரத்தைப் பெற்றவர்; தம் விருப்பத்தின்படி எதையும் செய்யவல்லவர்; அவர் இராணுவத்திலும், லௌகி கத்திலும் ஒழுங்கும், முறையும் உண்டு. அதற்குக் காரணம் ஐதர் அலி அரசியலில் பெற்றிருந்த சிறந்த அறிவே யாகும். திப்புவினிடத்தில் உயர்ந்தகுலம், தாழ்ந்தகுலம் என்ற பேதம் கிடையாது; தமக்கு அடங்கிய சிற்றர சர்களையும், ஜமீன்தாரர்களையும் அடக்கி அவர்கள் ஒன்றும் தங்கள் விருப்பத்தின்படி செய்யச் சக்தி இல்லாதவர்க ளாகச் செய்திருக்கின்றார். சாதி வித்தியாசம், பணக்காரன் ஏழை என்ற வித்தியாசம், உயர்ந்த நிலையுடையவன் தாழ்ந்த நிலையுடையவன் என்ற வித்தியாசம் ஆகிய இவை ஒன்றும் இல் லாமல், நீதிமுறை தவறாமல் செங்கோல் செலுத்துகின்றார். வன்மையும், ஒழுங்கும் உள்ள ஒரு பெரிய சிறந்த சேனையை எங்கும் சண்டை இல்லாத காலத்தும் தமக்குப் பாதுகாப் பாக வைத்திருக்கின்றார். மிகத் தாழ்ந்த நிலையில் இருந்தவர் களையும் அவரவர்கள் அறிவிற்கும், ஆற்றலுக்கும் ஏற்றவாறு அரசாங்கத்தில் மிக உயர்ந்த பதவிகளில் வைத்திருக்கின்றார். அவர்களிடத்தில் அவர் அவநம்பிக்கை கொள்ளவில்லை.

அவரைப்போல் இந்தியாவில் சகல மக்களுக்கும் வித்தியாச மின்றிப் மேலான உத்தியோகங்களை அளித்த அரசர் இது வரையில் ஒருவரும் இலர். அவர் அரசாட்சியின் மாட்சி இவ்வாறு இருக்க, மகராஷ்டிரர்களின் அரசியலின் தன்மை யைச் சிறிது கவனிப்போம்.''

" மகராஷ்டிரர்களில் அநேக சிற்றரசர்கள் உண்டு. அவர் கள் ஒவ்வொருவரும் தங்கள் விருப்பத்தின்படி எதை யும் செய்யச் சக்தி உடையவர்கள். அவர்கள் ஒரு முதல வனுக்கு அடங்கினவர்கள் அல்லர். அவர்களுக்கு ஏராள மான நிலங்களும், இராச்சியங்களும், பெரிய சேனைகளும் தனித்தனியே உண்டு. அவர்கள் ஒருவரோடு ஒருவர் சில வேளைகளில் ஒற்றுமையாக இருப்பார்கள் ; பல வேளைகளில் பொறுமை கொள்ளுவார்கள் ; எப்போதும் தங்கள் சுயநன் மைக்காகவே எந்தக் காரியத்திலும் தலையிடுவார்கள்; குடி களின் நன்மையைப்பற்றி அவர்களுக்குக் கவலையில்லை; பொது மக்களின் நலம் எவ்வளவு கெட்டாலும், அவர்கள் தங்கள் சுயநலத்திற்கு ஒரு தினையளவும் பழுது வராமல் பார்த்துக் கொள்ளுவார்கள். இத்தகைய மகராஷ்டிரர்களைப்பற்றி நாம் எப்போதும் அஞ்சவேண்டியதில்லை.''

"இன்னும் திப்புவைப்பற்றியும், மகராஷ்டிரர்களைப் பற்றியும் சில விஷயங்கள் சொல்லவேண்டியது அவசியமே யாகும். திப்பு ஒழுங்காகப் போரில் வெற்றி பெற்றுத் தம் இராச்சியத்தை யோக்கியதையுள்ள ஒரு அரசரைப்போல் செம்மையுற நடத்துகின்றார். மகராஷ்டிரர்கள் கொள்ளை அடிப்பதையும், சூறை ஆடுவதையும் தான் தங்கள் தொழி லாகக் கொண்டிருக்கின்றார்கள். மைசூர் இராச்சியம் செம்மையாக இருப்பதால், வலிவற்ற அரசனைக் கொண்

டும், வயதில் சிறிய அரசகுமாரனைக்கொண்டும், அவ்விராச்சியம் அழிவில்லாது நிலைபெறும் என்பதில் ஐயமில்லை. மகாராஷ்டிரர்களின் வலிவு சமயத்திற்கு ஏற்றவாறு அதிகரிக்கும், குறையும். அவர்கள் சில வேளைகளில் ஒன்றுகூடித் தங்கள் பலத்தை விருத்தி செய்வார்கள்; பல வேளைகளில் பிரிவுற்றுப் பலவீனம் அடைவார்கள்; சில வேளைகளில் தங்கள் இராச்சியங்களைத் தங்கள் புதல்வர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து விடுவார்கள். மகராஷ்டிரர்களுக்கு நிலையுள்ள சேனையே கிடையாது. ஐரோப்பியர்களின் இராணுவ சம்பந்தமான ஒழுங்கும், முறையும் தங்களுக்கு இருப்பது அவசியமென்று அவர்கள் கருதினவர்களல்லர்; ஆதலால், அவர்கள் அவற்றை அனுசரித்தவர்களும் அல்லர். மதசம்பந்தமாக மகராஷ்டிரர்களுக்கு ஊக்கம் மிகக்குறைவு. பிறமதத்தினர்களில் சிலரைக் கொன்றேனும், அவர்களைத் தங்கள் மதத்தினர்களாக்க வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்குக் கிடையாது. ஆனால், திப்புவோ ஒரு இலட்சத்திற்குமேல் அடிமைகளே அடங்கிய ஒரு பெரிய சேனையை வைத்திருக்கின்றார். அந்த அடிமைகள் ஐரோப்பியர்களின் முறையையும், போரின் நுட்பத்தையும் மிகவும் ஊக்கத்தோடு அனுசரிக்கின்றார்கள். அவர்கள் துருக்கியர்களிடம் போர்புரியும் தொழிலை நன்றாகப் பயின்று கற்றுக்கொள்ளுகின்றார்கள். இதுவுமன்றி, திப்பு தம் இராணுவத் தலைவர்களுக்கு ஐரோப்பியர்களின் போரின் நுட்பங்களும், தந்திரங்களும், தம் சுயஅறிவைக்கொண்டு தாம் புதிதாகக் கண்டுபிடித்துள்ள போரின் சம்பந்தமான பல திட்ப நுட்பங்களும் அடங்கியுள்ள புத்தகங்களை அளித்திருக்கின்றார். அவர்பேராற்றல் உடையவராக இருப்பதுமன்றி, பிறமதத்தினர்களை நாசப்படுத்துவதில் அழியாத

இன்பமுண்டு என்ற கொள்கையையும் உடையவராக இருக்கின்றார்.''

"அத்தகைய ஆற்றல்களும், வசதிகளும் பெற்ற பயங்கரமான பகைவரை அடக்குவதற்கு நமக்குச் சமயம் வாய்த்தது. நாம் அவர்மீது படையெடுக்கத் தயாராக இருந்திருந்தால், அவர் நம்மை எதிர்ப்பதற்குள் நாம் ஒரு சேனையைக் கோயம்புத்தூருக்கும், மற்றொரு சேனையைப் பெங்களூருக்கும் அனுப்பிவிட்டிருக்கலாம். ஆனால், இதுவரையில் நம்மவர்கள் ஒரு சேனையையும் சேர்ப்பதாகத் தெரியவில்லை. கர்னல் மஸ்கிரேவ் கவர்னர் அவர்களைத் திருச்சினாப்பள்ளிக்குச் சில சேனைகளை அனுப்புமாறு மிகவும் கேட்டுக்கொண்டார். அச்சேனைகள் அங்குள்ள சேனையோடு சேர்ந்தாலும்கூட பகைவரை நாம் முன்னதாகத் தாக்க இயலாது. இதுவுமன்றி, நாம் எதிரியைத் தாக்குவதற்கு மற்றொரு பெரிய தடையுண்டு. அதாவது, நம் அதிகாரிகள் பகைவரைத் தாக்குவதற்கு முன் வங்காள திரைத்தனத்தாருக்கு விஷயத்தை அறிவித்து, அவர் அனுமதியைப் பெறவேண்டும் என்பதாகும். பொதுமக்கள் லார்ட் காரன்வாலிஸ் துரை வருகையை ஆவலோடு எதிர்பார்க்கின்றார்கள்; பேராற்றலும், பெருமுயற்சியும் வாய்ந்த அவர் வந்ததும், பல காரியங்கள் நிறைவேறிவிடும் என்று எண்ணுகின்றார்கள். ஆனால், பெருங்கீர்த்தி வாய்ந்தவர்களிடத்தில் அதிகமாக ஒன்றும் எதிர்பார்ப்பதில் பயனில்லையென்று அவர்கள் தங்கள் அனுபவத்தால் அறிந்துகொண்டிருப்பார்கள்.''

ஆங்கிலேயர்கள் திப்புவினிடம் நிகழ்த்திய எல்லாப் போர்களிலும் மன்ரோ தம் புத்தி கூர்மையைச் செலுத்தித் தம் உத்தியோகத்தின் கடமைகளை மிக ஒழுங்கா

கச் செய்திருக்கின்றார். அவர்கள் பெங்களூர் கோட்டையைப் பிடிக்கும்போது மன்ரோ இந்திய சிப்பாய்கள் அடங்கிய ஒரு சேனைக்குத் தலைவராக இருந்தார். கரிகால் போரிலும், ஸ்ரீரங்கப்பட்டணத்தின் முற்றுகையிலும் அவர் உடன் இருந்தார். பின்னர் திப்புவினிடம் சமாதானம் ஏற்பட்டதும், அவர் திப்புவின் இரண்டு புத்திரர்களைத் தம் வசத்தில் வைத்துச் சென்னைக்கு ஒரு சேனையுடன் சென்றார். மன்ரோ ஆங்கிலேயர்கள் திப்புவினிடம் சத்தியமங்கலத்தில் புரிந்த போரைக் குறித்துக் கீழ்வருமாறு வரைந்திருக்கின்றார்.

"பேராற்றல் வாய்ந்த நிபுணர்களும் வெற்றிவருகின்ற வேளைகளில் உணர்வு சலித்துத் தங்கள் வன்மையை இழந்து, சாதாரண மக்களுக்குச் சமானமாக ஆய்விடுகின்றார்கள். ஆதலால், அவர்கள் ஒப்பற்ற ஆற்றல் பயனற்றுப்போகின்றது. திப்பு செப்டம்பர் மாதம் **14**-ந் தேதி அதிக குண்டுகள் கொண்டுவந்து பிளாயிட் துரையைத் தாக்கியிருந்தால், அவர் தோல்வி அடைந்திருப்பார். அன்றே திப்பு வெற்றி அடையாமலிருந்தாலும், மறுநாள் அவசியம் அடைந்திருப்பார். ஏனென்றால், நம்மவர்கள் சேனையிலுள்ள ஒரு போர் வீரனும் இரண்டு தினங்களாக உண்ணவுமில்லை, உறங்கவுமில்லை. ஆதலால், அவர்கள் எதிரியின் மறுதாக்கலுக்கு நின்றிருக்கமாட்டார்கள். கர்னல் ஸ்டூவர்ட்டும் தம் சேனையோடு பாலக்காட்டிலிருந்து தப்பித்து வந்திருக்க முடியாது. நம்மவர்களின் நல்ல காலம் திப்பு தமது இயற்கை ஊக்கத்தோடு அச்சமயம் போரை நடத்தவில்லை."

அதிகாரம் ஐந்து.

அரசியல் ஞானம்.

ஆங்கிலேயர்கள் திப்புவினிடம் சமாதானம் செய்து கொண்டதைக் குறித்து மன்ரோ கீழ்வருமாறு வரைந்திருக்கின்றார்.

"நம்மவர்கள் திப்புவினிடம் சமாதானம் செய்துகொண்டதைப்பற்றி நான் சிறிதும் சந்தோஷப்படவில்லை. திப்புவிற்குக் கரம்கொண்டாவிலிருந்து ஸ்ரீரங்கப்பட்டணம் வரையில் ஒரு இடமும் சொந்தமில்லை. அவர் குத்தி, பல்லாரி, சிதல்துருக் ஆகிய இவ்வூர்களைத்தான் சொந்தமாக வைத்திருந்தார். ஆனால், அவைகள் சண்டை நடந்த இடத்திற்கு வெகுதூரத்திலிருந்தமையால், அவருக்கு ஒன்றும் பயனில்லை. அவருக்குக் கிருஷ்ணகிரி சொந்தமாக இருந்தும், அதுவும் அச்சமயம் ஒரு பயனையும் அளித்திருக்கும் என்று எண்ணுதற்கு இடமில்லை. திப்புவின் சேனையில் பெரும்பகுதி அழிந்திருந்தது. ஏனென்றால், அநேக போர்வீரர்கள் அகாலமரணம் அடைந்தார்கள்; பல போர்வீரர்கள் சண்டைக்கு அஞ்சி ஓட்டம் பிடித்தார்கள். ஆதலால், திப்பு தம் செருக்கையும், தைரியத்தையும் இழந்திருந்தார். ஆனால், அவர் கொடுமை மாத்திரம் அவரைவிட்டு நீங்கவில்லை. அவர் தம் உத்தியோகஸ்தர்களையும், அவர்களில் முக்கியமாகப் பிராம்மணர்களையும் ஒரு காரணமும் இல்லாமல் வீண் சந்தேகம்கொண்டு இம்சித்து வந்தார். தம் கோட்டையிலுள்ள மசூதியிலேயே அவர் இரவில் உறங்கிக்கொண்டிருந்தார். திப்பு **6**-ந்தேதி அடைந்த தோல்வியிலிருந்து, தம் அரண்மனைக்குப் போவதில்லை. அவர்

பகலெல்லாம் தம் போர்வீரர்களோடு புதிதாக அமைத்த ஒரு கூடாரத்தில் தங்கியிருந்தார்; அங்கிருந்து நம்மவர்கள் சேனைகள் நாலாப் பக்கங்களிலும் தம் சேனையைத் தாக்குவதற்கு வருவதை அறிந்து, தமக்கு வெற்றியென்பதே கிடையாது என்று மனம் உடைந்து, நம்பிக்கை முற்றிலும் இழந்திருந்தார்; தாம் எவ்வளவுதான் சம்மாளித்தாலும் 15 தினங்களுக்குமேல் நம்மவர்களின் சேனையின் தாக்குகைக்கு நிற்க முடியாதென்று தீர்மானித்திருந்தார். அவர் இவ்வித ஆபத்தான நிலையிலிருந்தபோது நம் லார்ட் காரன் வாலிஸ் துரை அவருக்குச் சௌகரியம் செய்துவிட்டார். எவ்வாறென்றால், அவர் திப்புவைத் தம் இராச்சியத்தில் பாதியை நமக்கும், நம்மைச் சேர்ந்த அரசர்களுக்கும் கொடுத்துவிடவேண்டுமென்று கேட்டார். திப்பு அந்த ஏற்பாட்டிற்குச் சந்தோஷமாகவே இசைந்தார். ஏனென்றால், தம் இராச்சியம் முற்றிலும் எதிரிக்குப் போகாமல் இருப்பது தம் அதிர்ஷ்டந்தான் என்று அவருக்குத் தோன்றிற்று. அவர் அவ்வாறு எண்ணியது மிகவும் சரி. ஏனெனில், அப்போது அவர் இருந்த நிலையில் அவர் இராச்சியத்தில் சிறிதுபாகமும் அவருக்கு நிலைத்திருக்காது. திப்பு சமாதானத்திற்கு உடன்பட்டதும், லார்ட் காரன்வாலிஸ் நம் போர்வீரர்கள் சுரங்கங்களில் (Trenches) செய்துகொண்டிருந்த வேலைகளையெல்லாம் நிறுத்துமாறு கட்டளை விதித்துவிட்டார். அவ்வாறு சமாதானம் செய்வதால், தம் தொல்லைகள் அனைத்தும் ஒழியுமென்றும், நோய்கள் ஆட்சி செய்கின்ற தம் கூடாரத்தைவிட்டுத் தாம் போய் விடலாமென்றும், நோயினால் இன்னும் பல ஐரோப்பிய போர் வீரர்கள் இறக்காமலிருப்பதற்கு அது வழியென்றும் அவர் எண்ணிக்கொண்டார்போலும்! ஆனால், திப்புவோ கள்ளத்தன

மாகப் போர் செய்வதற்குரிய ஏற்பாடுகள் பலவும் முன்னி னும் அதிக ஊக்கத்தோடு செய்துகொண்டு, உடன்படிக்கைப் பததிரத்தில் கையெழுத்து போடாமல் பல சாக்குப்போக்கு கள் சொல்லிக்கொண்டு காலதாமதம் செய்துவந்தார்.''

"லார்ட் காரன் வாலிஸ்துரை கம்பெனிக்கு வருமானம் அதிகம் வருவதைப் பார்த்தாரேயன்றி, இராச்சியம் பெரிதாவ தைப் பார்த்தாரில்லை. ஆதலால்,அவர் திப்புவின்மீது படையெ டுக்காமல் எவ்வளவு காலதாமதம் செய்தாரோ, அவ்வளவும் திப்புவிற்கு நன்மையாயிற்று. நாமும், நம் துணை அரசர்க ளும் தம் தம் இராச்சியங்களுக்கு அருகாமையிலுள்ள திப்பு விற்குச் சொந்தமான ஊர்களை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று தீர்மானித்து, லார்ட் காரன்வாலிஸ் திப்புவைத் தம் இராச்சியத்தின் மொத்த வருமானத்தின் தொகையில் பாதித் தொகை எவ்வளவென்று கேட்டார். ஏனென்றால், அந்தப் பாதித்தொகையின் மதிப்புள்ள திப்புவின் இராச்சியத்தை நாமும், நம் துணை அரசர்களும் பங்கிட்டுக்கொள்ளவேண்டு மென்று உடன்படிக்கையின்படி முடிவாயிற்றன்றோ? ஆனால், திப்பு தாம் பெங்களூரிலும், மற்ற இடங்களிலும் பெருநஷ் டம் அடைந்தமையால், தமக்கு ஒரு வருமானமும் இல்லை யென்று பதில் சொன்னார். அதைக்கேட்டு லார்ட் காரன் வாலிஸ் அவ்வாறாயின் தாமும் தம் துணை அரசர்களும் தங் கள் தங்கள் இஷ்டப்படி அவர் இராச்சியத்தில் பாதியைப் பங்கிட்டுக்கொள்ளுவோமென்று திப்புவிற்கு அறிவித்தார். அதன்மேல் திப்பு தம் இராச்சியத்தின் உட்பாகங்களுக்கு மதிப்பு குறைவாகவும், வெளிப்பாகங்களுக்கு மதிப்பு அதிக மாகவும் போட்டு ஒரு குறிப்பு அனுப்பினார். திப்பு அவ்வாறு செய்ததின் காரணம் என்னவென்றால், உள் நாட்டிலுள்ள

ஊர்களைத் தாம் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், நாட்டிற்கு வெளிப்பாகத்திலுள்ள ஊர்களை நாமும், நம் துணை அரசர்களும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் அவர் எண்ணினார். அதுவுமன்றி, திப்பு தம் இராச்சியத்தின் வருமானத்தின் தொகையைச் சொல்லியபோது அதில் ஏறக்குறைய முப்பது இலட்சம்ரூபாய் குறைத்துச் சொன்னார். லார்ட் காரன் வாலிஸ் துரையும் நம் துணை அரசர்களும் சமாதானம் செய்துகொள்ள மிக ஆவலாக இருந்தபடியால், தங்கள் நஷ்டத்தைப் பொருட்படுத்தாமல், திப்புவின் கணக்கின்படியே இராச்சியத்தைப் பங்கிட்டுக்கொள்ளச் சம்மதித்தார்கள். திப்பு ஒரு தந்திரத்தில் வெற்றி அடையவே, இன்னும் பல தந்திரங்கள் செய்ய எண்ணம் கொண்டார். லார்ட் காரன் வாலிஸ் துரையும், துணை அரசர்களும், தாங்கள் விரும்பிய ஊர்களைக் குறித்துத் திப்புவிற்கு அனுப்பியபோது, அவர் அவ்வாறு செய்ய இடம் தராமல் பல இடையூறுகள் செய்து கொண்டு வந்தார். அதன்மேல் அவர்கள் தங்களுக்கு விருப்பமான ஊர்களை ஒரு கடிதத்தில் எழுதி அதில் திப்புவைக் கையெழுத்து போடுமாறு கேட்டார்கள். திப்பு இரண்டொரு தினங்கள் காலதாமதம்செய்து, பின்னர் தாம் கிருஷ்ணகிரி, சிதல்துருக், குத்தி ஆகிய இவ்வூர்களைக் கொடுக்க இயலாதென்று அறிவித்தார். அச்சமயந்தான் லார்ட் காரன்வாலிஸ் துரைக்குத் திப்புவின் உட்கருத்து இன்னதென்று தெரியவந்தது. மேற்கூறிய மூன்று பதிகளும் போர் செய்தற்குத்தக்க வசதிகள் அளிக்க வல்லவையாதலால், திப்பு கபடத்தனமாகப் பின்னர் போர் தொடங்கும் பொருட்டே அவற்றை அளிக்கமாட்டேன் என்று கூறினார் என லார்ட் காரன்வாலிஸ் துரைக்குத் தெரியவந்தது. ஆதலால், அவர் திப்பு அவசியம் அவ்வூர்களையே அளிக்க

வேண்டுமென்று வற்புறுத்தினர். பின்னர் திப்பு சில தினங்கள் காலதாமதம் செய்து அவருடைய வக்கில்கள் விரும்பியபடி, தம் புதல்வர்களுக்கு ஆபத்து வருவதாலும், தமக்கு அச்சம யம் வேறு வழி ஒன்றும் இல்லாமையாலும், உடன்படிக்கைப் பத்திரத்தில் கையெழுத்து போட்டார்.''

"திப்புவின்மீது தொடுத்த சண்டையில் நம்மவர்கள் பேரறிவும், பேராற்றலும் காட்டியது உண்மையென்றாலும், உடன்படிக்கை முற்றிலும் ஒழுங்காகச்செய்யப்பட்டதென்று சொல்ல எனக்கு மனம் வரவில்லை. உடன்படிக்கையின்படி நமக்கு $39\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் வருமானம் அதிகரித்தது நன்மைதான். பரமஹால் என்னும் திப்புவின் இராச்சியத்தின் ஒரு பகுதி நமக்குக் கிடைத்திருப்பதால், திப்பு நமது கர்னாடகத்தைத் தாக்க இயலாது என்பதும் உண்மைதான். ஆனால், நம்மவர்கள் இன்னும் அதிக நன்மையை இன்னும் குறைந்த கஷ்டத்துடன் பெற்றிருக்கலாம். ஆதலால், லார்ட் காரன்வாலிஸ் துரை காரியத்தை முற்றிலும் செம்மையுற நிகழ்த்தவில்லை என்று நான் சொல்லாமலிருக்க முடியாது. அவர் வருமானத்தின் அளவைப் பார்த்து மண்டையை உடைத்துக் கொள்ளுவதைவிட, நமக்குப் போர் சம்பந்தமாக நல்ல வசதிகள் கொடுக்கக்கூடிய பதிகளை எடுத்துக்கொண்டு, திப்புவை மேற்குத்தொடர்ச்சி மலையின் மேல்பாகத்திற்குத் துரத்திக் கருரையும், கோயம்புத்தூரையும் அவர் வசத்தில் வைக்காமல் நமக்குச் சொந்தமாக்கி நம் நிலையை ஒழுங்குபடுத்திக்கொண்டிருக்கலாம் அல்லவா? கரூரும், கோயம்புத்தூரும் திப்புவின் வசம் இருப்பதால், அவர் தாம் நினைத்தபோது, நமது தென்னாட்டிலுள்ள ஜில்லாக்களைச் சுலபமாகத் தாக்குவார் அல்லவா?''

"பாலக்காட்டுச்சேரி (Palghat Cherry) நம்வசம் இருப்பதால் பம்பாயிலிருந்துவரும் சேனை கோயம்புத்தூரைப் பிடித்துக்கொள்ள முடியும் என்பது உண்மைதான். பின்னர் கர்ணுடகத்திலிருந்து வரும் சேனையின் உதவியைக்கொண்டு திப்புவை மேற்குத்தொடர்ச்சிமலைக்கு மேற்கே துரத்திவிடக் கூடும் என்பதும் உண்மைதான். ஆனால், நாம் அச்சேனைகளையெல்லாம் ஒருங்கு சேர்ப்பதற்குச் சில மாதங்கள் ஆகும். அதற்குள் திப்பு திருச்சினாப்பள்ளிக்குச் சென்று கர்ணுடகத்தினுள்ள பல ஊர்களையும் நாசப்படுத்திச் சென்னைமாநகரம் வரையில் வந்து சேர்வார். அவர் அப்போது ஆங்காங்குள்ள ஆடுமாடுகளையும், மனிதர்களையும் துரத்தி நாம் போர் செய்ய வழியில்லாமல் தடை செய்வார். எவ்வாறாகிலும் நாம் சேனையைத் தயார்செய்து அவரைத் தாக்குவோமானால், அவர் முதலில் பெங்களூரை நம்வசம் விட்டுப் போய்விடுவார். ஆனால், அவர் எப்போதும் நாம் ஸ்ரீரங்கப் பட்டணத்தைப் பிடிக்கவொட்டாமல் தடை செய்யமுடியும். அந்த நிலையில் நாம் சண்டைகளால் பல தொல்லைகள் அடைந்து, பண நஷ்டமும் அடைந்திருப்போம். அப்போது திப்பு இந்த உளவை அறிந்து நாம் புதிதாகப் பிடித்துக்கொண்ட பதிகளைத் திருப்பிக் கொடுத்துவிட்டால், சமாதானத்திற்கு உடன்படுகின்றேன் என்று சொல்லுவார். நமக்கு வேறு வழி இல்லாமையால், நாம் உடன்படிக்கை செய்யவேண்டியதாகவே வரும். ஆதலால், நாம் கோயம்புத்தூரை நம்வசத்தில் வைத்துக்கொண்டிருந்திருக்கவேண்டும்; சத்தியமங்கலத்திலும் சேனையைப் பலப்படுத்திக்கொண்டிருந்திருக்க வேண்டும். அவ்வாறு நாம் செய்திருந்தால், திப்பு அப்பக்கம் படையெடுத்துவர முடியாது."

"லார்ட் காரன்வாலிஸ் தாம் ஸ்ரீரங்கப்பட்டணத்தைப் பிடித்துக்கொள்ள வேண்டியதாக வருமே என்று அஞ்சினார். அவர் "ஓ! தெய்வமே! நான் இப்பதியை வைத்துக்கொண்டு என் செய்வேன்?'' என்று பன்முறை சொல்லி இருக்கின்றார். அவருக்கு நான் என்ன பதில் சொல்லி இருப்பேன் என்றால், "ஸ்ரீரங்கப்பட்டணத்தை வைத்துக்கொள்ளுங்கள். அது உங்கள் பதிகளைத் திப்பு எப்போதும் பிடிக்க வொட்டாமல் பாதுகாக்கும். ஏனென்றால், அப்பதி பகைவர்க்குப் பெருந்தடையாக இருக்கும். அத்துடன் காவேரிநதியை எல்லையாகவுடைய இடத்தையும் வைத்துக் கொண்டால், எக்காலத்திலும் எந்த இந்திய மன்னரும் உங்களைத் தாக்கவே முடியாது. ஏனென்றால், காவேரி நதியைச் சுற்றிலும் கரடுமுரடான மலைகள் இருத்தலால், பகைவர்க்கு வர வழி கிடையாது.'' என்று சொல்லியிருப்பேன். ஆனால், எதுவும் மிதமாக இருக்கவேண்டுமென்றும், சமாதானத்தைக் கைவிடக்கூடாதென்றும் எண்ணியே லார்ட் காரன்வாலிஸ் துரை திப்புவின் போரின் சம்பந்தமாக மிதமாகவும், சமாதானமாகவும் காரியங்களை நிறைவேற்றினார். இவ்வாறு நாம் நடந்து கொள்ளுவோமானால் இருபது வருஷத்திற்குள் பயங்காளிகள் என்னும் பட்டத்தை அடைந்துவிடுவோம். நான் முன்னோர் மூதுரையின்படி எப்போதும் சொல்லுவது என்னவென்றால், எல்லா அரசர்களும் சமாதானமாக இருக்கச் செய்யவேண்டுமானால், அவர்கள் நம்மைத் தாக்க வருவதால், தங்கள் வாழ்க்கைக்கே பெரிய ஆபத்து வந்துவிடும் என்று அவர்கள் நன்கு உணருமாறு நாம் நம்மைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதாகும். அவ்வாறு பலப்படுத்திக் கொள்ள நமக்குத் தக்க சேனை வேண்டும். நமக்கு அத்

தகைய சேனை ஒன்று இருக்கின்றது. ஆனால், நாம் அதை ஆதரிக்கவேண்டிய பொருள் வைத்திருக்கவில்லை. ஆதலால், நாம் அடைந்த வெற்றிகளின் பயனாக ஸ்ரீரங்கப்பட்டணத்தையும், காவேரியைச் சுற்றியுள்ள பாகங்களையும் நம் வசம் வைத்துக்கொண்டிருந்தால், மேற்கூறிய வலிவான சேனையை நாம் எப்போதும் வைத்துக் கொண்டிருக்க முடியும்."

"சமாதானம் என்பது அவ்வளவு விரும்பத்தக்க பொருள் என்றால், அதை நமது கையில் வைத்திருக்க வேண்டுமேயன்றித் திப்புவின் கையில் விட்டிருக்கக் கூடாது. ஏனென்றால், திப்புவின் மனம் அடிக்கடி மாறுதல் அடையக்கூடியது. அவர் தம் மொத்த வருமானத்தில் பாதியை இழந்துவிட்ட போதிலும், தம் வன்மையில் பாதி இழக்கவில்லை. நாம் போர் செய்யவேண்டுமானால், நமக்குத் தக்க ஆற்றல் வாய்ந்த கவர்னர் வேண்டும்; ஐரோப்பாவில் சமாதானம் இருக்க வேண்டும்; நமக்கு உதவியாக மற்ற அரசர்கள் வேண்டும். இவ்வளவு தொல்லைகள் இருக்கின்றன. ஆனால், திப்புவிற்கு அத்தகைய கஷ்டங்கள் ஒன்றும் இல்லை. அவர் எந்த அரசனையாகிலும் தாம் தனிமையாகத் தாக்க வசதி உண்டென்று எண்ணிவிட்டால், உடனே அவ்வரசன்மீது படையெடுப்பார். மற்ற அரசர்கள் எப்போதும் பொது காரணத்தைக் கொண்டு ஒருங்கு சேர்ந்திருப்பார்கள் என்று நாம் எண்ண முடியாது. நமக்கு இனிவரும் கவர்னர் லார்ட் காரன்வாலீஸ் துரையைவிடக் குறைந்த ஆற்றல் உடையவராக இருந்தால், குத்தி, சிதல்துருக், பிட்டனூர் முதலிய பதிகளின் வசதியைக் கொண்டு திப்பு மகாராஷ்டிரர்களும், நைசாமும் பிடித்துக்கொண்ட ஊர்களை மிகச் சுலபமாக அபகரித்துக் கொள்ளுவார் என்பதில் சந்தேகமில்லை."

அதிகாரம் ஆறு.

நிலவரி ஒழுங்கு.

ஸ்ரீரங்கப்பட்டணத்தின் உடன்படிக்கையின்படி திப்பு தம் இராச்சியத்தில் அரைப் பாகம் ஆங்கிலேயர்களுக்கும், அவர் துணை அரசர்களுக்கும் அளித்து விட்டார். ஆங்கிலேயர்களுக்கு மேற்குக் கரையோரத்திலுள்ள மலபாரும் (Malabar), தெற்கேயுள்ள திண்டுக்கல்லும், சேலம் ஜில்லாவின் ஒரு பாகமும் கிடைத்தன. சேலம் ஜில்லாவின் மேற்கூறிய பாகத்திற்கு அச்சமயம் பரமஹால் (Baramahal) என்று பெயர்.

பரமஹால் நிலவரி வசூல் அதிகாரியாக (Superintendent) கேப்டன் ரீட் என்பவரை லார்ட் காரன்வாலிஸ் துரை ஏற்படுத்தினர். அவருக்கு உதவியாக மன்ரோ துரையையும், வேறு இரண்டு இராணுவ உத்தியோகஸ்தர்களையும் அவர் நியமித்தார். சிவில் உத்தியோகஸ்தர்களில் தக்க பாஷா ஞானம் உடையவர்கள் இல்லாமையாலும், நிலவரி வசூல் சம்பந்தமாக அதற்கு முன்னிருந்த உத்தியோகஸ்தர்கள் தங்கள் கடமைகளை ஒழுங்காக நடத்தாமையாலும், லார்ட் காரன்வாலிஸ் துரை இராணுவ உத்தியோகஸ்தர்களை சிவில் உத்தியோகஸ்தர்களாக நியமிக்கும்படி நேர்ந்தது. அக்காலத்தில் ஜமீன்தாரர்கள் தங்கள் நிலங்களின் வரியை வசூல்செய்து கொடுப்பதற்காகச் சில மனிதர்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். அம்மனிதர்கள் வரிவாங்கி வருஷத்திற்கு இவ்வளவென்று ஜமீன்தாரர்களுக்குக் கொடுத்து விடுவார்கள். அவர்கள் உழவர்களிடம் (Cultivators) தங்கள் மனம் போனவாறு வரி அதிகமாக வாங்கி அந்த

ஏழை மக்களை வஞ்சித்து வந்தனர். காருண்ணியம் நிறைந்த துரைத்தனத்தாருக்கும் அந்த அநியாயத்தை நீக்க உளவு தெரியாமல் இருந்தது. அதனால் துரைத்தனத்தாருக்கும் அதிக பணநஷ்டம் உண்டாயிற்று.

மன்றோ துரை பரமஹாலில் 1792-ஆவது வருஷத்திலிருந்து 1799-ஆவது வருஷம் வரையில் உத்தியோகம் செய்தார். பரமஹாலைச் சார்ந்த தாலுக்காக்கள் கிருஷ்ணகிரி, தர்மபுரி, உதயகிரி, திருப்பத்தூர் என்பவைகளாகும். அவைகள் எல்லாவற்றினும் பெரியது திருப்பத்தூர். அத்தாலுக்காக்களில் அழகிய சாலைகளும், இனிய காட்சிகளும் உண்டு. சாலைகளின் இருபக்கங்களிலும் பெரிய ஆலமரங்கள் அழகாக ஒளிரும். அவை அருமையான நிழலை மிகுதியாகத் தருவதால், எச்சாலையை நோக்கினும், வனப்புள்ள பந்தல்போல் தோன்றும். கொடுமையான கோடைக்காலத்திலும் அச்சாலைகளில் வெய்யல் என்பதே தெரியாது. லி பானு (Mr Le Fanu) என்பவர் அப்பாகத்தைச் சார்ந்த இரண்டொரு இடங்களைக் குறித்து வர்ணிப்பது மிக அழகாக இருப்பதால், ஒரு சிறிது அதைக் குறித்து இங்கு எழுதுவது குற்றமாகாது. அவர் எழுதியதாவது:—

"இராயக்கோட்டாவுக்கும், கிருஷ்ணகிரிக்கும் மத்தியில் ஒரு சுற்றுக்கணவாய் செல்லுகின்றது. சேலம் ஜில்லாவிலுள்ள இயற்கைக் காட்சிகளின் அழகுகள் எல்லாவற்றினும் மேற்கூறிய கணவாயின் அழகை இரண்டாவதாகச் சொல்லலாம். இராயக்கோட்டாவின் கிழக்கே ஏறக்குறைய அரை மைல் தூரத்திலிருந்து அக்கணவாய் தொடங்கிப் பச்சைப் பசேலென ஒளிரும் குன்றுகளைச் சுற்றிக்கொண்டு செல்வதுடன், சில இடங்களில் மிகத் தாழ்வான இடங்களில் இறங்கு

வதும், சில இடங்களில் மிக உயர்வான இடங்களில் ஏறுவதும் மக்கள் கண்களைப் பறிக்கும். அக்கணவாய் பள்ளத்தாக்குகளில் செல்லும்போது, அங்குப் பற்பல மரங்களும், செடிகளும், கொடிகளும் செழிப்புற வளர்ந்திருக்கும் காட்சி மக்கள் கண்களுக்குக் களிப்பையும், விதவிதமான பட்சிகளின் பலபல இயற்கைக் கீதங்கள் செவிகளுக்குக் களிப்பையும் அளிக்கும். இன்னும் சில இடங்களில் செங்குத்தான சிகரங்கள் பல வர்ணங்கள் தீட்டிய அழகிய கோபுரங்கள்போல் வனப்பாக மிளிரும். மேற்கூறிய கணவாய் அல்லாமல், மக்கள் நடந்துசெல்லும் ஒரு சிறு பாதை அங்கு உண்டு. அச்சிறு பாதையோ மிக அடர்ந்த புதர்களுக்குள் செல்லுகின்றது. அம்மறைவிடங்களில் கள்ளர்கள் பதுங்கி இருப்பார்கள். அங்கு மனிதன் காலடி சப்தத்தைக் கேட்ட மாத்திரத்தே முயல்கள் திடுக்கிட்டு ஓடும்; காட்டுச் சேவல்கள் சிறகுகளை அடித்துக்கொண்டு தங்கள் இன்பப் பெடைகளை நாடி மூங்கில் புதர்க்குள் பதுங்கும்; சுந்தரம் மிக்க மான் கூட்டங்கள் வந்த மக்களை வியப்புடன் நோக்கிச் சிந்தனை மிக்க மௌனத்துடன் நிற்கும்.''

மன்ரோ துரை திருப்பத்தூரை வர்ணிப்பதும் அழகாக இருப்பதால், ஒரு சிறிது அதையும் கவனிப்போம். அவர் எழுதியதாவது:—

“இங்கிலாந்திலாவது ஸ்காத்லாந்திலாவது திருப்பத்தூரின் இயற்கை அழகுக்கு ஒப்பிட்டுச் சொல்ல ஒரு இடமும் இல்லை. திருப்பத்தூர் பரந்த செழிப்பான பள்ளத்தாக்கின் மத்தியில் திகழ்கின்றது. அப்பள்ளத்தாக்கு பத்து மைல் முதல் 40 மைல் வரையில் அகலமும், அறுபது அல்லது எழுபது மைல் நீளமும் இருக்கின்றது. அதைச் சுற்றி

னும் பற்பல உருவங்களுடைய மலைகள் இருக்கின்றன. அம் மலைகளில் பலவித மிருகங்களும், பறவைகளும் வாழ்கின்றன. மலைகளின் அருகாமையில் திருப்பத்தூர் இருந்தாலும், நமது தேசங்களில் இருப்பதுபோல் அங்கு குளிர் கிடையாது. மலைகளின் அடிவாரங்களில் மகத்தான மரங்களும், செழுமையான செடிகளும், பயிர் பச்சைகளும் வனப்பாக ஒளிர்கின்றன.''

மன்ரோ தருமபுரியின் அருகே ஒருசோலையை வைத்தார். அவர் அப்பதியில் இருந்தபோதெல்லாம் அச்சோலையில் தினந்தோறும் அரைமணிநேரம் இன்பமாகக் காலத்தைக் கழிப்பார். அவர் அதைவிட்டுப் பிரிவது தம் அருமைப் பழைய நண்பன் ஒருவனைவிட்டுப் பிரிவதுபோல் தோன்றுவதாகச் சொல்லியிருக்கிறார். கிருஷ்ணகிரி, தருமபுரி, இராயக்கோட்டை, சங்கரிதுருக் முதலிய பதிகளில் அவர் வசித்த பங்களாக்களும், வெட்டிய குளங்களும், கட்டிய சத்திரங்களும், வளர்த்த மரங்களும் இன்னும் இருக்கின்றன. ஆதலால், எந்த உத்தியோகஸ்தர் அப்பக்கங்களில் சென்று எந்த இடத்தில் தங்கினாலும், மன்ரோ துரையின் கவனம் வராமல் இராது. மன்ரோதுரை அவ்விடங்களை விட்டுப் பிரிந்து நூறுவருஷங்களுக்குமேல் ஆயினவென்றாலும், அவரை அங்குள்ள மக்கள் இப்போதும் நினைந்து போற்றுகின்றனர். "உழவர்களின் நண்பா'' என்னும் அவர் அருமைப் பெயர் இன்னும் அழியவில்லை.

பாரமஹால் (Baramahal) என்னும் பெரிய இலாகாவில் ஐதர் அலியும், திப்புவும் நிலவரி விதித்த தன்மையும், அதை வசூல் செய்து வந்த தன்மையும் மிகக் கொடுமையாக இருந்தமையால், ரீட்துரையும், மன்ரோதுரையும் நிலவரி எவ்வளவு வாங்கவேண்டும் என்பதைக் குறித்தும், அதை எவ்வாறு

வசூல் செய்யவேண்டும் என்பதைக் குறித்தும் முதலில் கவனிக்க வேண்டியவர்களாக இருந்தார்கள். அவ்விரு பெருங்குண துரைகளும் நல்லறிவுடனும், பெருங்கருணையுடனும் செய்த ஏற்பாடுகள், குடிகள், அரசாங்கத்தார் ஆகிய இருவர்க்கும் பெரு நன்மையை விளைவித்தன. அவர்கள் செய்த ஏற்பாடே பின்னர் இராயத்வாரி சிஸ்டம் (Rayatwari System) என்ற பெயருடன் சென்னை இராஜதானி முழுவதும் கையாளப்பட்டது. அவர்கள் நியமித்த புதுமுறைப்படி அரசாங்க உத்தியோகஸ்தர்களே உழவர்களிடமிருந்து வரிப்பணம் நேராக வாங்கினார்கள். பிரதி வருஷமும் உழவர்கள் நிலங்களை எவ்வளவு காலம் வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள் என்றும், இன்னும் அதிக நிலங்கள் அவர்கள் வைத்துக்கொள்ளக் கருதுகிறார்களா என்றும், அல்லது வைத்திருந்த நிலங்களிலேயே சிலவற்றை விட்டுவிடுகிறார்களா என்றும் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் விசாரணை செய்தார்கள். ஆனால், ஒவ்வொரு வருஷமும் நிலவரி மதிப்புப் போடுவதில்லை. மேற்கூறிய முறைப்படி உழவர்கள் தாங்கள் பயிர் செய்யும் நிலங்களுக்கு உண்மைச் சொந்தக்காரர்களானார்கள். அவர்கள் துரைத்தனத்தாருக்கு வரி நேராகச் செலுத்தும் அதிகாரத்தையும் பெற்றார்கள். அதுவுமன்றி, அவர்கள் தங்கள் நிலங்களைப் பயிர் செய்ய மற்றவர்களுக்கு விடுவதற்கும், தமக்கு வேண்டியவர்களுக்கு அளிப்பதற்கும், எவருக்கு வேண்டுமானாலும் விற்பனை செய்வதற்கும் அல்லது அடகு வைப்பதற்கும் (Mortgage) சுதந்தரம் பெற்றார்கள். அவர்கள் துரைத்தனத்தாருக்கு வரிப்பணத்தை ஒழுங்காகச் செலுத்தும் வரையில், அவர்கள் நிலங்களைத் துரைத்தனத்தாருக்கு அபகரிக்க அதிகாரம் இல்லை. சரியான மழை இல்லாமல் உழவர்களுக்கு

நஷ்டம் வரும்போது, அந்நஷ்டத்தில் பாதி அல்லது முழுமையும் துரைத்தனத்தார் கட்டிக்கொடுக்கவேண்டும். நிலவரியின் மதிப்பு தானியங்களின் மேலில்லாமல் பணத்தின்மேல் ஏற்பட்டது. அவ்வரி வருஷந்தோறும் மாறுதல் அடையும் வழக்கம் ஒழிந்தது. உழவர்கள் பணம் செலவு செய்து தங்கள் நிலங்களைச் சீர்திருத்திக்கொண்டால், துரைத்தனத்தார் வரியை ஏற்றமுடியாது.

மன்ரோ துரை கேப்டன் ஆலன் (Allen) என்பவருக்கு 1794-வது வருஷம், ஜூன் மாதம் 8-ஆம் தேதியில் தாம் வரி வசூல் செய்யும் முறைமை யாதெனவும், ஐதர் அலி வரி வசூல் செய்த முறைமை யாதெனவும் நன்கு விளக்கி ஒரு கடிதம் எழுதினர். அக்கடிதத்தில் நாட்டின் தன்மை எத்தன்மைத் தென்றும், அதில் விளையும் பொருள்கள் எத்தன்மை வாய்ந்தவை என்றும் எழுதியிருக்கின்றார். இன்னும் அதில் என்ன விசேஷம் என்றால், துரைத்தனத்தார் சாலைவரி, கலப்பைவரி, வீட்டுவரி, வியாபாரவரி, பருத்திவரி முதலிய வரிகளை அறவே ஒழித்துவிட வேண்டுமென்றும் எழுதியிருக்கின்றார். கேப்டன் ஆலன் மன்ரோவின் ஆற்றல்களை மிக வியந்து, அவர் எவ்வாறு பரமஹாலில் பெரிய சீர்திருத்தங்கள் செய்தார் என்று அவரை வியப்புடன் கேட்டனர். மன்ரோ, "எனக்கு நிலவருமானத்தைக் குறித்தும், மற்ற விஷயங்களைக் குறித்தும் பெரிய ஞானம் இருப்பதாகச் சிறிதும் தாங்கள் எண்ணவேண்டாம். நான் தங்களிடத்தில் ஒன்றையும் மறைக்கவில்லை. நாங்கள் புதிதாகச் செய்த நன்மைகள் எல்லாவற்றிற்கும் காரணம் எங்கள் உழைப்பே தவிர புதுமைகளும், நூதன ஆராய்ச்சிகளும் நாங்கள் ஒன்றும் செய்து விடவில்லை. இரவும் பகலும் தளராமல் உழைப்பது

தான் பேராற்றல் என்று சொல்லப்படுவதாகும். இதுதான் எங்கள் உளவு. நாங்கள் வரிப்பணம் வசூல் செய்வதில் புத்தியைச் செலுத்தியதைக் காட்டிலும் அப்பணத்தை அயோக்கியத்தனமாக வசூல் செய்து வந்த மக்களைப் பிடித்துத் தண்டிப்பதில் புத்தியை அதிகமாகச் செலுத்தி வந்தோம். நாம் உழவர்களை ஒழுங்காகப் பாதுகாத்துவந்தால், அவர்கள் நமக்கு ஒழுங்காக வருமானத்தை உற்பத்தி செய்வார்கள்.'' என்று பதில் வரைந்திருந்தார்.

மன்ரோதுரை தம் தந்தைக்கு எழுதிய கீழ்குறிக்கும் கடிதம் அவர் அரசியலில் பெற்றிருந்த பேராற்றலையும், புத்தி நுட்பத்தையும் காட்டுகின்றது:—

"கம்பெனியாருக்கு வருமானத்தை விருத்தி செய்ய வேண்டியது மிகவும் அவசியந்தான். அவ்வாறு செய்வதற்கு முதற்படியாகக் கம்பெனியார் கவனிக்க வேண்டியது யாதெனில், தகுந்த உத்தியோகஸ்தர்களை நியமிப்பதாகும். இல்லையானால், அவர்கள் முயற்சிகள் அனைத்தும் பாழாகும். ஒரு ஜில்லாவில் வழங்கும் பாஷையை அறியாத ஒரு உத்தியோகஸ்தரை அந்த ஜில்லாவிற்குக் கலெக்டராக நியமித்தல் கூடாது. அப்பாஷையைக் கற்றுக்கொள்ளக் கூடிய ஊக்கம் அவருக்கு இல்லையென்றால், ஒரு கலெக்டர் உத்தியோகத்திற்கு இருக்கவேண்டிய ஊக்கம் அவருக்கு எவ்வாறு வரும்? அதுவுமல்லாமல், அவ்வித பாஷா ஞானமில்லாத கலெக்டர் தம் கீழ் உத்தியோகஸ்தர்கள் என்ன சொல்லுகிறார்களோ அதையே நம்பவேண்டியவர்களாக இருப்பார். இன்னும் தம் ஜில்லாவில் என்ன நிகழ்கின்றதென்றும் அவருக்கு அறிய சக்தி இராது. துரைத்தனத்தார் இவ்விஷயம் வரையிலாவது நான் சொல்லுவது சரியென்று முடிவு கட்டியிருப்பது சந்

தோஷிக்கத் தக்கதே. கவர்னர் அவர்கள் 1696-ஆம் வருஷம் ஜனவரி மாதம் முதல்தேதிக்குப் பின்னர் இந்தியா தேசத்தில் வழங்கும் பாஷைகளில் சிலவற்றை அறியாத உத்தியோகஸ்தர்கள் கலெக்டர்களாக நியமிக்கப்படுதல் கூடாதென்று கட்டளை விதித்திருக்கின்றார்.''

"சுதேச பாஷையின் ஞானமும், ஊக்கமும் கலெக்டர்களுக்கு இருக்க வேண்டியது எவ்வளவு அவசியமோ, அவ்வாறே அவர்கள் தேக திடமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டியது அவசியமாகும். ஏனென்றால், அவர்கள் கொடுமையான வெய்யலுக்கும், களைப்பிற்கும், இளைப்பிற்கும் தளராதவர்களாக இருக்கவேண்டும். அவர்கள் தங்கள் ஜில்லாக்களைச் சுற்றித் தாங்களே போய்ப் பார்க்காமற்போனால், கீழ் உத்தியோகஸ்தர்கள் உழவர்களின் தலைவர்களுடன் சேர்ந்து கொண்டு காலமழை இல்லையென்றும், நல்லமழை இல்லையென்றும், பல சாக்குப் போக்குகள் காட்டிக் கம்பெனியின் பணத்தைக் கொள்ளையடிப்பார்கள். சிற்சில ஐரோப்பியர்களே வசிக்கின்ற இந்நாட்டில், வரிவசூல் சம்பந்தமான எல்லா விவகாரங்களும் அந்நிய பாஷையில் நடைபெறுவதால், கலெக்டர்கள் எவ்வாறு தங்கள் வேலைகளைப் பார்க்கின்றார்களென்று கவர்ன்மெண்டார் அறிய முடியாது. கலெக்டர்கள் என்ன சொல்லுகின்றார்களோ அதைத்தான் கவர்ன்மெண்டார் நம்பவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். கலெக்டர்களின் பொய்க்கணக்கைக் கண்டு பிடிக்கப் பலவித மேற்பார்வைகள் (Checks) கவர்ன்மெண்டார் வைக்கலாமென்று கருதுவது வீண்காலம் போக்குவதும், வீண்பணம் செலவழிப்பதுமேயாகும். மேற்கூறிய தீமையை அறவே ஒழிக்க எக்காலத்தும் இயலாதென்பது உண்மையே என்றாலும்,

ஆற்றலும், உழைப்பும் மிகுதியாயுள்ள உத்தியோகஸ்தர் களைக் கலெக்டர்களாக நியமித்து, அவர்கள் பொதுமக்களின் பணத்தில் கை வைக்கப் புத்தி செலுத்தாதபடி அவர்களு டைய சம்பளத்தை உயர்த்திஞல், அத்தீமையைப் பெரும் பாலும் நீக்கிவிடலாம் என்பதில் சந்தேகமில்லை.''

"ஒரு கலெக்டருக்குக் குறைந்தது ஒரு மாதத்திற்கு ஆயிரம் வராகன் சம்பளம் இருக்கவேண்டும். அவர் அந்தப் பதவியை அடைவதற்கு முன்னர் கவர்ன்மெண்டில் ஏறக் குறைய எட்டு ஒன்பது வருஷங்கள் உத்தியோகம் செய்திருக்க வேண்டும். அதற்குப் பின்னர் பத்து அல்லது பன்னிரண்டு வரு ஷங்கள் அவர் கலெக்டர் உத்தியோகம் செய்து தம் சொந்த நாட்டிற்குச் செல்லும்போது, அவர் எவ்வளவு செல்வவந்தன ராக இருக்கவேண்டுமோ அந்த அளவிற்குமேல் செல்வ வந்தனராக இருக்க முடியாது. இரெவினியு போர்டார் (Revenue Board) சிறிது காலத்திற்கு முன்னர் கலெக்டர் களுக்குச் சம்பளம் உயர்த்தவேண்டுமென்று கவர்ன்மெண் டாரை வேண்டிக் கேட்டபோது, கவர்ன்மெண்டார் அது இயலாதென்று மிக வெறுப்புடன் கூறிவிட்டார்கள். இவ் வாறு அவர்கள் சொல்லியது அரசியல் முறைமையையும், மக்களின் இயற்கைத் தன்மையையும் அறிவதில் அவர்களுக்குப் போதிய ஞானம் இல்லையென்பதை நன்கு விளக்குகின்றது. ஏனென்றால், ஒரு மனிதன் தன் உத்தியோகத்திற்காக இவ் வளவென்று கணக்காகச் சம்பளம் வாங்கிச் சுதந்திரம் இல் லாமலிருப்பதை விரும்புவாஞ? அல்லது அவ்வுத்தியோகத் தின் பயஞகப் பொதுமக்களின் பணத்தை ஒருவித ஆபத் தும் இல்லாமல் வஞ்சித்து எடுத்துக்கொள்ளவும், சுதந்தி

ரம் எளிதாகப் பெற்றுக்கொள்ளவும் இருக்கும் வசதியைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புவானா?''

"கலெக்டர்கள் தங்கள் சம்பளத்திற்குமேல் செலவு செய்துகொண்டபோதிலும், சிற்சில வருஷங்களில் பெரிய செல்வ வந்தனர்களாகிவிடுவதை நாம் சாதாரணமாகப் பார்த்துக்கொண்டு வருகின்றோம். அவர்கள் எவ்வாறு அத்தகைய செல்வத்தைப் பெற்று வருகிறார்கள் என்பதைக் கவனிப்போம். அதற்கு வழி மிக எளிதேயாகும். உழவர்கள் கவர்ன்மெண்டாருக்கு வரி செலுத்த வேண்டியது பணத்தொகையாக இருந்தால் அவ்வரியைக் குறைவாகக் கவர்ன்மெண்டாருக்குக் கலெக்டர்கள் காட்டி விடுவார்கள். வரிசெலுத்தவேண்டியது தானியவகைகளாக இருந்தால், அவர்கள் விளைந்த தானியங்களைக் குறைவாகக் காட்டிவிடுவார்கள். கலெக்டர்கள் கல்விமான்களாகவும், குணச்சீலர்களாகவும் இருந்தால் மேற்கூறியவாறு இழிவான செய்கைகளைச் செய்யமாட்டார்கள் என்று எண்ணுவது தவறேயாகும். அவற்றை அவர்கள் செய்தாலும் ஒன்றே; அவர்கள் கீழுள்ள உத்தியோகஸ்தர்கள் செய்தாலும் ஒன்றே. அவர்கள் வருமானத்தின் வளமெல்லாம் தங்கள் கீழ் உத்தியோகஸ்தர்களின் திறமையைச் சார்ந்திருக்கும். இதனால் கவர்ன்மெண்டாருக்கு எவ்வளவு நஷ்டம் என்பதைக் கவனித்துப் பார்க்கவேண்டும். மேற்கூறிய திய வழிகளில் கவர்ன்மெண்டார் வருமானம் குறைகின்றது. அதுவல்லாமல், அவர்கள் வருமானம் அதிகரிக்கவும் வழி இல்லாமல் போய்விடுகின்றது. ஏனென்றால், உழவர்களையும், கவர்ன்மெண்டாரையும் எவ்வாறு வஞ்சித்துப் பணம் சேர்த்துக் கொள்ளலாமென்று சதா சிந்தித்துக் கொண்டிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்குப் பயிர்செய்யும் தொழிலை விருத்தி செய்ய வேண்டிய வழிகளைச் சிந்திக்க நேரம் ஏது?''

"கர்நாடகத்தில் சில பாகங்களில் வரி தானியங்களின் மேல் வசூல் செய்யப்படுகிறது. ஒவ்வொரு நிலத்திற்கும் வரி இவ்வளவென்று வருஷந்தோறும் நியமிக்கப்படுகிறது. வருஷந்தோறும் நிலங்களும் வாடகைக்கு விடப்படுகின்றன. அவைகள் அளவுகளும் வருஷந்தோறும் கணிக்கப்படுகின்றன. ஆதலால், நிலங்களை அளக்கும் உத்தியோகஸ்தர்கள் வருஷந்தோறும் தாங்கள் வாங்குகிற இலஞ்சத்திற்குத் தகுந்தவாறு நிலங்களை அளப்பார்கள். மேற்கூறிய ஒழுங்கில்லா முறைகளால் உத்தியோகஸ்தர்கள் கவர்ன்மெண்டாரையும், உழவர்களையும் அநேக விதங்களாக ஏமாற்றி வருகிறார்கள். வரிவசூல் தானியவகைகளில் செய்யப்படுகிற இடங்களில், தானியங்களை உழவர்களிடம் உத்தியோகஸ்தர்கள் அவற்றின் மதிப்புக்குமேல் கணக்கிட்டுக் கொடுத்து விடுகின்றார்கள். அல்லது ஒவ்வொரு தானியவகைக்கும் விலை இவ்வளவென்று கவர்ன்மெண்ட்டு உத்தியோகஸ்தர்களே நியமித்து, அதற்கு மேலான விலைக்கு உழவர்கள் விற்கக்கூடாதென்று கட்டளை விதிக்கின்றார்கள். அத்தகைய கேவலமான ஏற்பாட்டினால் ஒரு தேசம் விரைவில் நாசமாகிவிடும் என்று ஒருவர் எண்ணக்கூடும். ஆனால், இந்தியதேசத்தில் பால்ய விவாகம் எங்கும் விசேஷமாக இருப்பதால் அவர்களுக்கு ஒரு விதத்தில் நன்மையாக இருக்கின்றது. இந்தியர்கள் எவ்வளவு துன்பங்களுக்கு உள்ளானாலும், தங்கள் சொந்த ஊர்களைவிட்டுப் பிரிய மனம் துணியமாட்டார்கள். அவர்கள் அக்கஷ்டங்களை அனுபவித்தாலும் அனுபவிப்பார்களேயன்றி வெளியூர்களுக்குச் சென்று சுகம் அடைய எண்ணமாட்டார்கள். ஏனென்றால், அவர்கள் தங்கள் சொந்த பதிகளின்மேல் அவ்வளவு அதிகமாக விருப்பம் வைத்திருக்கின்றார்கள். உத்தி

யோகஸ்தர்கள் செய்யும் தவறுகளை அவர்கள் விரைவில் மறந்து விடுகிறார்கள். ஏனென்றால், எப்படியாகிலும் தாங்கள் பிழைத்துத் தீரவேண்டுமே என்று அவர் எண்ணுகின்றார்கள். அடுத்த வருஷத்திலும் தங்கள் கஷ்ட உழைப்பில் வரும் தானியங்களைக் கவர்ன்மெண்ட்டு உத்தியோகஸ்தர்கள் கொள்ளையடிக்கப் போகின்றார்கள் என்பதை நன்கு அறிந்தும், அவர்கள் பயிர் செய்யாமல் இருப்பதில்லை. இவ்வித கொள்ளைகளால் உழவர்களுக்கு உண்டாகும் நஷ்டம் ஒரு பக்கம் இருக்க, கவர்ன்மெண்டார் வருமானம் எவ்வளவு குறைகின்றது என்பதையும் கவனிக்க வேண்டும்."

"ஒரு உழவனுக்கு இரண்டு எருதுகளும், ஒரு கலப்பையுந்தான் தேவை. அவன் அவற்றை வைத்துக்கொண்டு மூன்று நான்கு அங்குலம் தன் நிலத்தை உழுது விதையை விதைத்து விடுகின்றான். அவ்வளவு குறைவாக அவன் உழைத்தாலும், தகுந்த பயன் அடைய மாத்திரம் நிச்சயமாக எண்ணிக் கொள்ளுகின்றான். நாம் நம் உத்தியோகஸ்தர்கள் மூலமாக வரிவசூல் செய்யும் விஷயத்தில் அவர்களுக்கு வைத்துள்ள கஷ்டத்தை மாத்திரம் தவிர்த்துவிட்டால், உழவர்கள் வெறுந்தானியங்களை மாத்திரம் பயிர் செய்வதைக் கவனிக்காமல், தேங்காய், பாக்கு, பருத்தி, சர்க்கரை முதலிய பலவித சரக்குகளையும் தங்கள் நிலங்களில் உற்பத்தி செய்ய ஊக்கம் கொள்வார்கள். அதுவுமன்றி, அவர்கள் நம்மவர்கள் கைத்தொழில்களிலும் அநேகவற்றைக் கைக்கொள்ளுவார்கள். முக்கியமாக அவர்களுக்குச் சால்வைகள் உபயோகப்படுத்த விருப்பம் அதிகம். ஆனால், அவர்களில் மிகச்சிலரே அவற்றைத் தரிப்பார்கள். அநேக பிராம்மணர்கள் குளிர்காலத்தில் மாத்திரம் அச்சால்வைகளை உப

யோகப்படுத்துவார்கள். ஆனால், உழவர்கள் அவற்றை உபயோகப்படுத்த நான் பார்க்கவில்லை. இருப்பினும், அவர்கள் அவ்வாறு செய்வதால் தங்களுக்கு ஆபத்து இல்லையென்று நிச்சயமாகத் தெரிந்தால், தற்போது அவர்கள் உபயோகிக்கும் முரடான கம்பளப்போர்வையை நீக்கி ஒழுங்கான சால்வையைத் தரிப்பார்கள் என்பதில் தடையில்லை. அவர்கள் மேற்கூறிய கம்பளப் போர்வையை மாரிக்காலத்திலும், கோடைக்காலத்திலும் உபயோகப்படுத்துகின்றார்கள். அவர்களை வெய்யிலில் பாதுகாப்பதும் அதுவே, மழையில் பாதுகாப்பதும் அதுவே; பகலில் அமர்வதும் அதன் மீதே, இரவில் உறங்குவதும் அதன் மீதே."

"இந்தியர்கள் ஆடம்பரத்தைச் சிறிதும் விரும்பாதவர்கள் என்று நம்மவர் கொள்ளும் அபிப்பிராயம் தவறு. அவர்களுக்கு நம் தேசத்து அழகிய ஆடம்பரமான எல்லாப் பொருள்களையும் அனுபவிக்க விருப்பம் மிகுதியாக உண்டு என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் உடுத்துவதிலும், உண்ணுவதிலும் நமக்குச் சமானமாகவாகிலும் இருப்பார்கள். ஆனால், குடிப்பதில் மாத்திரம் அவர்கள் நமக்குச் சமானமாக மாட்டார்கள். இந்தியர்கள் நம் அழகிய அருமையான சாமான்களை வாங்க விருப்பமற்றவர்களென்று நாம் நினைப்பது தவறு. அவர்கள் கொடிய வறுமைக்கு அஞ்சியும், தங்களைப் பணக்காரர்களென்று கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் நினைத்து விடுவார்கள் என்பதற்கு அஞ்சியும், தங்கள் வரிகளை கவர்ன்மெண்டார் ஏற்றி விடுவார்கள் என்பதற்கு அஞ்சியுமே நமது தேசத்துப் பொருள்களை அவர்கள் வாங்காமல் இருக்கின்றார்கள். நாம் மாத்திரம் தற்போது வரிவசூல் செய்யும் அநாகரிகமான முறையை ஒழித்து

வருஷந்தோறும் வரி இவ்வளவென்று நியமிப்பதையும் ஒழித்து, உழவர்களுக்கு நிலங்களை அநேக வருஷங்கள் அல்லது எப்போதும் வாடகைக்கு விட்டுவிடுவோமானால், அவர்கள் நமது தேசத்துப் பொருள்களை எவ்வளவு அதிகமாக வாங்குவார்களென்று நான் சொல்லவேண்டியதில்லை. ஆனால், நம் அதிகாரம் எக்காலத்தும் இந்திய நாட்டில் நிலைத்திருக்க வேண்டுமானால், நிலங்களுக்கு எக்காலத்தும் சொந்தக்காரர்களாக இந்தியர்களைச் செய்துவிடக்கூடாது. அநேக ஆண்டுகளுக்கு அதாவது இருபது வருஷங்கள்வரையில்கூட அவர்களுக்கு நிலங்களை வாடகைக்கு விட்டுவிடலாம். அதில் ஒன்றும் நம் அதிகாரத்திற்கு ஆபத்தில்லை. அவர்கள் நிலங்களுக்கு எக்காலத்தும் முற்றிலும் சொந்தக்காரர்களாகிவிட்டால் ஒருகாலத்தில் தங்கள் சுவதந்திரத்தைப் பெற விரும்புவது உலகத்தில் இயற்கையாகும். இதுநிற்க, நாம் இப்போது பெறுகின்ற வருமானமும், பின்னர் வருமென்று நினைக்கின்ற அவ்வருமானத்தின் வளர்ச்சியும், நமக்குத் தகுந்த சேனை இல்லாதவரையில் நாம் நம்பத்தகுந்த பொருள்கள் ஆகமாட்டா என்பது திண்ணம். ஏனென்றால், நம் பகைவர்கள் நமது இராச்சியத்தைத் தாக்குவதற்கும், குடிகளை ஊர்களை விட்டுத் துரத்துவதற்கும் பெருங்கஷ்டம் அடையவேண்டியதில்லை. ஆனால், நாம் அவர்களை அவ்வாறு செய்யவொட்டாமல் தடுப்பதுதான் கஷ்டமான காரியம். ஆகலால், நமக்கு ஆறு ஆயிரம் அல்லது எழுஆயிரம் குதிரை ஆட்கள் எப்போதும் இருக்கவேண்டும். ஒரு பகைவன் நம்மீது படையெடுத்தால் ஆறுமாதங்களில் நமக்கு ஆகும் செலவு நாம் மேற்கூறியவாறு ஆறு ஆயிரம் அல்லது எழு ஆயிரம் குதிரையாட்களைப் பத்து வருடங்கள் வைத்துக்கொள்வதால் ஆகும் செலவுக்குமேல் ஆகும் என்பதில் சந்தேகமில்லை.''

"நமக்குக் காலாட்படைகள் மாத்திரம் இருந்தால், போர் நிகழும் காலங்களில் பல ஆபத்துகள் விளையும். ஒரு போரில் தோல்வி வந்தால், நமது அதிகாரத்திற்கே அழிவு உண்டாகும். இந்தியநாட்டு அரசர்களில் எந்தப்பகை அரசன் நம்மோடு போர்புரிந்து எத்தனை தோல்விகள் அடைந்தாலும், அவ்வரசனுக்கு ஒன்றும் பெரிய தீமை விளையாது. ஏனென்றால், நாம் அவ்வரசனைத் தொடர்ந்து மேலும் அமர் தொடுக்கப்போவதுகிடையாது. ஆனால், அவன் ஒருவெற்றி அடைந்துவிட்டால், நமது சேனையை முற்றிலும் நாசமாக்கிவிடுகின்றான். இந்த உளவை அறிந்துதான் ஐதர்அலி தாம் எவ்வளவு தோல்வியுற்றபோதிலும், நம்மிடத்துப் பல போர்கள் நிகழ்த்திக்கொண்டிருந்தார். அவர் மாத்திரம் சர் அயர் கூட்துரையை ஒருமுறை தோற்கடித்திருந்தால், கர்னாடகத்திலுள்ள சென்னைமாநகரம் தவிர மற்றெல்லாப் பதிகளையும் தம் வசமாக்கிக் கொண்டிருப்பார்; அப்பதிகளிலுள்ள குடிகளை வெளியே துரத்திவிட்டிருப்பார். ஆங்காங்குச் சிதறிக் கிடக்கும் நம் சேனைகளை ஒருங்கு சேர்த்து அவருடன் போர் செய்ய நமக்குப் பெருங்கஷ்டம் உண்டாயிருக்கும். நமக்குக் குதிரைப் போர்ச்சேவகர்கள் 6000 அல்லது 7000 இருந்தால், அவர் அவ்வளவு எளிதாகவும், தைரியமாகவும் நம்மைத் தாக்கமுடியாது. ஆதலால், நமக்குக் குதிரைப்படை இருக்கவேண்டியது அத்தியாவசியமாகும். நாம் அத்தகைய சேனையை வைத்திருப்பது நாம் பன்னிரண்டு கோட்டைகள் வைத்திருப்பதைக் காட்டிலும் சாலச் சிறந்தது. நாம் கர்னாடகத்தின் வரிவசூல் விஷயத்தை ஒழுங்காகக் கவனித்து வந்தால், மேற்கூறிய சேனைக்கு வேண்டிய பணத்தை அதுவே கொடுத்துவிடும்."

"நமக்குத் தகுந்த வலிவுள்ள சேனை இருப்பது நாம் போர்களில் வெற்றி அடைவதற்கு மாத்திரமன்று; நம பக்கத்துள்ள அரசர்கள் நம்மீது படையெடுக்க வொட்டாமல் செய்வதற்கும் அது உதவியாகும். ஏனென்றால், அம்மன்னர்கள் வெற்றி அடைந்த போதிலும், தோல்வி அடைந்தபோதிலும் தங்கள் சேனைகளுக்குப் போரின் நுட்பங்களையும், அருமைப்பாடுகளையும் தினந்தினம் புதிதாகக் கற்றுக்கொடுக்காமல் இல்லை. அவர்களுக்குப் புதுமைகளில் இயற்கையாகப் பிரியமில்லை என்பது உண்மையேயானாலும், மற்ற மேல்நாட்டாரது புதிய போர் முறைகளைப் பார்க்கின்றபோது, அவர்களுக்கும் அம்முறைகளை அனுசரிக்கவேண்டும் என்று எண்ணம் உண்டாகின்றது என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் சிறிது காலத்திற்குமுன் போர்புரிந்த நேர்மையைக் கவனித்தால், நான் சொல்வதின் உண்மை புலனாகும். ஐதர்அலி, ஸிண்டியா (Sindhia), திப்பு ஆகிய இவ்வரசர்கள் போர்புரிந்த தன்மையில் இனி மற்ற அரசர்கள் போர்புரிய முன்வருவார்களானால், முப்பது அல்லது நாற்பது வருடங்களில் நாம் அவர்களை எதிர்க்க முடியாதென்பது திண்ணம். ஆதலால், நாம் நைசாமிடத்தில் இரண்டு சேனைகள் நமக்கு வேண்டிய போது பயன்படுமென்று வைத்திருப்பது மிகவும் பேதைமையாகும். நாம் நினைப்பதெல்லாம் இந்திய நாட்டில் எல்லா அரசர்களும் ஒரே அளவாக அதிகாரமும், வன்மையும் பெற்றிருக்கவேண்டும் (Balance of Power) என்பதேயாகும். அதற்காகவே நாம் மகாராஷ்டிரர்களுக்கு விரோதமாக நைசாம் நவாப்பிற்கு உதவி செய்யவேண்டுமென்று எண்ணுகின்றோம். இது முற்றிலும் தவறு. நாம் மகாராஷ்டிரர்களுக்கு எக்காலத்தும் அஞ்சவேண்டிய அவசியமில்லை.

நைசாமுக்கும், திப்புவுக்குந்தான் பெரிதும் அஞ்சவேண்டும். அவர்கள் இருவரும் மகம்மத்தியர்களாதலால், மதவைராக்கியம் கொண்டு இந்தியா தேசம் முழுவதும் அம்மதம் பரவ வேண்டும் என்னும் நோக்கத்தால் மேலும் மேலும் இராச்சியம் புதிதாகப் பிடிக்கவேண்டுமென்று எண்ணுகின்றார்கள். அதுவுமன்றி, அவர்கள் இந்துக்களைவிட ஐரோப்பியரது போர் முறைகளை அனுசரிப்பதில் ஆர்வம் அதிகமாகக் கொண்டிருக்கின்றார்கள். மகராஷ்டிரர்கள் மேற்கூறிய இரண்டு மகம்மத்திய அரசர்களையும் முற்றிலும் வென்று, அவர்கள் இராச்சியங்களைக் கைப்பற்றிக் கொண்டாலும், நமக்கு இப்போது இருக்கும் ஆபத்து இராது. ஏனென்றால், மகராஷ்டிரர்கள் நம்மைத் தாக்குவதால் தங்களுக்கு ஒரு பயனும் இல்லையென்று கருதி, நம்மைச் சும்மாவிட்டுவிடுவார்கள் ஒருவேளை அவர்கள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் போர் செய்துகொண்டாலும் கொள்வார்கள்; அல்லது அவர்கள் வடதிசைக்கு ஏகி அங்குப் போர் தொடங்கினும் தொடங்குவார்கள். அம்மகராஷ்டிரர்கள் ஐரோப்பியர்களிடத்தில் சண்டை செய்யவேண்டிய காரணமில்லையென்று எண்ணித் தற்போது தாங்கள் கற்றுக் கொண்டிருக்கிற ஐரோப்பியர் போர்முறைகளையும், நுட்பங்களையும் கூடச் சிறிது சிறிதாக மறந்து விடுவார்கள்."

அதிகாரம் ஏழு.

இராஜ தந்திரம்.

மன்ரோ துரையின் ஆற்றலையும், எழுதும் வன்மையையும், இத்துணைத்தென எடுத்துக்காட்ட இச்சிறு புத்தகத்தில் இயலாது. அவர் தம் தினவாழ்க்கையின் தன்மையையும், கிராமங்களில் பிரயாணம் செய்த வரலாறுகளையும், ஆங்காங்

குள்ள மக்களின் வழக்க ஒழுக்கங்களையும், அவர்களுடன் தாம் சம்பாஷணை புரிந்த நேர்மையையும், அவ்வப்போது விசேஷமாகப் பேசப்படும் விஷயங்களையும், இந்திய நாட்டின் நிலைமையையும், அரசாங்கத்தின் தன்மையையும், இராணுவத்தின் குணத்தையும் ஆங்கில அரசாட்சி நிலைபெறுதற்கு முயற்சி செய்யவேண்டிய வழிகளையும் வெகு அழகாக, நகைச் சுவை ததும்ப, கற்பனை அலங்காரங்கள் மிளிரத் தம் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எழுதியுள்ள கடிதங்கள் பல கிடக்கின்றன. அவற்றை யெல்லாம் ஈண்டு எழுத இயலாது. இங்கு எழுதும் கடிதங்களும் முற்றிலும் அவர் எழுதியபடியே எடுத்துக் காட்டுபவை அல்ல. அவர் எழுதிய கீழ்குறிக்கும் கடிதம் மாணவர் வாசித்து இன்புறத்தக்கது:—

"நான் இப்போதுள்ள தருமபுரி என்னும் பதி இன்புள்ள பதியன்று. ஏனென்றால், இங்கு எப்போதும் அரவம் அதிகம். இது கிருஷ்ணகிரியிலிருந்து சேலத்திற்கும், சங்கரி துருக்கிற்கும் செல்லும் சாலையில் அமர்ந்துளது. ஆதலால், அநேக பிரயாணிகள் இப்பதியில் தங்கிச் செல்வார்கள். பிரயாணிகளில் சிலர் எனக்கு இன்பகரமான துணைவர்களாக இருந்தபோதிலும், அவர்களில் பலர் எனக்கு வெறுப்புள்ள வீண் விஷயம் பேசிக் காலத்தைப் போக்கும் மக்களாக இருக்கின்றார்கள். இத்தேசத்தில் நமது நாட்டிலிருப்பதுபோல் சத்திரங்கள் கிடையாது. இவ்வழியாகச் செல்லும் பிரயாணிகள் தெரிந்தவர்களாக இருந்தாலும், தெரியாதவர்களாக இருந்தாலும் வழியில் இருக்கும் எந்த உத்தியோகஸ்தர் வீட்டிலும் தங்கிச் செல்லுவார்கள். வீண் விஷயம் பேசித் தொந்தரவு கொடுக்கும் ஒரு பிரயாணி வந்துவிட்டால் அவரோடு காலத்தைக் கழிக்க நான் எவ்வளவு கஷ்டம்

அடைதல்வேண்டும் என்று நான் சொல்லமுடியாது. இரவும், பகலும் நானே அவருடன் இருக்கவேண்டும். இதைக் காட்டினும் தொல்லை வேறு ஒன்றும் கிடையாது. நான் வர்த்தமான பத்திரிகைகளும், தைத்த சிறு புத்தகங்களும், (Pamphlets) அப்போதைக்கப்போது பிரசுரமாகும் பத்திரிகைகளும் (Magazines) வரும் பிரயாணிகளுக்குக் கொடுத்துவிட்டு, எனக்கு வேலை இருந்தாலும், இல்லாமற்போனாலும் அவர்களை விட்டுப் பிரிந்து நான் பகற்போஜனம் செய்யும் வரையில் தனிமையாக இருப்பேன். பிரயாணிகளில் எவரேனும் என்னைவிடாமல் என்னுடன் வீண்சம்பாஷணை புரிந்து எனக்குக் கஷ்டத்தைக் கொடுத்தால், நான் அக்கஷ்டத்தை நீக்கிக்கொள்ளும்பொருட்டு, அவருக்குத் தேத்தண்ணீரும், சிற்றுண்டியும் அளிப்பேன். எப்படியாகிலும் அவர் என்னை விட்டால் போதும் என்று எண்ணுவேன். பேசும் சுவை சிறிதும் இல்லாத ஒரு பிரயாணியுடன் அமர்ந்து, அவர் கதைகளையும், வரலாறுகளையும் தினைத்துணையும் இன்பின்றிக் கேட்டுக்கொண்டிருப்பதைக் காட்டிலும், நான் மிகக் கடுமையான வெய்யிலில் அந்நேரமெல்லாம் தனிமையாக நடந்து செல்வதை மேலாகக் கருதுவேன். அவர் கதைகளும், வரலாறுகளும் சொல்வதை விட்டு, என்னை வினாக்கள் கேட்பாரானால் எனக்கு உண்டாகும் கஷ்டத்தைக் கடவுள்தான் அறிவார். உலகில் கொலையும், போரும் இல்லாதிருக்கவேண்டும் என்று நாம் தினந்தோறும் கடவுளைப் பிரார்த்திப்பதுகூட அவ்வளவு சிறப்பாகத் தெரியவில்லை. ஏனென்றால், கொலையும், போரும் உலகில் தினந்தோறும் நிகழ்வதில்லை. ஆனால், நமக்குத் தினந்தோறும் தொல்லை அளிக்கும் பிரயாணிகளின் சம்பந்தத்தை நீக்கிவிடுமாறு கடவுளை நாம் தினந்தோறும் பிரார்

திப்பது மேலான காரியம் என்று எனக்குத் தோன்றுகின் றது.”

“தனிமை என்பது அறிவிற்குப் பிறப்பிடம் என்பது உண்மையாக இருந்தால், நான் சில ஆண்டுகளுக்குள் சாலொமன் (Solomon) அல்லது இராபின்சன்குருசோ(Robinson Crusoe) ஆகிய இவர்களைப்போல் புத்திமானுகை ஆய்விடுவேன். இதோடுகூட எனக்கு இன்னொரு அமைப்பும் இறைவன் அளித்திருக்கின்றான். அதாவது, நான் அருந்தும் எளிய உணவாகும். சில தத்துவ ஞானிகள் எளிய உணவுதான் நன்றாக ஜீரணமாகுமென்றும், அறிவை வளர்க்குமென்றும் கூறுகின் றார்கள். அவர்கள் கூற்று எனக்கும் பொருந்துமோ என்பதில் தான் எனக்குச் சந்தேகம் உளது. ஏனென்றால், நான் வேண்டும் என்று எளிய உணவை அருந்தவில்லை. எனக்கு வேறு வழி இல்லாமையால், நான் எப்போதும் எளிய உணவேதான் புசிக்கின்றேன். ஆதலால், உயர்ந்த உண்டியைச் சம்பாதிக்கச் சக்தியற்றவர்கள் தாழ்ந்த உண்டியை அருந்தினால், அவர்களுக்கும் மேற்கூறிய தத்துவ ஞானிகளின் வாக்கின்படி மேற் கூறிய நலம் கிடைக்குமா என்றுதான் எனக்குத்தெரியவில்லை. இந்நாட்டில் சமையற்காரன் எனக்கு ஒரு ஆடு கொண்டுவந் தால், அதைப் பார்ப்பதற்கே பல கண்கள் வேண்டும். ஏனென் றால், அது கொழுமை என்பது சிறிதும் இல்லாமல், மிக ஒல் லியாக இருக்கும். கோழிகளோ இன்னும் வெகு அழகாக இருக்கும். அவற்றை வர்ணிக்க எவராலும் ஆகாது. அக் கோழிகளை மிக ஜாக்கிரதையாக கவனித்து நாம் உண்டி அளித்து வந்தால், அப்போது அவை ஒருவாறு சுமா ராக இருக்கும். ஆனால், அவ்வித ஜாக்கிரதை எனக்கு வராது. ஆற்றுமீன்களில் சிலவற்றைத்தான் நாம் புசிக்

கக்கூடும். அத்தகைய மீன்களில் ஒன்றையும், கோழி ஒன்றையும் ஒன்ருகச் சமைத்து வைத்தால், அவ்விரு மாமி சங்களின் உருசியும் ஒன்ருகவே இருக்கும். சில அறிஞர் கள் நாம் கனிவர்க்கங்களும், பாதம்பருப்பு, சாரைப்பருப்பு முதலிய பற்பல பருப்பு வர்க்கங்களும் அருந்துவது நலம் என்று சொல்லுகின்ருர்கள். ஆனுல், நான் இருக்கும் இப் பக்கத்தில் அவைகள் கானகத்திலும் அகப்படமாட்டா, சோலைகளிலும் அகப்படமாட்டா. சில எலுமிச்சம் பழங்க ளும், வாழைப்பழங்களும் தான் இங்குக் கிடைக்கும். நான் இன்றையதினம் பாதி அரைக்கப்பட்ட மாவைக்கொண்டு காய்ச்சப்பட்ட ஒருவித கஞ்சியைத் தான் குடித்தேன். இன் னும் சில அறிஞர்கள் மென்மையான தேகப்பயிற்சி செய்வ தால் ஒருவருக்கு விஷயங்களை அறியும் சக்தி விருத்தியாகும் என்று சொல்லுகின்ருர்கள். பகலெல்லாம் வெய்யில் காய்ந்து சாயுங்காலம் மழை பெய்யும் தினங்களிலெல்லாம் நான் குதிரைசவாரி செய்ய மிக்க விருப்பம் கொள்வேன். ஆனுல், அவ்வறிஞர்கள் சொல்லும் விஷயத்தில் எனக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லை. கஞ்சி குடிப்பதில் எவ்வளவு விஷயங்களை அறியும் சக்தி விருத்தியாகின்றதோ அவ்வளவு மென்மை யான தேகப்பயிற்சி செய்வதால் அச்சக்தி விருத்தியாகும் என்று எனக்குத் தோன்றவில்லை.''

“கலாசாலைகளில் மாணவர்களுக்குத் தர்க்க சாஸ்தி ரத்தை இளம்பருவத்தில் கற்பிப்பதால் அவர்களுக்கு உலக ஞானம் மிகுதியாக விருத்தியாகின்றதென்று நான் நம்ப வில்லை. அதைக்காட்டிலும், ஒருவர் பற்பல சபைகளிலுள்ள மக்களோடு கலந்து கூட்டுறவு செய்வதால் சிறந்த உலக ஞானத்தை அடைவார் என்பதில் சந்தேகமில்லை. பதி

ஞன்கு, பதினைந்து வயதுள்ள சிறு மாணவர்களுக்குத் தர்க்க சாஸ்திரத்தைப் போதிப்பது பெரிதும் பேதைமையேயாகும். ஒருவர் தேசசரித்திரத்தில் சில பக்கங்கள் வாசித்து மனிதர்களின் மனப்பான்மையைத் துன்பமின்றி இன்பமாக அறிந்து கொள்வது போல், எத்தனை தத்துவ சாஸ்திரங்களை அவர் படித்தாலும் அறிந்துகொள்ள முடியாது என்பது திண்ணம். உலகில் அறிவும், ஆற்றலும் மிக்க பெரியோர்கள் என்று பெயர்வாங்கி இருப்பவர்கள் எல்லோரும் மேற்கூறிய தர்க்க சாஸ்திரங்களை அல்லது தத்துவ சாஸ்திரங்களை அரிஸ்டாடில் (Aristotle) இடத்திலும், மற்ற தத்துவ ஞானிகளிடத்திலும் பாடம் கேட்டவர்கள் அல்லர்.''

''நாம் அநேக ஆண்டுகளாக நைசாமிடத்தில் இரண்டு சிறு சேனைகள் வைத்திருக்கின்றோம். இச்சேனைகள் எவ்விதத்திலும் அவர் அதிகாரத்தை அசைக்கமுடியும் என்று நினைப்பது தவறு. அவற்றால் அவர் தம் சேனையை ஒழுங்கான முறையில் பழக்கிச் சிறப்பாக வைத்துக்கொள்ள அவருக்குப் பயன்படுமேயன்றி நமக்குப் பயன்படாது. அதுவுமன்றி, நாம் சென்ற வருஷம் செய்தபடி, அவருக்கு ஆபத்துவரும் வேளைகளில் நாம் அவமானமின்றி அவரைக் கைவிடும்படியும் அச்சேனைகள் செய்யும்; அல்லது அவர் புரியும் அர்த்தமில்லாத ஒவ்வொரு போரிலும் நம்மைத் தலையிட்டுக்கொள்ளவும் செய்யும். இவைதான் அவற்றால் நாம் அடையும் நன்மைகள். அவர்தான் நமக்குத் திப்புவைக் காட்டிலும் அல்லது மகராஷ்டிரர்களைக் காட்டிலும் உற்ற நண்பர் என்று கருதப்படுகின்றனர். ஆதலால், நைசாம் கடைசியாகத் தொடுத்த போரில் அவர் இருபது பட்டாளங்களிலுள்ள போர்வீரர்கள் நம் ஆங்கிலப் போர்

வீரர்களைப்போல் உடை அணிந்திருந்தனர் என்று அவர் நாட்டிலுள்ள நமது மந்திரி (Resident) மிகக் குதூகலத்துடன் கூறினார். அவர் அவ்வாறு கூறுவதைவிட, நைசாம் செய்த போரில் ஒரு துப்பாக்கியும் கிடையாதென்று அவர் கூறியிருந்தால், நான் சந்தோஷம் அடைந்திருப்பேன். அவ்விருபது பட்டாளங்களிலும் உள்ள போர்வீரர்கள் அவர்களுக்குத் தலைவர்களாக அமர்ந்த உத்தியோகஸ்தர்கள் மாத்திரம் நல்ல சமயத்தில் அவர்களை கைவிட்டுச் செல்லாமல் இருந்திருந்தால், மகராஷ்டிரர்களை நன்கு நசுக்கி இருப்பார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆதலால், நைசாமிடத்தில் இருக்கும் நமது சேனை அவருடைய நம்பிக்கைத் துரோகமுள்ள சேனைத் தலைவர்களை அடக்கி அவர்களை மேலெழச் செய்யாமல் இருப்பதற்குத்தான் பயன்படுகின்றது. ஆதலால், நாம் வெகு புத்திசாலித்தனமாகச் செய்யும் காரியம் என்னவென்றால், நைசாமை தமக்குள்ள ஏராளமான போர் வீரர்களையும், பெருந் தொகைப் பணத்தையும் கொண்டு ஒருவரும் தம்மை அசைக்கக்கூடாத பேராற்றலுள்ள அரசராகச் செய்து, நமக்குத் திப்புவைக் காட்டினும் வன்மையுள்ள பகைவராகும்படி அவரது நிலையை உயர்த்துவதேயன்றி வேறல்ல.''

"திப்பு, நைசாம் ஆகிய இருவரையும் நாம் அடக்க வேண்டியது அவசியமாகும். அவ்வாறு செய்வதால் நமக்கு அவர்கள் இராச்சியத்தில் சிறிது பாகமும் வாராமற் போனாலும் அவசியமில்லை. சமயம் வாய்ப்பின் அவர்கள் இராச்சியத்தில் ஒரு பாகத்தைச் சொந்தமாக்கிக் கொண்டாலும் குற்றமில்லை. திப்புவின் தோல்வியால் நமக்கு ஸ்ரீரங்கப்பட்டணமும், பெங்களூரும் வருவதாயிருந்தால், நமக்குப் பெரிதும்

நன்மையேயாகும். ஒரு அரசனுக்கு ஆறுகளும், மலைகளும் அவன் பகைஅரசன் தன்மீது படையெடுத்து வருவதைத் தடுப்பதற்குத் தக்க சாதனங்கள் என்று அறிஞர்கள் கூறுவது உண்மையே யென்றாலும், ஊக்கமும், ஆற்றலும் மிகுதியாக வாய்க்கப்பெற்ற திப்புவைப் போன்ற பகைஅரசரைத் தடுப்பதற்கு அவை அவ்வளவு சிறந்த சாதனங்கள் என்று எண்ணுவது முற்றிலும் தவறேயாகும். ஆறுகள், மலைகள் ஆகிய இவ்விரண்டு தடைகளைக் காட்டினும் போர்புரிதற்குத் தகுந்த இடங்கள் நம் வசத்தில் இருப்பது மிகச்சிறந்ததாகும். அத்தகைய வசதியான இடங்கள் பெங்களூரும், ஸ்ரீரங்கப்பட்டணமும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இத்தேசத்தில் எல்லா அரசர்களுடைய அதிகாரமும் ஒரு அளவாகவே இருக்கவேண்டும் (Balance of Power) என்று பார்த்துக் கொள்ளவேண்டியது அத்தியாவசியம் என்னும் சட்டம் அவ்வளவு சிறந்ததெனக்கூற இயலாது. அச்சட்டத்தை நாம் இத்தேசத்தில் அனுசரிக்கவேண்டிய விதம் எவ்வாறென்றால், நம் பக்கத்துள்ள மன்னர்கள் நம்மை எக்காரணத்தைக் கொண்டும் தாக்குவதென்றால் அவர்களுக்குப் பெரிய ஆபத்துவந்துவிடும் என்று அவர்கள் அச்சம் கொண்டவர்களாகவே இருக்குமாறு நாம் செய்யவேண்டும். அவ்வாறு செய்வதற்கு நாம் நமது சேனையைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டும். அங்ஙனம் பலப்படுத்திக் கொண்டால், அம்மன்னர்கள் ஒருவரோடு ஒருவர் எவ்வளவு சண்டை செய்து கொண்டாலும், அவர்கள் நாடுகளில் எவ்வளவு கலகங்களும், குழப்பங்களும், மாறுபாடுகளும் நேர்ந்தாலும் நமக்குக் கவலையில்லை.''

"நமது அரசாட்சியில் ஒற்றுமையும், ஒழுங்கும், நிலை பேறுடைமையும் இருக்குமானால், நாம் வன்மையுள்ள பெரிய சேனையை எப்போதும் வைத்துக்கொண்டு, சதா மாறுபாடு களும், நிலைகுலையுந் தன்மையும் உள்ள மன்னர்களின் அரசாட்சிகள் எல்லாவற்றிற்கும் நமது ஆட்சி சால்புடைத்தாக ஒளிரும். மேற்கூறிய ஒழுங்குடனும், வன்மையுடனும் நாம் இருந்தால், தக்க சமயம் வாய்த்தபோது நமக்கு ஆபத்தில்லாமலும், பொருட் செலவில்லாமலும், நமது இராச்சியத்தைப் பெரிதாக்கிக் கொள்ளலாம். அத்தகைய சமயம் வாய்ப்பதற்கு நெடுங்காலம் ஆகாது. நாம் முதலாகக் கவனிக்கவேண்டியது யாதென்றால், திப்புவின் அதிகாரத்தை முற்றிலும் நசுக்கிவிட வேண்டும் என்பதாகும். பின்னர் நாம் ஸ்ரீரங்கப்பட்டணத்தையும், பெங்களூரையும் நம் வசம் வைத்துக்கொண்டு, பக்கத்தரசர்கள் நாடுகளில் போர்களும், கலகங்களும் நேர்ந்தால், நாம் கஷ்டமின்றிக் கிருஷ்ணை வரையில் சென்றுவிடலாம். அத்தகைய கலகங்களும், போர்களும் இத்தேசத்தில் நிகழ்வது சர்வ சாதாரணமாகும். ஏனென்றால், எந்த மன்னன் அரசாட்சியும் இத்தேசத்தில் ஒழுங்குடையதன்று."

"ஐரோப்பாவில் தடைகள் இருப்பதுபோல் இத்தேசத்தில் வெற்றிகள் அடைவதற்குத் தடைகள் இல்லை ஏனென்றால், இத்தேசத்தில் மன்னன் விருப்பந்தான் இராஜாங்கச் சட்டம். வேறு விதமான சட்டங்களும், அரசாட்சி முறைமைகளும் இங்கு இல்லை. நாம் எந்த மக்களையும் அடக்கவேண்டிய அவசியமில்லை. தேசாபிமானமும், சாதி அபிமானமும் உள்ள மக்களும் இங்கில்லை. ஜர்மானியர், பிரான்சுக்காரர், இதாலியர், ஸ்பானியர் என்ற பிரத்தியேகமான மக்கட்சாதியர் இத்தேசத்தில் கிடையாது. எல்லா மக்களும் ஏறக்குறைய

ஒரு மக்கட் சாதியரென்றே சொல்லலாம். ஏனென்றால், அவர்களை ஆட்சி செய்பவர் எவராக இருந்தாலும், அவர்கள் எல்லோரும் இந்துக்கள் என்னும் திருநாமந்தான் பெற்றவர்கள். இத்தேசத்து மக்கள் தங்களை ஆட்சி செய்பவர்கள் ஐரோப்பியர்களாக இருந்தாலும், மகம்மத்தியர்களாக இருந்தாலும், தங்கள் சொந்த அரசர்களாகவே இருந்தாலும் எல்லோரையும் ஒன்றாகவே கருதுகின்றார்கள். அவர்களுக்கு அரசாங்க மாறுபாடுகளில் சிறிதும் கவலை கிடையாது. எவர் வெற்றி பெற்றாலும், எவர் தோல்வியுற்றாலும் அவர்களுக்கு ஒன்றே. அத்தகைய வெற்றியினாலாவது, தோல்வியினாலாவது தங்களுக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை என்று அவர்கள் எண்ணுகின்றார்கள். தங்கள் மன்னர்களின் அதிர்ஷ்டத்திற்குத் தக்கவாறு அவர்கட்கு வெற்றியும், துர் அதிஷ்டத்திற்குத் தக்கவாறு தோல்வியும் உண்டாகின்றன என்று அவர்கள் நினைக்கின்றார்கள். இம்மக்கள் தங்கள் மதவழக்க ஒழுக்கங்களை மன்னர்கள் மாட்சிப்படுத்துகின்ற தன்மைக்கு ஏற்றவாறும், வரிகளைக் குறைக்கின்ற தன்மைக்கு ஏற்றவாறும், அவர்களைத் தங்கள் தலைவர்களாக இருக்க விரும்புவார்கள். ஒரு இராச்சியம் நாசமாகி மற்ற மன்னர்கள் அதன் ஒவ்வொரு பாகத்தையும் பிடித்துக்கொண்டு போகையில், நாம் மாத்திரம் நமது இராச்சியத்தைப் பெரிதாக்கக் கூடாதென்று கருதுவது முற்றிலும் தவறே.

அதிகாரம் எட்டு.

கனரா ஜில்லாவின் கலெக்டர்.

ஸ்ரீரங்கப் பட்டணம் வீழ்ச்சியுற்றதும், ஆங்கிலேயர்களுக்குக் கனரா என்னும் ஜில்லா சொந்தமாயிற்று. அந்த ஜில்லாவின் கலெக்டராக மன்ரோதுரை நியமிக்கப்பட்டார். அங்கு அவர் 1799-ம் ஆண்டு ஜுலைமாதத்திலிருந்து 1800-ம் ஆண்டு அக்டோபர் மாதம்வரையில் உத்தியோகம் செய்தார். அவ்விடத்திற்குச் செல்ல மன்ரோதுரைக்குச் சிறிதும் மனமில்லை. அவர் மிக மனவெறுப்புடனே வேறு விதி இல்லாமையால் அங்குச் செல்லச் சம்மதித்தார். மன்ரோதுரை பரமஹால் ஜில்லாவை விட்டுச் செல்ல மனம் வருந்தினர். அவர் அவ்வழகிய பூபாகத்தை விட்டுப் பிரியும்போது கீழ்வருமாறு கூறினர்:—

"நான் பாரமஹாலையும், கர்னடகத்தையும்பிரியுங்காலத்து நான் என் சொந்த தேசமாகிய இங்கிலாந்தை விட்டுப் பிரியும்போது கொண்ட மனவருத்தத்திலும் அதிக மனவருத்தம் அடைந்தேன். ஏனென்றால், நான் இங்கிலாந்தை விட்டுப் பிரிகையில், வெளிதேசத்தில் பெருங்களிப்பும், உற்சாகமும் எய்தலாமென்று வீண் நம்பிக்கை கொண்டிருந்தேன். ஆனல், நான் இப்போது செல்லுகின்ற கனரா ஜில்லாவில் எனக்கு ஒருவித சந்தோஷமும் இராதென்று நினைக்கின்றேன். இருபது ஆண்டுகளாக வசித்திருந்த அழகிய நாட்டையும், அத்துணைக் காலமாக அளவளாவி ஆனந்தம் கொண்டிருந்த அருமை நண்பர்களையும் விட்டுப் பிரிவதற்குப் பிரதிபயனாக எனக்குக் கனராவில் என்ன இருக்கின்றது என்று நான் நினைந்து மனம் உடைந்தேன். அதுவுமன்றி

நான் இத்தனை ஆண்டுகளாகத் தேகம் வருந்த எவ்வித கஷ்டத்திற்கும் பின்வாங்காமல் என் உத்தியோகத்தில் உழைத்ததுபோல, இன்னும் உழைப்பதென்றால் எனக்கு மிக வெறுப்பாகவே தோன்றிற்று. அவ்வாறு உழைக்கும்போது எனக்குச் சிற்சில இன்பப் போக்குகளில் திளைப்பதற்கும், நான் விரும்பும் வண்ணம் அருமையான புத்தகங்களை வாசித்து அவற்றின் சாரத்தைப் பருகுதற்கும் எனக்கு என் உத்தியோகத்தில் ஓய்வு கிடைக்காதே என்று எண்ணும்போது என் மனம் தளர்ச்சி அடைந்தது. அதுவுமன்றி, அவ்வித கடின உழைப்பால் என் தேகமும், மனமும் வன்மை இழந்து, பண்பற்றுப் போகுமே என்றும் எண்ணி மனம் வருந்தினேன். கர்னல் ரீட் தம் உத்தியோகத்தை விட்டதும், நான் பரமஹால் ஜில்லாவில் பல்லாண்டு பட்ட கஷ்டங்களின் பயனாக மனவமைதியுடன் அமர்ந்து இனியேனும் கஷ்டமின்றிச் சிறிதுகாலம் வாழலாம் என்று எண்ணி இருந்தேன். ஏனென்றால், பரமஹால் ஜில்லாவில் நிலஅளவு, நிலவரி, நீதிமுறை முதலிய எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி விட்டமையால், இனி அந்த ஜில்லாவில் அதிக கஷ்டப்பட்டு உழைக்கவேண்டிய அவசியம் ஒன்றுமில்லை. மேலும் அந்த அழகிய நாட்டில் இருக்கும் ஒவ்வொரு மரமும், ஒவ்வொரு மலையும் என்மீது ஒருவித இன்பச்சாயலை வீசி என் உள்ளத்தைக் கவரும்.''

“நான் இனிமேல் எனக்கு முன்பின் தெரியாத இடத்தில் புதிய நண்பர்களைச் சம்பாதிக்கவேண்டும். எனக்குக் கனராவில் உள்ள ஒரு மனிதனும் பழக்கமும் கிடையாது; அவர்களில் ஒருவரையும் நான் கண்டதும் கிடையாது. அந்த ஜில்லாவை நான்தான் ஒழுங்குபடுத்தவேண்டும் என்று எனக்கு என்மேல் உத்தியோகஸ்தர்கள் கட்டளை விதிக்காமல் இருந்

தால், நான் அங்குச் செல்வதற்கு ஒரு விதத்திலும் மனம் இசைந்திருக்கமாட்டேன். நான் ஒரு சமயத்தில் அவ்விடம் செல்லமாட்டேன் என்று முடிவாக என்மேல் அதிகாரிகளுக்குச் சொல்லி இருந்தேன். ஆனால், நான் சில தினங்களாகச் சிந்தனை பெரிதும் செய்து, இரண்டு காரணங்களைக்கொண்டு கனராவிற்குச் செல்ல மனம் துணிந்தேன். ஒன்று நான் பொதுமக்கள் நலத்திற்காக உழைக்கவேண்டியது எனது இன்றியமையாக் கடமை என்பதாகும். மற்றொன்று நான் பரமஹால் ஜில்லாவில் இல்லாமல் கனராவில் இருந்தால் இரண்டொரு வருஷங்கள் முன்னதாக என் சொந்த தேசத்திற்குச் செல்லலாம் என்று நான் எண்ணியதாகும்.''

மன்ரோதுரை கனரா ஜில்லாவை எவ்வளவு வெறுத்தாரோ அத்தன்மைக்கேற்ப அங்கு அவருக்கு ஒருவித மனக்கிளர்ச்சியும், களிப்பும் இல்லாமையால், அவர் அங்குச் சென்றதும் முன்னினும் அதிக வெறுப்புற்றுத் தம்மை அவ்விடத்தைவிட்டு மைசூர், பரமஹால், கர்நாடகம் ஆகிய இம்மூன்று இடங்களில் எந்த இடத்திற்கேனும் தமக்கு எவ்வளவு நலம் குறைவதாக இருந்தாலும் மாற்றிவிடுமாறு தம் மேல் அதிகாரியாகிய காக்பர்ன் (Cock Burn) என்னும் துரைக்கு எழுதிக் கேட்டுக்கொண்டார் ஆனால், அவர் மன்ரோ துரைக்கு எழுதிய பதில் கீழ்வருமாறு:—

"தங்களுக்குக் கனராவில் இருப்பது மிகக் கஷ்டமாக இருக்கின்றது என்பதை அறிய மனம் வருந்துகின்றேன். ஆனால், நான் தங்களை அங்கிருந்து மாற்றுவதென்றால், தங்கள் கஷ்டத்தினும் என் கஷ்டம் பெரிதாகின்றது என்று உறுதியாகச் சொல்லுவேன். ஏனென்றால், நான் தங்களை மாற்றுவது இராஜாங்கத்திற்கே விரோதமான காரியம் ஆகும்.

ஏனென்றால், தங்கள் ஆற்றலும், உண்மை உழைப்பும் அத்துணைச் சிறந்தனவென்று நான் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. தங்களைப்போல் உழைப்பவரும், கனராவைப் போன்ற சீர்குலைந்த ஜில்லாவைச் சீர்படுத்தத் தகுந்த யோக்கியதை உடையவரும் தங்களையன்றி வேறு ஒருவரும் கிடையாது என்பது நிச்சயம். தாங்கள் எடுத்துக் கொள்ளும் கஷ்டத்திற்குத் தகுந்த பரிசு இன்னதென்று நான் சொல்ல முடியாதென்பது உண்மை என்றாலும், தாங்கள் எல்லாக் கஷ்டங்களையும் தவிர்த்துக் கொள்ளும் ஆற்றல் எய்தப் பெறுவீர்கள் என்றும், கனராவை ஒழுங்குபடுத்திய பின்னர் தங்களுக்குத் துரைத்தனத்தார் தக்கவாறு நன்றி காட்டுவார்கள் என்றும் முற்றிலும் நம்புகின்றேன்.''

மேற்கூறியவாறு எழுதிய அரிய புகழ் மிக்க பதிலை வாசித்ததும், மன்ரோ துரைக்கு மகிழ்ச்சியும், ஊக்கமும் பெரிதும் உண்டாயின என்று கூறலாம். அங்ஙனமில்லை எனினும், அவர் ஊக்கத்தைச் சிறிதும் தளராமல், தமக்கு விதித்த கடினமான வேலையைச் செம்மையுற நிகழ்த்த ஆரம்பித்தனர். அவர் ஒரு வருஷத்தில் அந்த ஜில்லாவை நன்கு சீர்திருத்தம் செய்து, ஒழுங்கான நிலைக்குக் கொண்டுவந்து விட்டார். மன்ரோதுரை கனராவில் ஒருவருஷத்தில் உழைத்த உழைப்பு பாமஹால் ஜில்லாவில் ஏழு ஆண்டுகளில் உழைத்த உழைப்பைக் காட்டிலும் அதிகம் என்று அவரே கூறி இருக்கின்றனர். அவர் கனராவில் இருக்கும் வரையில் கர்னல் வெல்லெஸ்லி துரை அவர்களிடம் அரசியல் சம்பந்தமாகவும், போர்நுட்பத்தின் சம்பந்தமாகவும் கடிதங்கள் வரைவதுண்டு. கர்னல் வெல்லெஸ்லி விரைவில் மன்ரோ துரையின் பேரறிவையும், போராற்றலையும் பெரிதும் பாராட்டி, அவருடைய அபிப்பிரா

யத்தையும் அப்போதைக்கப்போது கேட்பதுண்டு. மன்ரோ கனுராவில் உள்ள வரையில் தமக்கு எவ்வளவு அதிகமாக உத்தியோகத்தில் வேலை இருந்தபோதிலும், தம் வாழ்க்கையில் எவ்வளவு குறைகளும், கஷ்டங்களும் நிறைந்திருந்த போதிலும் தம் சகோதரிக்குக் கடிதங்கள் ஒழுங்காக வரைந்து கொண்டுபோவதில் தளர்ச்சியுறவில்லை. அத்தகைய கடிதங்கள் ஒவ்வொன்றிலும் அவரது கல்விச்சுவையும், நகைச்சுவையும், சொற்சுவையும், பொருட்சுவையும் நிறைந்து பொலியும். அக்கடிதங்களில் ஒன்றை இங்கே குறிப்பது இதை வாசிப்போருக்கு மகிழ்ச்சியை ஊட்டும் என்று நினைக்கின்றேன். அக்கடிதம் கீழ் வருமாறு :—

"அருமைச் சகோதரியே,

இப்போது எனக்குள்ள கடினமான வேலையை நோக்கும்பொழுது, உனக்குக் கடிதம் எழுத எனக்குச் சிறிதும் ஓய்வே இல்லை. இத்தகைய பெரிய கஷ்டம் உத்தியோக சம்பந்தமாக எனக்கு வரும் என்று நான் தினைத்துணையும் நினைக்கவில்லை. ஒவ்வொரு நாளும் விடியற்காலையில் இருந்து இரவு பன்னிரண்டு மணி வரையில் எனக்கு வேலை மிகுதியாக இருக்கின்றது. நான் உணவு அருந்துகின்ற நேரம்தான் எனக்கு ஓய்வு நேரம் என்று சொல்லவேண்டும். இந்நேரம் எல்லாம் ஒன்றுசேர்ந்தால் ஒரு மணி நேரத்திற்குமேல் ஆகாது. நான் இப்போதுள்ள ஜில்லாவில் நிலவருமான சீர்திருத்த சம்பந்தமாகவும், கொலைகளையும், களவுகளையும் கண்டுபிடிக்கும் முயற்சிகளின் சம்பந்தமாகவும் பெருங் கஷ்டம் அடைகின்றேன். இத்தகைய ஒழுங்கற்ற நிலையில் இந்நாடு இருக்கின்ற காரணம் என்னவென்றால், நெடுங்காலமாக இந்நாட்டில் யோக்கியதையும், ஒழுங்கும் இல்லாத மன்னர்கள் ஆட்சி

புரிந்து வந்ததேயாகும். தற்போது என்னைப்போல் கூடாரத்தில் வசிக்கின்ற ஒரு மனிதனுக்குத் தனிமையாக இருப்பது இயலாத காரியம். நான் இங்குத் தனிமையே இனிமை என்று கருதினாலும் என்னை விடுபவர்கள் இல்லை; கூடாரத்தில் மக்கள் கூட்டத்திற்குக் குறைவில்லை.நான் தனிமையாக இருக்கச் சாக்குகள் எத்தனை சொல்ல முயன்றாலும் பயனில்லை. சாதாரண வீடாக இருந்தாலும், அதுவும் மெத்தையாக இருந்தால் சாக்குகள் பலிக்கும். எனக்கு மனவமைதி நான் படுத்துறங்கும்போது தான் உண்டாகும். ஆனால், நான் படுக்கும் நேரம் இரவில் அகால நேரமாக இருப்பதால், என் தேகத்திற்கு ஆரோக்கியம் அளிக்கக்கூடிய அளவு எனக்கு நித்திரை கிடையாது. இருப்பினும் பெருந்தகையார் சாங்கோ (Sanhco) ஒரு கவர்னர் நன்றாக மாத்திரம் போஷிக்கப்பட்டால் எத்துணைப் பெரிய தீவையும் ஆட்சி செய்யலாம் என்று கூறிய வாக்கை உண்மையாக நம்புகின்றேன்.''

"நான் நேற்று காலையில் ஏறக்குறைய அரைமைல் அகலமுள்ள ஒரு நதியைக் கடந்து, பின்னர் கால்நடையாகச் சென்றேன். தகுந்த சாலை இல்லாமையால், நான் வெகு தூரம் நடந்தே செல்லவேண்டியதாயிற்று. அவ்வாறு நடந்து கடைசியாக ஒரு நதியின் முனைக்கு வந்தேன். அதன் அகலம் சுமார் ஆயிரம் கஜம் இருந்தது; நீரோட்டமும் மிக விரைவாக இருந்தது; படகுகள் வேண்டிய அளவுக்கு இல்லை; மக்களும் திரளாக இல்லை. ஆதலால், நான் ஒரு மரத்தின் கீழ் பொறுமையாக இரண்டுமணி நேரம் ஒரு படகு கிடைக்கும் வரையில் அமர்ந்துகொண்டிருந்தேன். அதற்குள் அநேக உழவர்கள் என்னிடம் வந்துவிட்டார்கள். அவர்கள், 'ஐயா, எங்களுக்குத் தானியம் இல்லை; ஆடுமாடுகள் இல்லை; பணம்

இல்லை; நாங்கள் எவ்வாறு வரிப்பணம் கொடுப்போம்.'' என்று என்னிடம் கூக்குரலிட்டார்கள். அவர்கள் எப்போதும் அவ்வாறு கூக்குரலிடுவது இயற்கை. ஏனென்றால், இந்தியாவில் இருந்த ஒழுங்கற்ற மன்னர்கள் அவர்களை அநியாயமாக இம்சித்து வரிவசூல் செய்து வந்தமையால், அவர்களுக்கு எப்போதும் 'வறுமை வறுமை' என்று சொல்லிக் கொண்டிருப்பது வழக்கமாய் விட்டது. அவர்கள் அவ்வாறு பொய் சொல்வது தவறு என்பதையும் மறந்துவிட்டார்கள். அவ்வுழவர்களின் கருத்து என்னவென்றால், தாங்கள் அவ்வாறு வறுமை வறுமை என்று சொல்லாவிட்டால் அவர்கள் வரிகளைத் துரைத்தனத்தார் உயர்த்திக் கொண்டே போவார்கள் என்று அவர்கள் அஞ்சினதேயாகும். ஆதலால், அவர்கள் அத்தகைய பாடம் என்னிடம் படிப்பதில் பயனில்லை என்று உணரும் வரையில், நான் அவர்கள் குறைகளைக் கேட்டுக்கொண்டிருக்கவேண்டும். அவர்கள் அவ்வாறு அறிதற்குச் சில மாதங்கள் ஆகும். உழவர்கள் சும்மாய் இருப்பதால் தங்கள் வரி ஒருபோதும் உயர்த்தப்படமாட்டாது என்று அவர்கள் நன்கு உணரவேண்டும். என்னிடம் வந்த உழவர்கள் மகாராஷ்டிரர்கள். அவர்கள் பேசும் பேச்சு மிக வெறுப்பாக இருந்தது. ஆனால், நான் அதையும் ஒரு செவிடன்போல் கேட்டு வியந்து கொண்டிருந்தேன். நான் இவ்வாறு சொல்வதால் அவர்கள் பாஷையின் அழகை நான் வியந்தேன் என்று எண்ணிக்கொள்ள வேண்டாம். நமது யார்க்ஷையர் (Yorkshire) நாட்டுப்புறத்தான் பாஷையும், அவர்கள் பாஷையும் அழகில் ஒன்றே. அவர்களிடத்தில் நான் சம்பாஷணை புரிவதை ஒரு படகு வந்ததும் நிறுத்திவிட்டேன். அவர்கள் என்னை விட்டுப் பிரிந்ததே எனக்குப் போதுமென்றிருந்தது.''

"நான் இன்னும் இரண்டு மைல்கள் கால் நடையாகச் சென்றேன். பின்னர் ஒரு சிறிய கிராமத்தில் தங்கினேன். மொத்தம் ஆறு மைல்கள்தான் நான் பிரயாணம் செய்திருந்த போதிலும், ஆறு மணி நேரத்திற்குமேல் ஆய்விட்டது. எனது கூடாரம் தயார் செய்யப்படாமையால், நான் ஒரு கோயிலில் போடப்பட்டிருந்த பந்தலின்கீழ் போய்த் தங்கினேன். அங்குத்தான் நான் காலைப் போஜனம் அருந்த வேண்டியதாக இருந்தது. நான் எத்தனை கோப்பை தேத்தண்ணீர் பருகினேன் என்று எனக்கு இப்போது கவனமில்லை. நாளைக்குக் கவனப்படுத்தி அதை உனக்கு அறிவிக்கின்றேன். நான் காலைப் போஜனத்தை முடித்துக் கொண்டதும், என் கூடாரமும், எருதுகளும் வாராமையால், நான் ஒரு காரியமும் செய்யத் தோன்ருமல், வெளியே சிறிது தூரம் சுற்றிப் பார்க்கலாமென்று எண்ணம் கொண்டேன்."

"கஞராவில் மக்கள் மகிழ்ச்சியுடன் பார்த்துச்செல்ல ஒரு இடமும் இல்லை. ஏனென்ருல், எங்கும் பூமி காடு முரடாகக் காணப்படுகின்றது. உலகில் வேறு எங்கும் அவ்வாறு இராதென்று நினைக்கின்றேன். இங்குள்ள சிற்சில சிறிய மைதானங்களும் ஒழுங்காக இல்லை. மலைகளில் கற்பாறைகள் நிறைந்திருப்பதாலும், மரங்களும், செடிகளும் அடர்ந்திருப்பதாலும், அவற்றின்மேல் ஏறிப் பார்ப்பதற்குச் சௌகரியம் இல்லை. இருப்பினும், நான் ஒரு மலையின்மீதேறி, உச்சியிலிருந்த ஒரு பெரிய கற்பாறையின்மேல் போய் நின்றேன். அங்கிருந்து சுற்றியுள்ள இயற்கைக் காட்சியின் வனப்பை உற்று நோக்கினேன். ஒரு அழகிய நதி பள்ளத்தாக்குகளில் சுற்றிச் சுற்றிச் செல்வதும், அதிலிருந்து பல கிளைகள் பிரிந்து செல்வதும் பார்வைக்கு அழகாகத் தோன்றின.

இதையன்றி வேறு வனப்புள்ள காட்சி ஒன்றும் அங்குக் காணப்படவில்லை. பின்னர் நான் என் இருப்பிடத்திற்கு வந்தேன். என் கூடாரமும், எருதுகளும் வந்திருந்தன. என் கூடாரத்தில் அநேக மக்கள் இருந்தனர். அவர்கள் என்னை இரவு பன்னிரண்டு மணி வரையில் விடவில்லை. மறுநாட் காலையில் நாங்கள் பிரயாணம் செய்தோம். முதல் 1 மைல் வரையில் நாங்கள் பயிர் செய்யப்பட்ட நிலங்களின் வழியாகச் சென்றோம். பின்னர் சுமார் பத்து மைல்கள் வரையில் எங்கள் வழி பெரிய கானகமாகவே இருந்தது. அதன் பின்னர் நாங்கள் ஒரு மலையடி வாரத்தில் போய்த் தங்கினோம். அங்குள்ள காட்சியை ஏதேனும் ஒரு உயர்ந்த இடத்தில் இருந்து பார்த்திருந்தால் மிக அழகாகவே இருந்திருக்கும். ஆனால், நான் அவ்வாறு பார்ப்பதற்கு வசதி இல்லை. ஆதலால், நான் என்மேலிருந்த ஆகாயத்தையும், புதர்களின் இடையே காணப்பட்ட சில வெளிகளையும் தான் கண்டு மனத் திருப்தி அடைந்தேன். நான் சென்று கொண்டிருந்த சாலையை ஒரு விதத்தில் விரும்பினேன். ஏனென்றால், அது நான் மிகக் கஷ்டப்பட்டு உழைத்துக் களைத்த நாட்டிலிருந்து என்னை வேறு நாட்டிற்குக்கொண்டுபோயிற்று. நாங்கள் ஒரு மலை ஓரத்திற்குப் போனோம். என் கூடாரம் சிறியதாக இருந்த போதிலும், அங்கு அதைப் போடுதற்கு தகுந்த இடமில்லை. நான் என் கூடாரத்தைப் பற்றி ஒருசிறிதும் கவலையுறவில்லை. ஏனென்றால், மூங்கில்களின் கீழும், மற்ற மரங்களின் கீழும் எனக்கு ஏராளமான நிழல் இருந்தது. அம்மரங்களின் கீழ் அமர்ந்தே நான் என் காலைப் போஜனத்தை அருந்தலாமென்று எண்ணிக் கொண்டேன்.''

"கனாராவில் தகுந்த உணவுப் பொருள் இல்லை. நான் குடித்த தேத்தண்ணீர் மிகவும் கேவலமானது. ஏனென்றால், நான் பம்பாயிலிருந்து வரவழைத்த தேயிலை மிகக் கீழ் தர

மானது. ஆனல், நான் அவ்வித தேயிலையை வரவழைக்க வில்லை. எனக்கு அனுப்பிய வியாபாரி அவ்வாறு என்னை ஏமாற்றிவிட்டான் என்று தான் சொல்லவேண்டும். நான் பெற்ற ரொட்டியோ செப்பத் தரமல்ல. இப்போது நான் இருக்கும் இடத்திற்கு அருகேயுள்ள சிறு ஆற்றில் காணப் படும் ஒரு கல்லின் கனம் எவ்வளவோ அவ்வளவு அந்த ரொட்டியின்கனம் இருக்கும். அதை எனக்கு விற்ற மனிதன் எவ்வளவு கறுப்போ அவ்வளவு கறுப்பு அது குறையாமல் இருக்கும். அவ்வாறிருந்தும், அது அரிசியைக் காட்டினும் சிறந்தது என்று தான் எனக்குத் தோன்றிற்று. ஏனென்ருல், சுமார் மூன்று மாதங்களாக அரிசியே அருந்திக்கொண் டிருந்த எனக்கு ரொட்டியைக் கண்டதே ஒரு இன்பம் தட் டிற்று. அந்த ரொட்டியுடன் சிறிது வெண்ணெயும் சேர்ந்த போது எனக்கு இராஜ போஜனமாகத் தோன்றிற்று. வெண்ணெயின் வளத்தைச் சொன்னல் வெகு அழகாக இருக்கும். அதற்கு வர்ணங்கள் ஏழுக்குக் குறையாமல் இருக் கும் இத்தரத்தில் உள்ள அவ்வெண்ணெயும் மிகக் குறை வாகவே கிடைக்கும். உன் நல்ல காலம் நீ இந்த நாட்டில் இல்லாமையால், வெண்ணெய் ஏன் இங்கு அவ்வளவு அருமை என்று ஆச்சரியப்படுவாய். அதற்குத் தக்க காரணம் உண்டு. இந்நாட்டில் உள்ள பசுக்கள் எல் லாம் உருவத்தில் சிறியவை, வளத்தில் தாழ்ந்தவை. நமது நாட்டு மக்களில் ஒருவருக்கு வேண்டிய வெண்ணெயின் அளவு, இந்நாட்டுப் பசுக்கள் ஐம்பது அளிக்கும் வெண் ணெயை ஒருங்கு சேர்த்தாலும் ஆகாது. அப்பசுக்கள் கறுப்பாக இருக்கும்; ஆடுகளைக்காட்டிலும் அதிக உயரம் இரா. அவைகள் மிகக் குறைவாக வெண்ணெய் அளிப்

பதால், ஒருவரும் வெண்ணெயை விலைக்கு விற்க முன்வருவ தில்லை. ஒவ்வொரு குடியானவனும் தன் பசு கொடுக்கும் பாலை ஒரு குடத்தில் ஊற்றி, அரைமணிநேரம் நன்றாகக் கடைந்த பிறகு எடுக்கும் வெண்ணெய் நீ உன் பேனாக்கத்தி யின் நுனியில் ஒரு தடவைக்கு உண்ண எடுக்கும் வெண் ணெயின் அளவுதான் இருக்கும். ஆதலால், எனக்கு வெண் ணெய் சம்பாதிப்பது என் வேலைக்காரனுக்கு எவ்வளவு கஷ் டமான வேலை என்று நான் சொல்லவேண்டியதில்லை அவன் ஆறு பென்சுக்கு வெண்ணெய் வாங்க அநேக வீடுகளில் நுழையவேண்டும். அத்தொகைக்குக் கிடைக்கும் வெண் ணெய் அனைத்தையும் ஒன்று சேர்த்தால் நீ தினந்தோறும் உன் ரொட்டியில் வைத்துப் புசிக்கும் வெண்ணெயின் அள வுக்கு மேலிராது. நான் என் காலைப் போஜனத்தை முடித்துக் கொண்டு இந்திய நாட்டுப் புலவர் சொல்லுகின்றபடி கானகத் தின் கண்ணுள்ள அமைதியின் ஆழத்தைக் கூர்ந்து கவனித் துக்கொண்டு ஓரிடத்தில் அமர்ந்திருக்கையில், அருகாமை யிற் செல்லும் சிறு ஆறு உன்னைக் கவனப்படுத்தியது. ஏனென்றால், நீ என் நண்பர்கள் எல்லோரைக் காட்டிலும் இத்தகைய இயற்கைக் காட்சியின் அழகில் அதிக இன்பம் கொள்ளுகின்றவள்.''

"நான் தனிமையாகப் பிரயாணம் செய்யும் வரலாறு களைக் கேட்க நீ மிகவும் விரும்புகின்றவள் ஆதலால், நான் உன்பொருட்டு என் பிரயாணத்தின் வரலாற்றை முற்றிலும் வரைய இயன்றாலும் இயலாமற்போனாலும், எழுதுவதே சரி யென்று தீர்மானித்துவிட்டேன். நானிருந்த கானகம் மிக அடர்ந்திருந்தமையால், என் கூடாரத்தைப் போடுவதற்கு ஒரு தகுந்த இடத்தை வெகுநேரம் தேடவேண்டியதாயிற்று.

அந்த இடத்தில் சில பிரயாணிகள் தங்கிச் சென்றார்கள் என்று தெரியவந்தது. அவர்கள் அங்குச் செழிப்பாக வளர்ந்திருந்த புல்லைக்கொளுத்தி, இரவில் புலிகள் வரவொட்டாமல் தங்களைப் பாதுகாத்துக் கொண்டார்கள் என்றும் நாங்கள் அறியலானோம். அப்புல் நாங்கள் அங்குச் சென்றபோதும் சிறிது எரிந்துகொண்டிருந்தது. என்னுடன் வந்த மனிதர்கள் புலிகள் வருமென்று பெரிதும் அஞ்சி, இருள் வந்ததும் தங்களைச் சுற்றித் தீ மூட்டினார்கள். அதுவுமன்றி, அவர்கள் இரவெல்லாம் உறங்காமல், ஒருவரை நோக்கி ஒருவர் பெருங்கூச்சல் செய்து கொண்டிருந்தார்கள். நான் எப்போதும் என் படுக்கையில் படுத்துக்கொண்டால், சிறிது நேரங்கூட விழித்துக்கொண்டிருப்பது வழக்கமல்ல. ஆதலால், நான் படுத்துக்கொண்ட சில நிமிஷங்களுக்குள் அவர்கள் இட்ட கூக்குரல்களைப் பொருட்படுத்தாமல் நன்றாக உறங்கிவிட்டேன். ஆனால், நான் பொழுதுவிடிய இரண்டுமணி நேரத்திற்கு முன்னரே என் துணைவர்கள் செய்த சப்தத்தினாலேயோ அல்லது பெருங்குளிரினாலேயோ விழித்துக்கொண்டேன். எனக்குத் தகுந்த போர்வை இல்லாமையால், நான் என் உடைகளை முற்றிலும் தரித்துக்கொண்டு மறுபடியும் உறங்கினேன். தெர்மாமிடரில் (Thermometer) 47 டிக்ரிகள் தான் இருந்தன. அந்த அளவு ஸ்காத்லாந்தில் (Scotland) இருந்தால் குளிர் என்று சொல்லவேமாட்டோம். ஆனால், இத்தேசத்தில் அந்த அளவு பெருங் குளிரைக் கொடுக்கின்றது. எனக்கு இங்கு உண்டாகிய குளிரைப்போல் இங்கிலாந்தில் மிக குளிர் காலத்தில் கூட இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. அதற்குக்காரணம் நாம் பகலெல்லாம் 90 டிக்ரிக்குமேல் சூட்டைச் சகித்துக் கொண்டிருப்பதால், காலையில் குளிர் இந்நாட்டில்

அவ்வளவு அதிகமாக நம்மைத் தாக்குவதாகத் தோன்றுகின்றது. நான் இன்று காலையில் கால்நடையாகத்தான் பிரயாணம் செய்தேன். ஏனென்றால், நாங்கள் செல்லவேண்டிய சாலை மிகச் செங்குத்தாகவும், குறுகலாகவும் இருந்தமையால், நான் வண்டியில் சவாரி செய்யவோ அல்லது குதிரையின் மீது சவாரி செய்யவோ முடியாமல் இருந்தது.''

''இவ்விடத்திலும் கானகம் மிக அடர்த்தியாகவே இருக்கின்றது. ஆகாயத்தைத் தவிர வேறு ஒன்றையும் நாங்கள் இங்குப் பார்ப்பதற்கு இயலாது. மரங்களெல்லாம் மிக உயரமாகவும், செங்குத்தாகவும் காணப்பட்டன. அவைகள் ஒவ்வொன்றும் ஐம்பது அல்லது அறுபது அடிகளுக்குக் குறையாமல் இருக்கும். அவைகளில் முள் என்பதே கிடையாது. இந்தியாவிலுள்ள காடுகளில் பூமியிலிருந்து புஷ்பங்கள் முளைப்பதில்லை. இங்குள்ள மலர்கள் சில செடிகளில் புஷ்பிப்பதும், சில மரங்களில் மலர்வதுமே யாகும் சில இடங்களில் பூமியில் புல் அதிகமாக வளர்ந்திருக்கும். ஆனால், அநேக இடங்கள் வெறுந்தரையாகவும், கற்கள் நிறைந்த பூமியாகவும்தான் இருக்கும். மூங்கில்களின் கீழ் ஒன்றும் வளர்வதில்லை. இத்தேசத்துக் காடுகளில் மூங்கில் மரங்கள்தான் ஏராளமாக இருக்கும்.''

" நான் ஒரு மரத்தின்கீழ் அமர்ந்து, அங்குள்ள குடியானவர்கள் அறுவருடன் சம்பாஷணை புரிந்தேன். அவர்களில் ஒருவர் அடுத்த கிராமத்துக் கணக்கப்பிள்ளையாவார்; இருவர் மகாராஷ்டிரர்கள்; மற்றைய மூவரும் உழவர்கள்; அவ்வுழவர்கள் மாமிசபோஜனம் அருந்த மாட்டார்கள். அவர்கள் தங்கள் மனைகளிலன்றி வேறு எந்த வீட்டிலும் ஒன்றும் உண்ணமாட்டார்கள் ; தண்ணீரும் பருகமாட்டார்

கள். அவர்கள் தாடிகளோ அவர்களது வெள்ளாடுகளின் தாடிகளின் நீளம் இருந்தன. அவர்கள் சிறிதும் ஆடம்பர மின்றிக் களங்கமற்றவர்கள்போல் தோன்றினார்கள் அம் மக்கள் அருகாமையிலுள்ள சிற்சில குடிசைகளைக் காட்டி, அங்குத்தான் அவர்கள் கிராமம் முன்னர் இருந்தது என்று கூறினார்கள். ஆனால், அது எஞ்சி நாய்க்கன் என்பவனால் (Yengi Naik) நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கொளுத்தப் பட்டும், கொள்ளை யடிக்கப்பட்டும் பாழாக்கப்பட்டது என் றும் அவர்கள் சொன்னார்கள்.''

நான் மேற்கூறிய உழவர்களை அவர்கள் நிலங்களின் விளைவின் வளத்தைப்பற்றிச் சில கேள்விகள் கேட்டேன். அவர்களில் ஒருவர் தம் நிலங்களின் விளைவு மிகக் குறைவு என்று மறுமொழி பகர்ந்தார். அவர் சில வேளைகளில் தாம் விதைத்த தானியம் கூட விளைவதில்லை என்றும் கூறினார். ஐந்நூறு மைல்களுக்கு அப்பால் இருக்கும் வேறு எந்த உழவனைக் கேட்டாலும் அதே பதில்தான் அளித்திருப்பான். ஆதலால், அவர்கள் எல்லோரும் நன்றாகப் பொய் பேசிப் பழகினவர்கள் என்று நாம் நினைப்பது தவறு. அவர்கள் எல்லோரும் அடக்கம், தாழ்மை, யோக்கியதை, வாய்மை முதலிய நற்குணங்கள் உலகிலுள்ள மற்ற மக்களுக்குக் குறைவாகப் பெற்றவர்கள் அல்லர். ஆனால், அவர்கள் பொய் சொல்லத் துணிந்ததின் காரணம் யாதெனில், நெடுங்கால மாகச் சரியான அரசாட்சி இல்லாமையாலும், அது அநா வசியமாக அவர்கள் விஷயங்களில் தலையிட்டுப் பல வீண் கஷ்டங்களை அவர்களுக்குக் கொடுத்து வந்தமையாலும், தங்கள் இடம் இருந்த பொருள்களை இல்லையென்று சொல்ல வேண்டியது அவர்களுக்கு அவசியமாக நேர்ந்து

விட்டது. அவ்வாறு அவர்கள் சொன்னாலன்றித் தங்கள் சொத்தைப் பாதுகாத்துக்கொள்ள முடியாதென்று அவர்கள் எண்ணியிருந்தார்கள். அரசாங்கம் எத்தகைய ஒழுங்கும், நீதியும், வாய்மையும் பெற்றுளதோ அதற்கு ஏற்றவாறு தான் குடிகளின் குணமாட்சி சிறந்து விளங்கும் என்று ஓய்வுள்ள ஒரு மனிதன் ஒரு புத்தகம் எழுதி உண்மையை நிலைநாட்டிக்காட்டலாம். இந்நாட்டு மக்கள் மேற்கூறியவாறு உள்ள பொருளை இல்லையென்று மறைத்துப் பேசுவதற்கும், கேட்ட கேள்விகளுக்குத் தக்க விடைகள் அளிக்காமல் தந்திரம் செய்வதற்கும் சிறு வயதிலிருந்து பழகியிருக்கின்றார்கள். நான் ஏழு அல்லது எட்டு வயதுள்ள பிள்ளைகளைத் தங்கள் வயல்கள் அறுவடை செய்யப்பட்டால் எவ்வளவு தானியம் கிடைக்கும் என்று கேட்டிருக்கின்றேன். அச்சிறுவர்கள் தங்கள் வீடுகளில் உண்ணுவதற்கு ஒன்றுமே இல்லையென்றும், விளைந்திருக்கின்ற சொற்ப தானியங்களையும் பறவைகள் புசித்து விடுமென்றும், தாங்கள் பட்டினியாகத்தான் கிடக்க வேண்டும் என்றும் எனக்கு மறுமொழி பகர்ந்திருக்கின்றார்கள்.''

"உழவர்கள் தங்கள் விஷயமாக அல்லாமல் மற்றவர்கள் சம்பந்தமாக எவ்வளவு வேண்டுமானாலும் பேசுவதற்குத் திறமை வாய்ந்தவர்களே. ஆதலால், நான் அவர்கள் ஜில்லாவைப் பற்றி ஒன்றும் கேளாமல், அடுத்த ஜில்லாவின் விளைபொருள்கள் சம்பந்தமாக அவர்களுடன் பேசத் தொடங்கினேன். கிழவர்களில் ஒருவர் தாம் தரித்திரிந்த கம்பளத்தை நான் உற்று நோக்குவதைக் கண்டு, அவருக்கு அதிக ஆட்டுமந்தைகள் சொந்தமாக இருக்குமென்று எங்கே எண்ணிக் கொள்ளுகின்றேனோ என்று பயந்து, தாம் இருக்கும்

ஊராகிய சோண்டாவில் (Sonda) ஒரு ஆடுகூட கிடையா தென்றும், தாம் தரித்திருக்கும் கம்பளம் சிதல்துருக் (Chitaldrug) என்னும் பதியில் வாங்கினது என்றும் என்னிடம் கூறினர். அவர் கம்பளத்தை அவர் எண்ணிய கருத்துடன் நான் சிறிதும் நோக்கவில்லை. நான் மைசூரை விட்ட பின்னர் அத்தகைய கம்பளம் ஒன்றையும் பார்க்கவில்லை. அது தான் மிக்க உழைப்பாளிகளாகிய உழவர்களின் முக்கிய உடையாகும். அவர்கள் அக்கம்பளத்தையே வெய்யல், மழை ஆகிய இரண்டிலும் தங்களுக்குப் பாதுகாப்பாகப் போர்த்துக்கொள்ளுகின்றார்கள். அவர்கள் உறங்கும் போதும் அக்கம்பளத்தையேதான் போர்த்துக் கொள்ளுவார்கள். அவர்களில் ஏழையென்றும், பணக்காரர் என்றும் சொல்வது அவர்கள் அணிந்து கொள்ளும் கம்பளத்தின் நேர்மைக்குத் தக்கவாறுகும். நான் உழவர்களையும், இடையர்களையும் அக்கம்பிளி உடையிலேயே பாமஹாலில் (Bura mahal) பல ஆண்டுகள் பார்த்துப் பழக்கப்பட்டிருந்தமையால், நான் அத்தகைய கம்பளத்தை அந்தச் சமயத்தில் பார்த்தபோது, பழைய நண்பன் ஒருவனைச் சந்தித்ததுபோல் எனக்குத் தோன்றிற்று. இன்னும் நான் விட்டுப் பிரிந்த நாட்டையும் அது என் கவனத்திற்குக் கொண்டுவந்தது. அப்போது எனக்கு மனவருத்தம் உண்டாயிற்று. ஏனென்றால், நான் மறுபடியும் அந்நாட்டையும், அங்குள்ள என் பழைய நண்பர்களையும் காண்பேனே காணமாட்டேனே என்று எனக்கு எண்ணம் உண்டாயிற்று.''

“நான் தங்கவேண்டிய இடத்திற்கு வந்ததும், அங்கு உழவர்களின் தலைவன் எனக்காக ஒரு பந்தல் தயார் செய்து வைத்திருந்தான். அது இருபது கஜம் சதுரமும், எட்டு அடி

உயரமும் இருந்தது. அப்பந்தல் புல்லாலும், மூங்கில்களாலும் செய்யப்பட்டிருந்தது. பன்னிரண்டு மனிதர்கள் அதை இரண்டு நாட்களாகச் செய்து முடித்தார்கள். நான் அதற்குள் போகமுடியாதென்று கூறியதும், அத்தலைவன் மிகவும் மனம் உடைந்து விட்டான். பகலெல்லாம் மரங்களின் நிழலில் தங்கி இருப்பதற்கும், இரவில் என் கூடாரத்தில் தங்குவதற்கும் நான் விரும்பினேன். அவன் புதல்வன் ஒரு கோழியும், கொஞ்சம் பாலும் எனக்குப் பரிசாகக் கொண்டு வந்திருந்தான். இந்தியாவில் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் உத்தியோக சம்பந்தமாகக் கிராமங்களுக்குச் செல்லும் போது, மேற்கூறியவாறு கோழி, பால் முதலிய உணவுப் பொருள்கள் பணம் வாங்காமல் அவர்களுக்குக் கிராமவாசிகள் அளிப்பது வழக்கம். இவ்வழக்கம் இங்கிலாந்திலும் அநேக ஆண்டுகளுக்கு முன்னர் கையாளப்பட்டிருந்தது. இவ்வாறு செலவாகும் தொகையைப் பொதுமக்கள் செலுத்தும் வரியிலிருந்து தள்ளிவிடுவது கிராம உத்தியோகஸ்தர்களின் பழக்கம். அநேகமாக எவ்வளவு தொகை உண்மையாகச் செலவாகின்றதோ அதைக் காட்டினும் அதிகமாகத்தான் பொதுமக்களின் பணத்தில் கிராம உத்தியோகஸ்தர்கள் கைவைப்பார்கள். நான் உழவர்களின் தலைவரிடம் அவர் கொண்டுவந்த கோழியையும், பாலையும் பணம் அளிக்காமல் பெற்றுக்கொள்ளமாட்டேன் என்று உறுதியாகக் கூறினேன். அவர் தயார் செய்த பந்தலிலும் நான் நுழைய முடியாதென்று மொழிந்தேன். ஏனென்றால், அப்பந்தலைச் செய்த மனிதர்களுக்கு அவர் ஒரு காசும் கொடுக்கவில்லையென்று நான் நன்கு அறிந்தேன். ஆதலால், நான் பந்தலைச் செய்த வேலைக்காரர்களுக்கு அவர்களுக்குரிய தொகையை என்

பணத்தில் அளிப்பேன் என்றும், அளித்த பின்னரும் அப்பந்தலில் என் கீழ் உத்தியோகஸ்தர்களைத்தான் தங்கியிருக்கச் செய்வேனென்றும் திடமாகக் கூறினேன். ஆனால், அவர் உண்மையாகத்தான் நான் அவ்வாறு பேசுகின்றேன் என்று சிறிதும் நம்பவேயில்லை. நான் கூறுவது உண்மையென்று அவரை நம்புமாறு செய்வதற்கு எனக்கு வெகு நேரமாயிற்று; தேகக்கஷ்டமும் அதிகமாயிற்று. என்னுடன் வரும் மற்ற கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களுக்கும் அவர் எவ்வித உணவுப்பொருளையும் பணம் வாங்காமல் அளிக்கக் கூடாதென்றும் அவ்வுழவர்களின் தலைவரிடம் உறுதியாகச் சொன்னேன்.''

அதிகாரம் ஒன்பது.

கடப்பை, பல்லாரி ஜில்லாக்களின் கலெக்டர்.

மன்ரோதுரை தம் பேராற்றலை நன்கு செலுத்திக் கவர்ன்மெண்டாருக்குத் தம்மீது சிறந்த அபிப்பிராயம் உண்டாகுமாறு கனரா ஜில்லாவைச் சீர்திருத்தம் செய்தனர். ஆதலால், கவர்ன்மெண்டார் அவரை வெளி ஜில்லாவிற்கு மாற்றக் கூடாதென்று தீர்மானம் செய்து கொண்டனர். மன்ரோ பெருந்தகை கனராவில் பதினைந்து மாதங்கள் உத்தியோகம் செய்தனர். அவர் அதற்குள் செய்த சீர்திருத்தங்கள் பெரிதும் பாராட்டத்தக்கன. அப்பெரியார் முதலாவதாகக் கனராவை ஒழுங்கான நிலைக்குக் கொண்டுவந்து விட்டார். இரண்டாவதாகக் கள்ளர்களையும், கொள்ளைக்காரர்களையும் அடக்கி விட்டார். மூன்றாவதாக, உழவர்கள் செலுத்தும் வரி எவ்

விதத்திலும் சமயத்திற்கு ஏற்றவாறு உயர்த்தப்படமாட்டாது என்று வாக்குறுதி செய்து, அவர்களுக்குக் கவர்ன்மெண்டார்மீது நம்பிக்கையை உண்டுபண்ணினர். மேற்கூறியவாறு அவர் செய்த நலங்களால், உழவர்கள் கள்ளர்களுக்கும், அநியாய வரிகளுக்கும் கொண்டிருந்த அச்சத்தினின்றும் நீங்கினார்கள். ஆதலால், அவர்கள் தங்கள் கைத்தொழில்களையும், உழவுத் தொழில்களையும் ஊக்கத்துடன் செய்யத் தொடங்கினார்கள். சுருக்கிச் சொல்லுமிடத்து, கனராவில் ஒழுங்கான நல்ல அரசாட்சி நிலைநிறுத்தப்பட்டது.

கடைசியாக மன்ரோ பெருந்தகையார் விரும்பிய வண்ணம் அவரை வேறு ஜில்லாவிற்கு மாற்றுவதற்கும், இன்னும் பெரிய உத்தியோகத்தை அவருக்கு அளிப்பதற்கும் கவர்ன்மெண்டாருக்குத் தக்க சமயம் வாய்த்தது. ஆங்கிலேயர்கள் ஐதராபாக்கத்து நைசாமிடம் செய்த உடன்படிக்கையின்படி ஐதராபாக்கத்தில் வெள்ளைக்காரர்களும், இந்தியர்களும் அடங்கிய ஆங்கிலேயச் சேனை ஒன்று நைசாம் தேசத்திற்குப் பாதுகாப்பாக எப்போதும் இருக்கவேண்டியதாயிற்று. அச்சேனையின் போஷிப்பிற்கு வேண்டிய தொகையை வருஷந்தோறும் கொடுப்பதற்குப் பதிலாக நைசாம் ஆங்கிலேயர்களுக்குப் பல்லாரி, கடப்பை ஆகிய இந்த இரண்டு ஜில்லாக்களையும் அளித்துவிட்டார். இவ்விரண்டு ஜில்லாக்களுக்கும் கலெக்டராக மன்ரோதுரை கேட்டுக்கொண்டபடி கவர்ன்மெண்டார் அவரை நியமித்தார்கள். லார்ட் கிளைவ் (Lord Clive) அவருக்கு அவ்வுத்தியோகத்தை அளித்தபோது, "அவ்வளவு அருமையும், பெருமையும் வாய்ந்த இளவலும், கலெக்டருமாகிய மன்ரோவின் விருப்பத்தை மிகக் களிப்

புடன் நிறைவேற்ற வேண்டியது கவர்மெண்டார் கடமை யாகும். அவரை நான் மலபாரிலேயே (Malabar) இருக்கு மாறு செய்ததின் காரணம் யாதெனில், அவரைப்போல் அந்த ஜில்லாவைச் சீர்திருத்தம் செய்வதற்கும், உயர்ந்த நிலைக் குக் கொண்டுவருவதற்கும் வேண்டிய ஆற்றல் வேறு ஒரு உத்தியோகஸ்தரும் பெற்று இல்லையென்று நான் அவர்மீது கொண்ட சிறந்த அபிப்பிராயமேயாகும்.'' என்று அவரைப் பற்றிச் சிறப்பாக எழுதியிருந்தார்.

மன்ரோ பெருந்தகையார் கடப்பை, பல்லாரி ஜில்லாக் களுக்குக் கலெக்டராக அமர்ந்தபோது, அங்கு 30,000 ஆயு தம் தரித்த கவர்ன்மெண்டில் சேராத சேவகர்கள் வசித்திருந் தனர். அச்சேவகர்களுக்கு அதிபதிகளாக எண்பது பாளை யக்காரர்கள் இருந்தனர். அப்பாளையக்காரர்கள் கொள்ளை யடித்தே ஜீவனம் செய்து வந்தார்கள். அவர்கள் அல்லாமல் இந்த ஜில்லாக்களில் கள்ளர்கள் கூட்டங் கூட்டமாக வசித் திருந்தனர். அவர்கள் வழிப்பிரயாணிகள் கொண்டுபோகும் பொருள்களைக் கொள்ளையடிப்பதும், கேட்ட பொருள்களைக் கொடுக்காமற்போனால் அவர்களைக் கொலைசெய்வதும் தங்கள் தொழிலாகக்கொண்டு வாழ்ந்து வந்தனர். அவ்விருவகையான கொடிய மக்களின் தீய செய்கைகளுக்குப் பயந்து குடிகள் தங்கள் பாதுகாப்பிற்காக ஆயுத பாணிகளாகவே இருக்க வேண்டியவர்களாய் விட்டார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கோட்டையாவது அல்லது அக்கிராமத்தைச்சுற்றி சுவர் களாவது அவசியம் இருக்கும். அவ்வாறு கோட்டைகளும், சுவர்களும் அக்காலத்தில் இருந்தன என்பதை இப்போதுள்ள அவை அழிந்துபோன அடையாளங்களால் அறியலாம். மன் ரோதுரை, "பத்து வருஷங்களாகக் கடப்பை ஜில்லாவில்

மொகலாய அரசாட்சி இருந்ததின்பயன் யாதெனில், இப்பத்து வருஷங்களாக இந்த ஜில்லாவில் போர் நிகழ்ந்திருந்தால் எவ்வளவு தீமைகள் நேரிடுமோ அவ்வளவு தீமைகள் தான் உண்டாயின.'' என்று எழுதியிருந்தனர்.

ஆதலால், கடப்பை, பல்லாரி ஜில்லாக்களைச் சீர்திருத்த முதலில் பாளையக்காரர்களை அடக்கவேண்டியது அவசியமாயிற்று. அவர்களில் அநேகர் தாங்களிருந்த பதிகளிலிருந்து துரத்தப்பட்டார்கள்; சிலர் உபகாரச்சம்பளம் கொடுக்கப்பட்டார்கள். மொத்தத்தில் எல்லோரும் தங்களிடம் இருந்த ஆயுதம் தாங்கிய சேவகர்களை நீக்கிவிட வேண்டுமென்று கட்டளை விதிக்கப்பட்டார்கள். பாளையக்காரர்களை மேற்கூறியவிதமாக அடக்கும் தொழில்களை ஜெனரல் காம்பல் (General Cambell) என்பவர் கவனித்து வந்தார். மன்ரோ துரை தமக்குக் கீழிருந்த உத்தியோகஸ்தர்களைக்கொண்டு சிவில் (Civil) சம்பந்தமான காரியங்களைக் கவனித்து வந்தார். அவர் ரீட் என்பவருக்கு 1802-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கீழ்வருமாறு கடிதம் வரைந்தார்:—

“ இப்போது எனக்கு புத்தி நுணுக்கமுள்ள சந்தோஷகரமான வேலை ஒன்றும் இல்லை. ஒரேவிதமான வேலையை நான் சதா செய்யவேண்டியவனாக இருக்கின்றேன். எனக்கு இருக்கும் வேலையின் நிர்ப்பந்தத்தால் நான் எதையும் சிந்திப்பதற்கும் நேரமில்லை. அமில்தார் (Amildar) கடிதங்களையும், பிரயாதுகளையும் கவனிப்பதே எனக்கு ஒரு நாள் முழுவதும் பெரிய வேலையாக இருக்கின்றது. இதுவன்றியும், நான் வேவுகாரர்களைத் (Spies) தினந்தோறும் பரிசை செய்வதற்கும், கள்ளர்களையும், அடைக்கலம் புகுந்த பாளையக்காரர்களையும் தேடிப்பிடிக்கப் பல சேவகர்களை அனுப்புதற்கும், இராண

டொரு மணி நேரம் எனக்கு ஆகும். இன்னும் நான் மூன்று குதிரைப்பட்டாளங்களுக்கும், பீரங்கி வண்டிகள் இழுக்கும் எருதுகளுக்கும் தானியம் தயார் செய்து கொடுக்கவேண்டும். மாதந்தோறும் நான் செய்யும் வேலைகளின் வரலாற்றை ஒரு குறிப்பு எழுதிப் (Diary) போர்ட் ஆபீசுக்கு அனுப்பவும் வேண்டும். ஒரு வருஷத்தில் சுமார் ஆயிரம் மைல் சுற்றிப் பரிசோதிக்க வேண்டும். ஆதலால், நான் குதிரைமீது சவாரி செய்யும் நேரந்தான் எனக்கு ஓய்வு நேரமாக இருக்கின்றது.

இராணுவ வீரர்களின் துணையின்றியே வெளியே பிரயாணம் செய்வது மன்ரோ துரையின் வழக்கம். ஏனென்றால், அந்த ஜில்லாக்களில் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் ஒரு துணையுமின்றிச் செல்வதுதான் தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்கு சிறந்த வழி என்பது அவருடைய கருத்தாகும். அக்கருத்தின் சம்பந்தமாகக் கீழ்குறிக்கும் அவர் வரைந்துள்ள கடிதம் மிகவும் புகழத்தக்கதாகும்.

“தாகரே (Thackeray) என்பவரின் பாதுகாப்பைப் பற்றித் தாங்கள் எழுதிய கடிதத்தை நான் பெற்றேன். அக்கடிதம் வருவதற்கு முன்னரே அவ்விஷயத்தை நான் கேள்வியுற்றபடியால் நமது இராணுவத் தலைவருக்குச் சில போர் வீரர்களை அனுப்புமாறு ஒரு கடிதம் எழுதினேன். அதுவுமன்றி, தோர்ணிகல் (Tornikul) என்பவரைப் பிடித்துத் தருபவர்க்கு ஆயிரம் ரூபாய் வெகுமானம் அளிப்பதாகவும் எங்கும் பிரசுரம் செய்தேன். தோர்ணிகல் என்பவர்தான் எல்லாக் கொலைகளுக்கும் காரணமாக இருக்கின்றார். இந்த ஜில்லாக்களில் கொலைகள் செய்வது சர்வசாதாரணமாக இருந்து வருகின்றது. முக்கியமாக, குரம்கொண்டா என்னும் பதியில் நிகழும் கொலைகள் மிக அதிகம். அவற்றைப்

பற்றி நான் எழுதுவதால் ஒரு பயனும் இல்லை. ஏனென்றால், அவ்விஷயம் போர்ட் ஆபீஸ் அதிகாரிகளுக்கு வீண் தொல்லையை அளிக்குமேயன்றி ஒரு பயனும் அதனால் விளையாது. சில தினங்களுக்கு முன்னர் நிகழ்ந்த பயங்கரமான நிகழ்ச்சி தாகரே என்பவர் மாத்திரம் இல்லாமலிருந்தால் நிகழ்ந்திராது என்பது திண்ணம். அவரைத் துணை இல்லாமல் கஷ்டத்திற்கு உள்ளாக்கிவிட்டேன் என்று தாங்கள் நினைக்கலாம். ஆனால், நான் அவ்வாறு செய்ததின் காரணம் யாதெனில், அவரைத் துணையின்றி விடுவதுதான் அவர் உயிருக்கு ஆபத்தில்லையென்று நான் தீர்மானமாக எண்ணியதேயாகும். இந்த ஜில்லாக்கள் இப்போதுள்ள நிலைமைக் காட்டிலும் ஆபத்தான நிலையில் கனரா இருந்தபோது நான் அங்குள்ள பல இடங்களுக்கு ஒரு போர் வீரனும் துணையில்லாமல் தனிமையாகச் சென்றிருக்கின்றேன். அவ்வாறு நான் சென்றமையால், எனக்கு ஒரு ஆபத்தும் வரவில்லை, ஒரு இழிவும் வரவில்லை.''

“அதைப்போலவே நான் இங்கும் செய்கிறேன். என் வரையில் நான் ஒரு துணைவனையும் வைத்துக்கொண்டில்லை. சென்ற ஆண்டில், குரம்கொண்டா பாளையக்காரர்களையும், அவர்கள் துணைவர்களையும் கூட்டமாகச் சந்தித்தபொழுது நான் ஒரு சேவகனையும் என்னிடம் வைத்திருக்கவில்லை. நான் அவர்கள் துணைவர்களை எல்லாம் நீக்கிவிட்டேன். அவ்வாறு நீக்கியபோதிலும், அவர்கள் என்னிடம் மரியாதையாகவே இருந்தார்கள். இந்தியாவில் எல்லா மக்களும் பாளையக்காரர்கள் உட்பட கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தரிடத்தில் அதிக மரியாதை வைத்திருக்கிறார்கள். கலெக்டர்கள் தங்கள் மேல் அதிகாரிகளின் கட்டளையின்படி சகல காரியங்களையும்

செய்கின்றார்கள் என்று அவர்கள் நினைக்கின்றார்கள். ஆதலால், கலெக்டர்களை வீணாகத் துன்புறுத்துவது நியாயமல்லவென்பது அவர்கள் கருத்தாகும். ஆதலால், டிப்டி கலெக்டரிடம் காவலாளர்கள் ஒருவருமில்லாமல் இருப்பதுதான், தங்களைப் பாதுகாத்துக்கொள்ளத் தகுந்த வழியாகும். அவ்வாறு துணையின்றி இருப்பதால், நாங்கள் குடிகளின் நட்பை எளிதாக அடைகின்றோம். ஒரு நாய்க்கர் அல்லது ஒரு அவுல்தார் கர்னாடகத்தில் ஒரு சிவில் உத்தியோகஸ்தருக்குப் போதிய துணையாகும். ஆனால், ஆயுதபாணிகளாக இருக்கும் இந்த ஜில்லாக்களின் குடிகளிடத்தில் அத்துணைவர்கள் ஒன்றும் பயன்படமாட்டார்கள். அத்தகைய துணைவர்களை வைத்துக்கொண்டிருந்தால் அநாவசியமாக ஆபத்திற்குள்ளாகவேணுமேயன்றி, அவர்களைத் தவிர்த்துக்கொள்ள முடியாது. எது எவ்வாறு இருப்பினும், தற்சமயம் எந்த கலெக்டருக்கும் இராணுவத்தில் இருந்து ஒரு போர்வீரனையும் துணையாக அனுப்பமுடியாது.''

''ஆதோனி நகரில் நடக்கும் கொலைகளுக்குக் காரணம் அங்குள்ள மக்கள் தங்களுக்குள் கொண்டுள்ள பகைமையேயாகும். நைசாம் அரசாட்சியில் கிராமங்களில் உள்ள தலைவர்களில் அநேகர் பயிர் ஒன்றும் வளரவில்லை என்னும் சாக்கைக்கொண்டு, பெரிய இலாபத்தை அடைந்திருக்கின்றார்கள். உண்மையில், அவர்கட்கு எவ்வளவு நஷ்டமோ, அதைக்காட்டிலும் அதிகமாக அவர்கள் பணம் வாங்கி இருக்கின்றார்கள். அக்கிராமங்களைப்போலவே விளைவில்லாமல் கஷ்டத்திற்குள்ளாகிய மற்றக் கிராமங்களின் நிலைக்குச் சரியாக அவற்றைக் கொண்டுவரும்பொருட்டு, அக்கிராமங்களின் நிலவரிகளை உயர்த்த வேண்டியதாக இருக்கின்றது. இந்த உளவை கவர்

மெண்டாருக்குத் தெரிவித்த மக்கள்தான் கொலை செய்யப்பட்டவர்கள். எல்லோரும் ஆதோனி நகரத்துக் குடிகள். அவர்களில் ஒருவன் கவர்ன்மெண்டில் குமஸ்தா உத்தியோகம் செய்தவன். குரோனிகல் என்னும் கிராமம் மற்றுமுள்ள அநேக கிராமங்களைப்போல் சரியான பாதுகாப்பில் இருக்கின்றது. நிலவரி அதிகமாகப் போடவேண்டும் என்று சொல்லியபொழுது அக்கிராமத்தலைவர் அந்த ஏற்பாட்டிற்கு ஒத்துக்கொள்ளவில்லை. சிராஸ்தார் குடிகளிடம் தலைவர் இல்லாமல் இருந்தால் நிலவரியைக் கஷ்டமின்றி உயர்த்திவிடலாம் என்று அறிந்து, அத்தலைவரை வெளியூருக்குப் போயிருக்குமாறு கட்டளை விதித்தார். ஆனால், அக்கிராமத் தலைவர் அவர் கட்டளையைப் பொருட்படுத்தாமல் கிராமத்தின் வாசற்கதவுகளைச் சாத்திவிட்டுச் சுவர்களை எல்லாம் சரியாகப் பந்தோபஸ்து செய்து, நிலங்களின் உண்மை விளைவை சொல்லிய மூன்று மனிதர்களைக் கச்சேரியிலேயே கொலை செய்தார். அம்மூவர்களும் தங்களைக் கொல்ல வந்தபொழுது நடு நடுங்கிச் சிராஸ்தாரிடத்தில் அடைக்கலம் புகுந்தார்கள். அவர் அவ்வாறு அடைக்கலம் புகுந்தமையால், அவர்களைக் காப்பாற்ற எத்தனித்த சிராஸ்தார் மீதும் அடி விழுந்து காயம் அடைந்தார். தாக்கரே அப்போது அக்கிராமத்தின் அருகே இருந்தமையால், மேற்கூறியவர்களைக் காப்பாற்றும் பொருட்டு அதிக வேகமாகக் கிராம வாசற்படியண்டை சென்றார். ஆனால், அவரை அக்கிராமத் தலைவரின் துணைவர் உள்ளே விடவில்லை. சுவரின்மீது ஏறியிருந்த மனிதர்கள், அவர் சுவரின்மீது ஏறப் பிரயத்தனப்பட்டபோது, அவரை நோக்கி, "ஐயா, தங்கள் உயிருக்கு ஆபத்து நேரும். தாங்கள் வந்தவழியே திரும்பிப் போதல்

நலம், எங்கள் பகைவர்களை நாங்கள் பழிவாங்கினோம். தங்கள்மீது எங்களுக்கு எவ்வித பகைமையும் இல்லை. தங்கள் அதிகாரத்தை எதிர்க்கவேண்டும் என்று எங்கள் அபிப்பிராயம் அல்ல.'' என்று சாந்தமாகக் கூறினார்கள். அதைக் கேட்ட அவர் மிக புத்திசாலித்தனமாகத் தம் கூடாரத்திற்குத் திரும்பிப் போய்விட்டார். இவ்வரலாற்றை அவருடன் இருந்த ஒரு சேவகன் எனக்கு அறிவித்தான்.''

தாங்கள் விரும்பியபடி, அவருக்குக் காவலாளி இருந்திருந்தால், அவரை அம்மக்கள் கொன்றிருப்பார்கள். கச்சேரியில் உள்ள உத்தியோகஸ்தர்களையும் அவர்கள் கொன்றிருப்பார்கள்; குழப்ப மிகுந்துள்ள நாட்டில் பாதுகாப்பு குறைவாக இருப்பதைக் காட்டிலும் ஆபத்து ஒரு உத்தியோகஸ்தருக்கு வேறில்லை. சிப்பாய்களே சமயத்திற்கேற்றவாறு எதிர்க்கின்ற சுபாவமுடையவர்கள்; வழக்குகளில் தலையிடுவதில் தயாராயிருப்பவர்கள்; செருக்கடைவதில் பின் வாங்காதவர்கள்; ஒரு கலெக்டர் தன் அதிகாரத்தின் செருக்கைக் காட்டாமல் இருந்தால், அவருக்கு ஒரு ஆபத்துமில்லை. தோர்ணிகல் கிராமத்தில் நடந்த அநியாயக் கொலைகளை நோக்கும்பொழுது, அங்குள்ள மக்கள் தாக்கரே என்பவரிடத்தில் நடந்துகொண்ட தன்மை அம்மக்களின் பொறுமையின் விளைவே என்று கருதவேண்டியதாக இருக்கின்றது. இதுவே அவருக்கு ஒரு ஆபத்துமில்லை என்பதையும் விளக்குகின்றது''

மன்ரோ பெருந்தகையார் அந்த ஜில்லாக்களில் செய்த தீர்த்திருத்தங்களில் முதலாகக் கருதப்படுவது கிராமங்களின் நிலவரி சம்பந்தமாகும். ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு நிலத்திற்கும் வரி இவ்வளவென்று ஒழுங்காக

ஏற்படுத்சப்பட்டது. உழவர்கள் அவ்வாறு ஏற்படுத்தப் பட்ட வரிகளை ஒழுங்காகச் செலுத்துவதற்கு உத்திர வாதிகளாக்கப்பட்டார்கள். ஒவ்வொரு உழவனும் தன் நிலத்தின் வரிக்கு உத்திரவாதியாக்கப்பட்ட போதிலும், வரி கணக்கு தப்பிதமாக இருந்தாலும், உழவர்கள் ஒளித்துக் கொண்டாலும் கிராமத் தலைவனே உத்திரவாதமாக இருக்க வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்டது. விதை வாங்குவதற்கும், உழவுக் கருவிகளும், எருதுகளும் வாங்குவதற்கும், பழைய கிணறுகளை ஒழுங்குபடுத்துவதற்கும், புது கிணறுகளைவெட்டு வதற்கும் துரைத்தனத்தார் உழவர்களுக்கு முன் பணம் கொடுக்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டது. இவையல்லாமல் தானியம் விளைந்துவரும் வரையில் உழவர்கள் ஜீவனத்திற்காக முன் பணமும் கொடுக்கப்பட்டது. நிலவரிகளை ஒழுங்கு படுத்துவதற்கு மன்ரோ துரைக்கு ஐந்து ஆண்டுகள் ஆயின. ஒவ்வொரு நிலமும் ஒழுங்காக ஆக்கப்பட்டு ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு எண் கொடுக்கப்பட்டு, அதன் வரி இவ்வளவென்று நியமிக்கப்பட்டு, நிலத்தின் சொந்தக்காரர் இன்னார் என்று புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டது. மன்ரோ பெரியார் செய்த இந்நன்மை இன்றும் துரைத்தனத்தாராலும், குடிகளாலும் பாராட்டப்படுகிறது

மன்ரோ பெருந்தகையார் மேற்கூறியவாறு மிக உண்மையாகவும், ஊக்கமாகவும், தம் உத்தியோகத்தை மிகச் சிறப்பாகப் பார்த்து வந்த போதிலும், ரெவினியூபோர்ட் ஆபீசுக்குத் (Board of Revenue) தாம் எவ்வாறு ஒவ்வொரு தினத்திலும் தம் கடைமையைச் செய்தார் என்று ஒரு குறிப்பு அனுப்பவேண்டியதாக இருந்தது. இந்த ஏற்பாட்டை அவர் மிகவும் வெறுத்தார். இது சம்பந்தமாக அவர்,

"இந்தக் குறிப்பு எழுதி அனுப்புவதால் துரைத்தனத்தாருக்கு என்ன நன்மை விளைகிறதோ எனக்குத் தெரியவில்லை. இது முக்கியமான காரியங்களைச் செய்யவொட்டாமல் தடுக்கின்றதே ஒழிய ஒரு பயனையும் விளைவிக்கவில்லை." என்று எழுதி இருந்தார். மன்ரோ துரை மேற்கூறியவண்ணம் குடிகளுக்கும், துரைத்தனத்தாருக்கும் பற்பல நன்மைகளும் செய்ததல்லாமல், மிகத் தைரியமாக இன்னும் ஒரு அருமையான நன்மையைச் செய்தார். அதாவது 1803-ம் வருஷம் வரையில் மழை இல்லாமையால் பஞ்சம், அந்த ஜில்லாக்களில் குடிகளை மிகவும் வருத்தியது. அதன் பின்னர் மழை அளவுக்கு மிகுதியாகப் பெய்தமையால் ஏரிகளும், கால்வாய்களும் உடைந்துபோய்விட்டன. கடப்பை ஜில்லாவில் மாத்திரம் ஆயிரம் ஏரிகளும், 800 கால்வாய்களும் உடைந்துவிட்டன. அவற்றை ஒழுங்கு படுத்துவதற்கு ஏழு இலட்சம் ரூபாய் வேண்டியதாக இருந்தது. மன்ரோ பெருந்தகையார் துரைத்தனத்தார் அனுமதியை எதிர்பாராமலேயே மேற்கூறிய ஏரிகளையும், கால்வாய்களையும் வெகு சீக்கிரத்தில் ஒழுங்குபடுத்தும்படி கீழ் உத்தியோகஸ்தர்களுக்குத் தாமே கட்டளை விதித்து விட்டார். அவ்வளவு வேலையும் அடுத்த வருஷத்திற்குள் நிறைவேற்றப்பட்டது. அடுத்த வருஷத்தில் மழையும் ஒழுங்காகப் பெய்து, நிலங்களும் நன்றாக விளைந்தமையால், குடிகளுக்கும் துரைத்தனத்தாருக்கும் பெரியதோர் நன்மையுண்டாயிற்று.

அதிகாரம் பத்து.

இங்கிலாந்து போதல்.

1807-ம் ஆண்டு அக்டோபர்மீ மன்ரோ தம் கலெக்டர் உத்தியோகத்தை விட்டுத் தம் சொந்த தேசத்திற்குத் திரும்பிப்போவதற்குத் தயாராயிருந்தார். சென்னைத் துரைத்தனத்தார் அவரைப்பற்றி இங்கிலாந்திலுள்ள காரிய நிருவாக சபையாருக்கு எழுதிய நன்மதிப்பு பெரிதும் பாராட்டத்தக்கது. அது கீழ்வருமாறு:—

"மிகக்கடினமான நிலையில் பொதுமக்களின் நலத்துக்காக, மன்ரோ உழைத்த உழைப்பின் பான்மை இத்துணைத்தென்று அளவிட்டுச் சொல்ல இயலாது. அவர் தாம் எடுத்த முயற்சியின் பயனாகத் தாம் கொண்ட கருத்தை நன்கு நிறைவேற்றியுள்ளார். அவரைப்போல் நன்முயற்சி எடுத்துக் குடிகளை முன்னேற்றத்திற்குக் கொண்டுவந்த தன்மையைப் போல் இத்துரைத்தனத்திலாவது அல்லது வேறு எத்துரைத்தனத்திலாவது ஒரு கலெக்டர் இதுகாறும் செய்ததில்லை என்பது திண்ணம். அவர் இருந்த ஜில்லாக்களில் உள்ள குடிகளின் வழக்கங்களையும், ஒழுக்கங்களையும் பண்படுத்தி அவர்களை நல்ல நெறியில் கொண்டு வந்திருக்கின்றார். துரைத்தனத்தாருக்கும் குடிகளின் நலத்திற்கும் இடையூறு நிகழ்த்தாமல் நிலவருமானத்தை விருத்தி செய்திருக்கின்றார். கூட்டங்கூட்டமாக ஆங்காங்கு திரிந்து மக்களுக்குப் பெருந்தீமையை விளைவித்த கள்ளர்களையும், கொள்ளைக்காரர்களையும் குணத்தைச் சீர்திருத்தி நாகரிகத்தைக் கைக்கொள்ளுமாறு ஒழுங்குபடுத்தி இருக்கின்றார். அவர்கள் சட்டங்களு

க்கு அடங்கி மற்றக்குடிகளைப்போல் நீதிபதிகளின் கட்டளையின்படி நடந்து கொள்ளுமாறும் செய்திருக்கிறார். நிலவரி எவ்வித கஷ்டமுமின்றி வசூல் செய்யப்படும் வசதிகள் ஏற்படுத்தி இருக்கிறார். குடிகள் அனைவரும் திருத்தத்தை மிகவும் மெச்சி மகிழ்வடைகின்றனர். அவர்கள் அவரை விட்டுப் பெரிய மனம் வருந்துகின்றனர். ஒருவரேனும் அவர் பிரிவை ஆற்றிக்கொள்ளச் சக்தியுடையவராகக் காணப்படவில்லை.''

மன்ரோ பெருந்தகைக்கு இரண்டு ஆண்டுகளாகத் தம் சொந்த தேசத்திற்குப் போகவேண்டும் என்ற அவா பெரிதாய்விட்டது. அவர் தம் தாய் தந்தையருக்குப் பணம் ஒழுங்காக அனுப்பிவந்தமையால், அவர்கள் சௌக்கியமாகக் காலத்தைக் கழித்து வந்தார்கள். அவர்களுக்காகக் கிராமத்தில் ஒரு வீடு அவர் வாங்கி வைத்தார். அவர்களைப் பார்த்து நெடுங்காலமானமையால், அவர்களைக் காண அவருக்கு விருப்பம் அதிகமாய்விட்டது. மன்ரோ சொந்த தேசத்தைவிட்டுப் பிரிந்து இருபத்தேழு ஆண்டுகள் ஆய்விட்டமையால், தாம் அங்குச் சென்ற போதிலும், தமக்குச் சந்தோஷம் அதிகம் இராது என்று அவருக்குத் தோன்றிற்று. ஆதலால், அவர் தம் தேசத்திற்குச் சென்றதும், அங்கு என்னசெய்வது என்று எண்ணிக்கொண்டிருந்தார். அவர் அந்நிலையில் எழுதிய விஷயம் கவனிக்கத்தக்கது அதாவது "இராணுவத்தில் எனக்கு அந்தஸ்து இல்லை; ஆதலால், நான் எவ்விடத்திலும் சென்று என் சமர்த்தைக் காட்டிக் கீர்த்தி அடைய ஒரு வழியும் இல்லை. உமது தேசத்தின் மக்கள் (அதாவது ஆங்கிலேயர்) என்னை அந்நியனாகக் கருதி அரசாங்கத்தில் எந்தத் துறையிலும் என்னை மேல்நிலைக்கு வரவொட்டாமல் தடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆதலால், நான் செய்ய வேண்டியது

ஒன்றுமில்லை. ஆனால், ஒன்று செய்யலாம். அதாவது நான் ஒரு உழவன் பிள்ளையைப்போல் ஒரு நிலத்தில் மல்லாந்து படுத்துக்கொண்டு, ஆகாயத்தில் வானம்பாடி பறப்பதைப் பார்த்துக்கொண்டிருக்கலாம்.'' அவர் தம் சகோதரிக்கு எழுதிய வேறு ஒரு கடிதத்தில் காலமும், பிரிவும் மக்களுக்கு எத்தகைய மாறுபாடுகளை உண்டுபண்ணுகின்றன என்பதைப் படிப்பவர் உள்ளம் உருகுமாறு எழுதியிருப்பது ஒவ்வொருவரும் வாசிக்கவேண்டியது அவசியம். அக்கடிதம் கீழ் வருமாறு:—

'என் அருமைச் சகோதரியே.

இப்போதுதான் எனக்கு இரண்டொரு கடிதங்கள் நீ எழுதக் கடன்பட்டிருக்கின்றாய். இவ்வாறு நீ எனக்குக் கடன் காரியாய் இருப்பது இதுதான் முதல் தடவை. 1804-ம் ஆண்டு மே மாதம் 16-ந் தேதியிலிருந்து உன்னிடத்தில் இருந்து ஒரு கடிதமும் வரவில்லை. இந்திய தேசத்தில் இருக்கிற நானும் ஸ்காத்லாந்து தேசத்தில் இருக்கிற நீயும், ஒரு வருக்கொருவர் பிரிந்து ஏறக்குறைய முப்பது வருஷங்களானலும், இனி ஒருவரை ஒருவர் சந்திப்போம் என்ற நம்பிக்கை இல்லாமையாலும், நாம் இருவரும் ஒருவருக்கொருவர் தபால் எழுதிக்கொள்வது எவ்வாறு இருக்கின்றதென்றால், இவ்வுலகில் இருக்கும் ஒருவனும், மேலுலகில் இருக்கும் ஒருவனும் ஒருவருக்கொருவர் கடிதம் எழுதிக் கொள்வதுபோல் இருக்கிறது. நாம் இருவரும் முன்னர் இருந்த நிலைக்கும் இப்போது இருக்கும் நிலைக்கும் எத்துணையோ வித்தியாசங்கள் இருக்கும். ஆதலால், நான் என் சொந்த ஊரைப்பற்றி நினைக்கும்போதும், உன்னுடைய கடிதங்களில் ஒன்றை எடுத்து வாசிக்கும்போதும், எனக்குத் தோன்றுவது என்னவென்றால், வேறு ஒரு உலகத்

தில் வசிக்கின்ற ஒரு ஆன்மா சொல்லுவதை நான் உன்னிப்பாகக் காதுகொடுத்துக் கேட்பதுபோல் இருக்கின்றது. நல்லொழுக்கத்தைக் கற்பிக்கின்ற எப்புத்தகமும் அல்லது மதசாரத்தைப் போதிக்கின்ற எப்புத்தகமும், மிகக் கீர்த்தி வாய்ந்த நமது வேதபுத்தகமும்கூட, நான் தனிமையாக என் நண்பர்களை விட்டுப்பிரிந்து எத்தனைத் தினங்களும், ஆண்டுகளும் கழிந்தன என்று நினைக்கும்போது நம் தேக நிலையாமையைப்பற்றி உண்டாகின்ற உணர்ச்சி அளிக்கமாட்டா. நான் இந்நாட்டில் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகத் தங்கியிருக்கின்றேனோ, அவ்வளவுக் கவ்வளவு அந்த எண்ணங்கள் உதிக்கின்றன. இப்போது, நான் என் சொந்த தேசத்திற்குத் திரும்பிச்செல்லும் சமயம் வாய்த்ததை நினைக்கும்போது எனக்குப் பெருமகிழ்ச்சி உண்டாகின்றது. இருப்பினும், நான் இந்தியாவிற்குத் திரும்புவதென்றால், எனக்கு வருத்தமும் உண்டாகிறது. ஏனென்றால், இந்தியாவில் நான் செய்த உத்தியோகத்தின் தரம் எல்லாம் இதுகாறும் கீழ்ப்படியிலேயே நிற்கின்றதே ஒழிய சிறிதேனும் கௌரவமான நிலையில் இல்லை. இராணுவத்தில் உயர்ந்த உத்தியோகத்தை நான் வகிக்க எனக்குப் போதிய இயற்கை அந்தஸ்து இல்லை என்று துரைத்தனத்தார் எண்ணுகின்றனர். நான் அங்கு வந்து சேர்ந்தபோதிலும், மனவமைதியோடு எனக்கு இனியுள்ள வாழ்நாட்களைக் கழிக்க முடியுமென்று நான் நினைக்கவில்லை. பெரும்பாலும், நான் மறுபடியும் எனக்குக் கிட்டாத பெரிய உத்தியோகத்தில் நாட்டம் வைத்து, இந்நாட்டிற்குத் திரும்பி வந்து விடுவேன் என்று நினைக்கின்றேன். நான் இப்போது என் சொந்த தேசத்திற்குப் போக வேண்டுமென்று தீர்மானித்தற்கு முக்கிய காரணம் ஒன்று உண்டு. என்னவென்றால், எனக்குப் பார்வை முன்

னிருந்தது போல் நல்ல நிலையில் இல்லை. இப்போது நான் உனக்குக் கடிதம் வரையும்போதெல்லாம், வெளிச்சத்திற்காக என் பேனுவைச் சீர்திருத்திக்கொள்ள என் கூடாரத்தின் வெளியே போக வேண்டியவனுக இருக்கின்றேன். இவ்வாறு என் பார்வை கெட்டதின் காரணம், நான் அநேக ஆண்டு களாகக் கொடிய வெய்யிலில் கூடாரங்களில் வசித்து வந்தமையே என்று நினைக்கின்றேன். எப்படியும் சூரியன் வீணுய்ப் பிரகாசிக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்முல், அவன் ஒளியுடன் பிரகாசித்து வந்தமையால் என் கண் பார்வை கெட்டுப்போய்விட்டதல்லவா? சூரியனேடுகூட, காலம் என்பதும் என் சம்பந்தமாக, அச்சூரியனுக்கு உதவி செய்திருப்பதாகத் தோன்றுகின்றது. காலம் என்பதும் என் பார்வையைக் கெடுத்ததும் அல்லாமல் என் தலைமயிரையும் வெண்மையாகச் செய்திருக்கின்றது. காலம் என்னும் பாவியின் கரங்கள், என் கண்முன்னர் பேய்களின் கரங்கள் போல ஒல்லியாகவும் நிழல் போலும் காணப்படு கின்றன. இன்னும் சில வருஷங்களில் அக்கரங்கள் கனமாகவும், கருமையாகவும் வளர்ந்து விடும். ஆதலால், நான் மிகக் கேவலமான நிலைக்கு வருமுன்னர் என் சொந்த ஊருக்குத் திரும்ப வேண்டியது அவசியம் என்று நினைக்கின்றேன்.''

கர்னல் மன்ரோ 1808ஆ ஏப்ரல்மீ இங்கிலாந்து போய்ச் சேர்ந்தார். அவர் தான் சொந்த ஊரைச் சேர்ந்ததும் அவரது முக்கியமான விருப்பம் நிறைவேறவில்லை. அது என்ன வென்ருல், அவர் அன்னைச் சிலமாதங்களுக்கு முன் னர் இறந்து விட்டமையால், அவள் திருமுகத்தைக் காண வில்லை. அவள்மீது உயிரை வைத்திருந்த அவர் தந்தை யாரும் மிகத் தளர்ச்சியடைந்து முன்போல் தன் புதல்வன்

கூட்டுறவில் பெருமகிழ்ச்சி பூக்கும் ஆற்றலில்லாமல் இருந்தனர். மன்ரோ துரைக்கும் செவிடு வந்துவிட்டமையால், அவர் தம் பழைய நண்பர்களோடு பேசிக் களிப்பதற்கு வழி இல்லை. அவரே தம்மைப்பற்றிச் சொல்லியதாவது:—

"என் நண்பர்களில் சிலர் என்னை மிக உன்னிப்பாக நோக்குகின்றார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், என் தேக இயந்திரம் கெட்டுவிட்டமையால், நான் வீட்டிற்குத் திரும்பி விட்டேன் என்று எண்ணுகின்றார் போலும்!" அவர் தம் சொந்த ஊருக்குச் சென்றதும், தம் பழமையான இடங்களை எல்லாம் கண்டு களித்தார். அதோடு அவர் வெகு தூரம் உலாவி உற்சாகம் கொண்டார்

மன்ரோ துரை எடின்பரோ என்னும் நகரில் சில மாதங்கள் தமக்கு மிக விருப்பமான இரஸாயன சாஸ்திரத்தை (Chemistry) மறுபடியும் வாசித்துக் களிபூத்து, லண்டன் நகருக்குச் சென்றனர். அவர் அங்கு அரசியல் சம்பந்தமான விஷயங்களிலும், காலத்திற்கேற்ற கிளர்ச்சியுள்ள விஷயங்களிலும் ஊக்கத்துடன் தலையிடலானார். ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் நிர்வாகசபையார் அவரை இந்தியாவைக் குறித்துப் பல நன்மதிகள் கேட்டனர். இந்தியாவைப்பற்றி நிலசம்பந்தமாகவும், நீதிமுறை சம்பந்தமாகவும், போலீஸ் சம்பந்தமாகவும் பார்லிமெண்ட் முன்னிலையில் விசாரணைகள் நடந்தன. அவற்றில் மன்ரோ பெருந்தகையார் கொடுத்த அபிப்பிராயங்களும், சாட்சிகளும் எல்லோரைக் காட்டிலும் மிகச் சிறந்து விளங்கின. பார்லிமெண்டார் அவருடைய அறிவின் ஆற்றலையும், நுட்ப உணர்ச்சியையும், உண்மையையும், பெருந்தன்மையையும் கண்டு வியந்து, அவரை மிகப் பாராட்டினார்

கள். இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்கு அனுப்பப்படும் விளைப்பொருள்கள் அதிகரிக்கும்படியான முயற்சிகள் செய்ய வேண்டுமென்றும், விளைப்பொருள்களின் விலைகள் குறைவதற்குச் சுருக்கமான பிரயாணங்கள் செய்ய வசதிகள் செய்ய வேண்டுமென்றும் துரைத்தனத்தாருக்கு அவர் வற்புறுத்திக் கூறினார். ஆங்கிலேயர்களின் வியாபாரத்திற்கு இடையூறு வராத நிலையில் இந்தியர்களுக்கு வியாபார சம்பந்தத்தில் எல்லா நன்மைகளும் வரும்படியான வசதிகள் செய்யலாம் என்றும், அவ்வாறு செய்வதால் இருதேசத்தாருக்கும் மிக நன்மையே விளையும் என்றும் கூறினார். இந்தியாவில் பருத்தி இன்னும் குணத்திலும், அளவிலும் மேன்மையுறும்படி அமெரிக்கா கண்டத்துப் பருத்தியும், மற்றத்தேசங்களின் பருத்தியும் இந்தியாவிற்குக் கொண்டுவரப்படுதல் வேண்டுமென்ற சிறந்த அபிப்பிராயம் தந்தார். வங்காளத்திலிருந்து இங்கிலாந்திற்கு அனுப்பப்படும் பட்டை நாம் எவ்வளவு வேண்டுமானாலும் அதிகப்படுத்தலாம் என்றும் மொழிந்தனர். இங்கிலாந்து தேசத்து விளைப்பொருள்கள் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டால் ஆங்கிலேய வியாபாரிகள் எவ்வளவு தீர்வை கட்டுகிறார்களோ அவ்வளவு தீர்வையேதான் இந்திய வியாபாரிகள் தங்கள் தேசத்து விளைப்பொருள்களை இங்கிலாந்திற்கு அனுப்பினால் கட்டவேண்டும் என்றும், அவ்வாறன்றி அவர்களுக்குள் வித்தியாசம் பாராட்டுவது தினைத்துணையும் நியாயம் அல்லவென்றும் துரைத்தனத்தாருக்குத் தைரியமாகவும், வெளிப்படையாகவும் எடுத்து உரைத்தனர்.

அதிகாரம் பதினொன்று.

நியாயஸ்தலச் சீர்திருத்தத் தலைவர்.

வங்காளத்திலும், சென்னையிலும் குடிகளின் வழக்குகளில் தீர்மானங்கள் விரைவில் அளிப்பதில்லை என்றும், குற்றம் செய்யும் தீயோர்களைப் பிடித்துத்தண்டித்து, அத்தகைய தீமைகள் மறுபடியும் நிகழா வண்ணம் தகுந்த முயற்சிகள் செய்வதில்லை என்றும், துரைத்தனத்தார்மீது குடிகளுக்குப் பெருங்குறை உண்டாயிருந்தது. அக்குறைகளுக்கு முக்கிய காரணங்கள் என்னவென்றால், ஒரு ஜில்லாவின் நியாயாதிபதி வழக்குகளை விசாரணை செய்வதோடு போலீஸ் சம்பந்தமான விஷயங்களிலும் மேல்பார்வை பார்க்க வேண்டியவராக இருந்தார். நியாயாதிபதிகளின் சம்பளம் மிகக்குறைவாக இருந்தமையால், அவ்வுத்தியோகங்களை வகித்த மக்கள் ஆற்றல் குறைந்தவர்களாகவும், யோக்கியதை மிகுதியாக இல்லாதவர்களாகவும் இருந்தார்கள். லார்ட் காரன்வாலிஸ் 1793-ஆம் வருஷம் ஏற்படுத்திய சட்டங்கள் இந்தியர்களின் மனப்பான்மைக்குப் பொருந்தியவை அல்லவென்றும், அவைகள் மாற்றப்பட வேண்டுமென்றும், மன்ரோ பெரியார் துரைத்தனத்தார்க்கு அறிவித்தார். அவர் முன்னிருந்ததுபோல் "பஞ்சாயத்" மறுபடியும் ஏற்படுத்தப்படவேண்டுமென்றும், போலீஸ் சம்பந்தமான மேற்பார்வைகளைக் கலெக்டேர் நியாயாதிபதிக்குப் பதிலாகப் பார்க்க வேண்டுமென்றும், கிராம உத்தியோகஸ்தர்கள் சிறு வழக்குகளை விசாரணை செய்து தீர்மானங்கள் கொடுத்துவிடலாமென்றும் கூறினர். காரிய நிர்வாகசபையார் ஒரு கமி

ஷன் ஏற்படுத்தி விசாரணை செய்து, அவர் கூறியபடி சீர் திருத்தம் செய்தனர். மேற்கூறிய கமிஷனுக்கு மன்ரோ பெருந்தகையாரே தலைவராக நியமிக்கப்பட்டார். அவர் தம் சொந்த ஊரில் ஆறு வருஷங்கள் தங்கிப் பின்னர் மறுபடியும் சென்னைமாநகரத்திற்கு 1814-ஆம் வருஷம் ஜூன் மாதம் திரும்பி வந்தார். அப்பொழுது அவர் திருமணம் செய்து கொண்டிருந்தபடியால், தம் மனைவியோடு இந்தியாவிற்கு வந்தார். அவர் மனைவியாரின் படம் சென்னைக் கவர்னர் பங்களாவில் வைக்கப்பட்டிருக்கிறது. மன்ரோ பதினெட்டு வாரங்கள் பிரயாணம் செய்து, செப்டம்பர் மாதம் 16-ஆம் தேதி சென்னைக்கு வந்தார். அவர் அங்கு வந்ததும், தம் சொந்த ஊருக்கு ஒரு கடிதம் வரைந்தார். அக்கடிதததில் ஓர் ஆங்கிலேயன் திருமணம் செய்துகொண்டு சென்னைக்கு வந்தால், அவன் எவ்வாறு மற்ற ஆங்கிலேயருடன் நடந்து கொள்ளவேண்டும் என்பதைப்பற்றி மிக வேடிக்கையாக எழுதியிருந்தார். அக்கடிதத்தின் ஓர் பகுதி கீழ்வருமாறு:—

“இச்சென்னைக்கு வருகிற ஒவ்வொரு ஆங்கிலேயரும் முதலாவதாகக் கல்லியாணம் செய்துகொண்டிருக்கிற மற்ற ஆங்கிலேயர்கள் எல்லோரையும் போய்ப் பார்க்கவேண்டும். அவர்கள் அவருக்குத் தெரிந்திருந்தாலும், தெரியாமலிருந்தாலும் அவர் பார்க்கவேண்டியது அவருடைய கடமையாகும். கல்லியாணம் ஆகாதவர்கள் முதலில் அவரை வந்து பார்ப்பார்கள். பின்னர் அவர் போய்க் கல்லியாணம் ஆகாதவர்களைப் பார்ப்பார். அதன் பின்னர் அவர் மனைவி மற்ற மாதர்களைப் போய்ப் பார்க்கவேண்டும். அம்மங்கையர்கள் ஒருவரோடு ஒருவர் ஏதோ வீண் பேச்சு பேசிக்கொள்ளவேண்டும். இந்த விதியைக் கல்லியாணம் செய்துகொள்பவன் அனுசரிக்கவேண்டி

இருப்பதால் நான் கொடிய வெயிலில் ஒரு பழைய இருசக்கிர வாடகைக் குதிரைவண்டியில் ஊரெல்லாம் சவாரிசெய்து, பட்ட கஷ்டம் இவ்வளவென்று சொல்ல முடியாது. இதற்கு முன்னர் நான் மனைவியில்லாமல் இங்கு வந்தபோது மேற்கூறியவாறு ஒரு கஷ்டமும் அடையவில்லை. கல்லியாணத்தின பயன் இது போதும்!''

எலியெட் என்பவர் மன்ரோதுரை சென்னைக்கு வந்த தினத்தில் சென்னைக் கவர்னர் உத்தியோகத்தை வகித்தார். அவர் மன்ரோதுரை குறிப்பிட்ட மாறுபாடுகள் ஒன்றும் அவசியமில்லை என்று அபிப்பிராயம் கொண்டிருந்தார். அதற்குக் காரணங்கள் அவர் பக்கத்திருந்த சிப்பந்திகள் தவறான விஷயங்களைச் சொல்லி, அவர் மனத்தைக் கெடுத்தார்கள்; இயற்கையாக ஒரு கலெக்டர் அல்லது ஒரு கமிஷனர் அடையும் பெருமையை சிவில் உத்தியோகஸ்தராகிய தாம் கண்டு பொறாமை யுற்றார்; மன்ரோ கூறிய மாறுபாடுகள் எவ்வித இடையூறுகளைத் தமக்கு உண்டாக்குமோ என்று பயந்தார். மன்ரோதுரை தாம் எடுத்துக்கொண்ட கமிஷன்வேலை சீக்கிரம் முடிவுபெறுதென்று சுலிவான் (Sulivan) என்பவருக்குக் கீழ்வருமாறு வரைந்துள்ளார்'' :—

“எலியெட்துரை சென்னைக்கு வந்ததும், அரசியல் சம்பந்தமாக எல்லா விஷயங்களும் மிக ஒழுங்காகவும், மிகச் சிறப்பாகவும் இருப்பதாகவும், நான் இந்தியாவை விட்டுப் போய் விட்டதும், அநேக சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு விட்டதாகவும் அபிப்பிராயம் கொண்டுவிட்டார். அதுவுமன்றி, நான் இப்போது எல்லா ஜில்லாக்களையும் பார்வையிட்டால் என் பழைய அபிப்பிராயங்கள் எல்லாவற்றையும்

ஒழித்து விடுவேன் என்றும் அவர் எண்ணம் கொண்டுவிட்டார். இன்னும், ஒரு கலெக்டரிடம் நியாயாதிபதியின் வேலையும், போலீஸ் வேலைகளும் இருப்பது தவறு என்றும், அதனால் குடிகளுக்குத் தீமை விளையும் என்றும் நான் ஒத்துக் கொள்வேன் என்றும் அவர் தீர்மானம் செய்துவிட்டார்.''

மன்ரோ இந்தியாவில் ஏறக்குறைய ஆறுமாதங்கள் தங்கியிருந்தும், கம்மிங் (Cumming) துரைக்கு, தாம் பல்லாரி, கடப்பை ஜில்லாக்களிலிருந்தபொழுது ஒருவரும் தம் விஷயங்களில் தலையிடாமல் இருந்ததுபோல், தமக்கு அப்போது இல்லை என்றும், தாம் எந்தப்புதிய வழிகளை அனுசரிக்க வேண்டியதாக இருந்தாலும், அவை ஒவ்வொன்றும் எவ்வித மாறுபாடுகளுக்கும் விரோதியாக இருந்துவரும் மக்களின் சம்மதத்தைப் பெற வேண்டியதாக இருக்கின்றனவென்றும், கவர்னரும், காரியதரிசிகளும் பெரிய நியாயஸ்தலத்தின் அதிகாரிகளும் போர்ட்டு ஆபீஸ் ஒவ்வொரு அங்கத்தினரும் ஆகிய இவர்கள் எல்லோரும் இராயத்துவாரி சிஸ்டம் (Rayatwari System) என்பதற்கு முற்றிலும் விரோதமாக இருக்கின்றார்கள் என்றும், போர்டு ஆபீசார் கீழ் உத்தியோகஸ்தர்களுக்கு விதிக்கும் கட்டளைகளில், 'அது எங்கள் விருப்பம், (It is our wish) என்றும் அல்லது, "நாங்கள் அபிப்பிராயம் தருகிறோம்'' (We propose) என்றும், இத்தகைய சொற்றொடர்களை உபயோகப்படுத்துவது தகுதியல்லவென்றும், அவைகள் 'நாங்கள் இந்த வழியில் உங்களைப் போகச் சொல்கிறோம்' (We direct) என்றும், "நாங்கள் உங்களுக்குக் கட்டளை விதிக்கின்றோம்,'' (We order) என்றும், முறையே இருப்பதுதான் தகுதியுடைத்து என்றும், அவ்வாறு இல்லையெனின், கீழ் உத்தியோகஸ்தர்கள் போர்டு ஆபீசாரின்

விருப்பத்தின்படி நடக்கவேண்டியது அவசியமில்லை என்றும், சமயத்திற்கு ஏற்றவாறு தங்கள் விருப்பத்தின்படி நடந்து கொள்ள அவர்களுக்கு அனுமதி உண்டென்று அவர்கள் எண்ணிக்கொள்வார்கள் என்றும் எழுதி இருந்தார். அவர் அதன் பின்னர் எழுதின வேறொரு கடிதம் கீழ்வருமாறு:—

"துரைத்தனத்தாரின் அபிப்பிராயங்கள் எல்லா மக்களின் பார்வைக்காக அச்சிடப்பட்டு வருகின்றனவென்றும், அவைகள் ஏறக்குறைய என் கருத்தின்படியே இருக்கின்றன என்றும் ஆனால் ஒன்று மாத்திரம் என் கருத்திற்கு மாறுபடுகின்றதென் றும், எலியெட்துரை என்னிடம் கூறுகிறார். மாறுபடுகின்ற விஷயம் என்னவென்றால், ஒரு நியாயாதிபதியின் வேலையை ஒரு கலெக்டருக்கு மாற்ற வேண்டுமென்று நான் நினைப்பது தகுதியுடையது அல்லவென்று அவர் எண்ணுவதாகும். மற்ற எல்லா விஷயங்களைக் காட்டிலும் இதுதான் மிகவும் முக்கிய மானது. ஏனென்றால், ஒரு கலெக்டருக்கு இந்த அதிகாரம் இல்லையென்றால், ஒரு ஜில்லா ஜட்ஜியின் கீழ் இருந்து போலீஸாரின் விவகாரங்களை மேற்பார்வை பார்ப்பதுதான் அவர் கடமை என்று ஏற்படும். அதனால் மற்ற என்ன சீர் திருத்தங்கள் செய்யப்பட்டாலும், உண்மைப்பயன் விளை யாது. ஆதலால், ஒரு சிறு கடிதம் விரைவில் இங்குள்ள துரைத்தனத்தாருக்கு எழுதவேண்டியது அத்தியாவசிய மாகும். அதில் என்னென்ன மாறுபாடுகள் செய்யவேண்டு மென்று உத்தேசித்து இருக்கின்றோமோ அவையனைத்தும் அத்தியாவசியம் என்றும், அவ்வாறன்றிச் சமயத்திற்கேற்ற படி எடுத்துக்கொண்டாலும் எடுத்துக்கொள்ளாவிட்டாலும் அவசியமில்லை என்று நீங்கள் எழுதக் கூடாதென்றும் நான் வற்புறுத்திக் கூறுகின்றேன்."

"1812,1813 ஆகிய இந்த இரண்டு வருஷங்களில் ஒரு அபீல் (Appeal) கேசும் தீர்மானம் செய்யப்படவில்லை. நானே சில அபீல் வழக்குகளைக் கவனித்தேன். இவ்வாறு கவனித்ததில் நியாயதிபதிகள் இத்தேசத்துக் குடிகளின் வழக்க ஒழுக்கங்களை அறியாமலிருப்பதனாலும், கிராமங்களின் உள்ளிருக்கும் ஏற்பாடுகள் இன்னவை என்று தெரியாமலிருப்பதனாலும், மேற்கூறிய வழக்குகள் உண்டாயின என்று அறிந்தேன். நியாயாதிபதிகள் கலெக்டராக இல்லாமலிருந்ததால் தான் இந்தக் கஷ்டம் வந்தது. நான் படித்த இரண்டு வழக்குகளைக் கீழே குறிக்கின்றேன்."

"1808-ஆம் வருஷத்தில் திருச்சிறாப்பள்ளி ஜில்லா கோர்ட்டில் நடந்த வழக்கு ஒன்று. இந்த வழக்கில் சில பிராமணர்கள் ஒரு கிராமவாசிகளுடன் சுவாமி போகம் என்ற சுதந்திரத்தைக்கொண்டு 1800 ரூபாய் தங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று வழக்கெடுத்தார்கள். அக்கிராமவாசிகள் பிராம்மணர்களுக்கு அவ்வாறு பணம் பெற்றுக்கொள்ளச் சுதந்திரம் இல்லை என்றும், அப்பணம் ஒரு கோயிலுக்கு நன்கொடையாகத் தாங்களே விரும்பிக் கொடுக்கச் சம்மதித்ததென்றும் விசாரணையில் கூறினார்கள். கிராமத்தின் கணக்கப்பிள்ளையின் கணக்குகளை நியாயாதிபதி ஒத்துக்கொள்ளவில்லை. மாகாணக் கோர்ட்டார் (Provincial Court) மேற்கூறிய நியாயாதிபதியின் தீர்ப்பை மாற்றிப் பிராம்மணர்கள் குறிப்பிட்ட பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், குறிப்பிடாத நிலத்தையும் பெற்றுக்கொள்வதற்கும் அனுமதி தந்துவிட்டனர். ஆனல், சாதர் கோர்ட்டார் (Sadar Court) (அதாவது இப்போதுள்ள ஐகோர்ட்டுக்குச் சமானமானது) ஜில்லா கோர்ட், மாகாணக்கோர்ட் ஆகிய இரண்டு இடங்களிலும்

கொடுத்த தீர்ப்பைத் தள்ளிவிட்டு, இரண்டு கட்சிக்காரரும் கோர்ட்டு செலவுகளை அவாவர்கள் கொடுத்துக்கொள்ளப் பிரியப்பட்டால் தங்கள் வழக்குகளை மறுபடியும் புதிதாகத் துவக்கவேண்டுமென்று தீர்மானம் செய்து விட்டார்கள்.''

"உறையூர் பாளையம் என்னும் ஊரில் ஒரு பாளையக்காரன் எடுத்த வழக்கு மற்றொன்று. இந்தப்பாளையக்காரன் மேற்கூறிய கிராமத்திலுள்ள பாளையக்காரர்களிடம் தனக்குத் தன் மூதாதிகளின் சம்பந்தமாக நிலம் அல்லது பணம் பெற்றுக்கொள்ளச் சுதந்திரம் உண்டு என்று வழக்கு தொடுத்தான். ஜில்லா கோர்ட்டிலும், மாகாணக் கோர்ட்டிலும் அவன் வழக்கு விசாரித்துத் தீர்மானம் செய்யப்பட்டது. அதற்குமேல் அது இப்போது சாதர் கோர்ட்டுக்கு (Sadar) விசாரணைக்கு வந்திருக்கிறது. இந்த விசாரணை சம்பந்தமாகக் கோர்ட்டு கடிதத்தின் பின்பக்கம் சாதர் கோர்ட்டுத் தலைவர், "மாகாணக் கோர்ட்டுத் தீர்மானம் சரி என்று நினைக்கின்றேன்.'' என்று எழுதப் பட்டிருத்தலை நான் பார்த்தேன். ஆனால், மேற்கூறிய மூன்று கோர்ட்டாரும் செய்த தீர்மானங்கள் முற்றிலும் தவறு என்பது நிச்சயம். இந்த வழக்கு ஆறு வருஷகாலமாக நடந்து கொண்டு வருகிறது. இது ஒரு கலெக்டர் அரைமணி நேரத்தில் சரியான தீர்ப்பு கொடுத்துவிடக்கூடிய வழக்காகும். இந்த வழக்கை மாத்திரம் ஒரு கலெக்டர் விசாரிப்பதாயிருந்தால், மேற்கூறிய பாளையக்காரன் வழக்கு எடுத்தே இருக்கமாட்டான். ஏனென்றால், உறையூர்பாளையம், காளாஸ்திரி, வெங்கடகிரி முதலிய பதிகளிலுள்ள ஜமீன்தாரர்களிடத்தில் நெருங்கிய பந்துக்களுக்கும் அவ்வாறு இல்லாத பந்துக்களுக்கும் மூதாதைகள் சம்பந்தமாக ஒரு நிலமும், எவ்வித பணமும் பெற்றுக்கொள்ளச் சுதந்திரம் கிடையாது.

அப்பதிகளிலுள்ள ஜமீன்தாரர்கள் தங்கள் சொந்த சகோதரர் முதலியவர்களுக்கு ஜீவனத்திற்காகத் தாம் விரும்பிய பணத்தைக் கொடுப்பார்களே யன்றி, அப்பந்துக்கள் வேறு சுதந்திரம் அடைய அதிகாரம் பெற்றவர்கள் அல்லர். இந்த வழக்கில் குறிப்பிட்ட வாதி ஒரு வக்கீல் தூர்ப்போதனையால் இந்த வழக்கை எடுத்திருக்கின்றார் என்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன். ஏனென்றால், வாதிக்கு நஷ்டம் வந்தாலும், இலாபம் வந்தாலும் வக்கீலுக்குத் தன் கூலி வந்துவிடுவது நிச்சயம்.''

மன்ரோதுரை கூறியபடி கடைசியாகப் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. அவைகளில் முக்கியமானவைகள் கீழ் குறிக்கும் சீர்திருத்தங்கள்.

(1) அதுவரையில் நியாயாதிபதியினிடத்திலிருந்த வழக்கு விசாரணை அதிகாரம் கலெக்டருக்கு மாற்றப்பட்டது.

(2) கிராம உத்தியோகஸ்தர்களின் பிள்ளைகளே போலீஸ் உத்தியோகஸ்தர்களாக ஏற்படுத்தப்பட்டார்கள்.

(3) கிராமங்களின் தலைவரே வழக்குகளை விசாரித்துத் தீர்மானம் கொடுக்க அதிகாரம் பெற்றார்கள்.

(4) நியாயாதிபதியின் அதிகாரம் அதிகமாக்கப்பட்டது.

(5) கோர்ட்டுகளிலுள்ள சட்டங்கள் எளிதாகச் செய்யப்பட்டன.

(6) "கிராம பஞ்சாயத்து," "ஜில்லா பஞ்சாயத்து" ஆகிய இரண்டும் ஏற்படுத்தப்பட்டன.

அதிகாரம் பன்னிரண்டு.

பிண்டாரிகளை அடக்குதல்.

கமிஷன் வேலை முடிந்ததும், இராணுவத்தில் ஒரு பெரிய உத்தியோகத்தை வகிக்க மன்ரோ துரை பிரியப்பட்டார். அவர் விரும்பியபடி அவருக்கு ஒரு நல்ல சமயமும் வாய்த்தது. மஹாராஷ்டிரத் தலைவர்கள் சில வருஷங்களாக அரச குமாரர்கள் போல் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் கொள்ளையடிக்கும் தலைவர்களாக இருந்ததை விட்டுக் கௌரவமான அரச குமாரர்கள் போல் வாழ்க்கையை மேன்மைப் படுத்தியது வியப்பாகவே இருந்தது. ஆனால், அவர்களுக்குப் பதிலாகப் பிண்டாரிகள் என்னும் பெயர் கொண்ட கொள்ளை அடிக்கும் கூட்டத்தார் ஆங்காங்குக் கிளம்பி விட்டார்கள். அவர்களுக்குக் கள்ளத்தனமாகச் சிந்தியா, ஹோல்கார் என்னும் இரண்டு மராட்டியத் தலைவர்கள் உதவிபுரிந்து வந்தார்கள். அந்தப் பிண்டாரிகள் மால்வா என்னும் பதியில் குடியிருந்தார்கள். அவர்கள் கொள்ளையடிக்கச் சென்னை இராஜதானிக்கும், பம்பாய் இராஜதானிக்கும் கூட வந்துவிட்டார்கள். ஏஸ்டிங்ஸ் (Hastings) என்னும் பிரபு அக்கூட்டத்தாரை அடக்குவதற்குப் பல முயற்சிகள் செய்துகொண்டு வந்தார். அப்போது மன்ரோ துரை அக்கொடியவர்களை அடக்குவதற்குத் தாம் பொறுப்பான ஒரு உத்தியோகத்தைப் பெறச் சம்மதிப்பதாகக் கூறினார். 1817-ஆம் வருஷம் ஜனவரி மாதம் அவர் ஏஸ்டிங்ஸ் பிரபுவுக்குக் கீழ் வருமாறு எழுதினார் :—

"பிண்டாரிகள் சம்பந்தமாகத் தகுந்த பிரயத்தனம் விரைவில் எடுக்கவேண்டியது அத்தியாவசியமாகும். இந்தி

யாவிலுள்ள போர்வீரர்கள் நம்மைத் தாக்காத வண்ணம் நாம் முயற்சிகள் எடுத்துக் கொள்வது வீணேயாகும். அவர்களிலும் முக்கியமாகப் பிண்டாரிகள் விஷயமாக நாம் அந்த அளவில் முயற்சிப்பது சிறிதும் பயன்தராது. மஹாராஷ்டிர சேனைகள் சில வேளைகளில் சாமான்கள் சேகரித்துக் கொள்ளும் பொருட்டு ஆங்காங்குத் தங்கி இருப்பது உண்டு. பிண்டாரிகள் எப்போதும் கொள்ளையடிப்பதே தொழிலாகக் கொண்டவர்கள். அவர்களுக்குப் போர்புரிந்து வெற்றியடையவேண்டுமென்ற நோக்கமே கிடையாது. அவர்களை நாம் அடக்க வேண்டுமானால், முதலில் அவர்கள் தங்கி இருக்கும் ஜில்லாக்களை நாம் பிடித்துக் கொள்ளவேண்டும். பின்னர் அவர்கள் இத்தேசத்து அரசாங்கத்தார் அதிகாரத்தில் அடங்கிக் கிடக்கும்படி நாம் செய்ய வேண்டுமானால், ஐதராபாக்கத்திலும், நாகப்பூரிலும் உள்ள சேனைகளுக்கும், கோதாவரிக்கும், நர்மதாவுக்கும் மத்தியில் சண்டை செய்ய வேண்டிய சேனைக்கும் என்னைத் தலைவராக நியமிக்கும்படி நான் கேட்டுக் கொள்கின்றேன். அப்பக்கங்களிலுள்ள எல்லா இராணுவ உத்தியோகஸ்தர்களுக்கும் அதிகமாகத் துரைத்தனத்தில் சேவகம் செய்திருப்பவன் நானே.''

மன்ரோ மேற்கூறியவாறு எழுதித் துரைத்தனத்தாரை இராணுவத்தில் ஒரு பெரிய உத்தியோகத்தைக் கேட்டிருந்த போதிலும், துரைத்தனத்தார் முன்னதாகவே வேறு உத்தியோகஸ்தர்களை அந்த ஸ்தானங்களில் நியமித்துவிட்டார்கள். மன்ரோவைத் தென்மஹாராஷ்டிர தேசத்துக் கமிஷனராக இருக்கும்படி துரைத்தனத்தார் கேட்டார்கள். அவர் அவ்வுத்தியோகத்தை வகிக்க ஒத்துக்கொண்டார். இருப்பினும், அவர் தாம் நியாயமாக அடையவேண்டிய சுதந்திரத்தை மற்

றவர்கள் நியாயமில்லாமல் அடைந்து விட்டதைக் குறித்து மனவருத்தத்துடன் வைசராய்க்கு ஒரு கடிதம் வரைந்தார். அக்கடிதத்தில் அவர் உத்தியோகச் சம்பந்தமாக உள்ள விஷயங்களை நீக்கி, அரசாங்கச் சம்பந்தமாக எழுதியுள்ள விஷயங்களை நாம் கவனிக்க வேண்டியது மிக அவசியமாகும் அவை கீழ்வருமாறு:—

"இத்தேசத்திலுள்ள அரசர்களிடம் நாம் வைக்கும் உதவிச் சேனைகள் பெரிதும் தீமைகளையே விளைவிக்கின்றன என்று நான் நினைக்கின்றேன். அவ்வாறு நாம் உதவிச்சேனை வைப்பதால் அவ்வரசர்களின் அரசாட்சி வலிவற்றதாகவும், குடிகளைத் துன்புறுத்துவதாகவும் ஆகிவிடுகின்றது. உயர்ந்த வகுப்பைச் சார்ந்த பெரிய கனவான்களின் சிறந்த ஊக்கத்தையும் அது அழித்து விடுகின்றது. இன்னும் அந்த ஏற்பாடு இத்தேசத்திலுள்ள குடிகள் அனைவரையும் தாழ்ந்த நிலைக்குக் கொண்டுவந்து, அவர்களைத் தரித்திரர்களாகவும் செய்து விடுகின்றது. இத்தேசத்தில் தீய அரசாட்சியை ஒழிப்பது எவ்வாறென்றால், அரண்மனையில் சாந்தமாகக் குழப்பம் கிளப்பிவிடுவதும், அல்லது பகிரங்கமாகப் பெரிய கலகத்தை உண்டுபண்ணி விடுவதும், அல்லது அன்னிய தேசத்தார்களைக் கொண்டு அவ்வரசாட்சியைக் கைப்பற்றிக்கொள்ளும்படி விடுவதும் ஆகும். ஆனால், ஆங்கிலேய சேனை இத்தேசத்து அரசர்களிடம் உதவியாக இருந்தால், மேற்கூறியவாறு தீய அரசாட்சியை நீக்க முடியாது. இவ்வித உதவி நாம் புரிவதால் இந்திய அரசர்கள் சோம்பேறிகளாகவும், தங்கள் பாதுகாப்புக்காக அன்னியர்கள் உதவியைத் தேடுபவர்களாகவும், குரூரமுள்ளவர்களாகவும், பேராசையுடையவர்களாகவும், குடிகளிடம் சிறிதும் பயமில்லாதவர்களாகவும் இருக்கின்றனர்."

மன்ரோதுரை தார்வாரில் (Dharwar) கமிஷனர் வேலையை ஒத்துக்கொண்டதும், சான்டர் என்னும் இராச்சியத்தின் தலைவரை அடக்கும்படி அவருக்குக் கட்டளை தம் மேல் உத்தியோகஸ்தரிடமிருந்து வந்தது. ஆங்கிலேயர்கள் பீஷ்வாவினிடத்தில் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி அவர்கள் மேற்கூறிய சான்டர் தலைவரை அடக்கவேண்டியவர்களாக இருந்தனர். மன்ரோதுரை சான்டர் என்னும் பதிக்கு 1817-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் போய்ச் சேர்ந்தார். சான்டர் தலைவர் தாம் பீஷ்வாவுக்கு அடங்கி நடப்பதைக் காட்டிலும் தம் கோட்டையிலேயே மடிந்துவிடுவேன் என்று பன்முறை சொல்லிக்கொண்டிருந்தார். அத்தகைய வைராக்கியம் பெற்றிருந்த அவர் மன்ரோதுரை பதிக்கு வந்ததைக் கேள்வியுற்றதும், அவர் சேனையைச் சந்தித்துத் தமது கோட்டையின் சாவிகளை அவரிடம் கொடுத்துவிட்டு, அவர் ஆதரவை வேண்டினர். மன்ரோ மிகத் தாராளமாக அவர் தமது இராச்சியத்தில் பல நலங்கள் அடையும்படி செய்தார். பின்னர் பீஷ்வா அரசபதவியினின்று தள்ளப்பட்டதும், மன்ரோ செய்த சிபார்சின்பேரில் சான்டர் தலைவர் துரைத்தனத்தாரிடமிருந்து இராச்சியத்தைத் திரும்பப் பெற்றனர்.

சர் ஜான் மால்காம் (Sir john Malcolm) மன்ரோ துரையின் பெருமையைப் பற்றிக் காரியதரிசி ஆதாம் (Mr. Adam) என்பவருக்குக் கீழ் எழுதியுள்ள அருமைக் கடிதம் ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்கத்தக்கது.

“நான் மன்ரோ சாயபு பகிரங்கமாக எழுதிய கடிதத்தின் நகல் ஒன்று இத்துடன் அனுப்புகின்றேன். இந்தக் கடிதத்தைப் பார்த்து நான் என்ன அபிப்பிராயம்

கொண்டேனே அதே அபிப்பிராயம் தங்களுக்கும் உண்டாகுமானால், மகத்தான ஆற்றலைப் பெற்ற மன்ரோ எவ்வளவுக்கு எவ்வளவு மேல் நிலைக்கு வருகின்றாரோ அவ்வளவுக்கு அவ்வளவு நாம் கீழ் நிலைக்குப்போய்விடுவோம் என்று எண்ணுவது தவறாகாது என்பதைத் தாங்கள் ஒத்துக்கொள்வீர்கள். நாம் உபயோகப்படுத்தும் ஆற்றல்கள்எல்லாம் சர்வசாதாரணமானவைகள். நாமும் சுறுசுறுப்பாகவும், ஊக்கமாகவும், தைரியமாகவுந்தான் காரியங்களை நிகழ்த்துகின்றோம். ஆனால், இந்த மன்ரோ செய்யும் காரியங்கள் நாம் செய்யும் காரியங்களைக் காட்டிலும் எவ்வளவோ சிறந்தன என்பதை நாம் கவனிக்கவேண்டும். பகைவன் தேசத்தில் தனிமையாக விடப்பட்டு, இராணுவத்தின் உதவியும், வசதியும் சரியாக கொடுக்கப்பெறாமலிருந்தும், அவர் ஒரு தேசத்தை அடக்குவதற்கும், அத்தேசத்திலுள்ள சேனையைத் துரத்துவதற்கும், பகைவனுக்குச் சேரவேண்டிய வரிகளை வசூல் செய்வதற்கும், அங்குள்ள குடிகளின் உதவியைக்கொண்டும், ஐந்து சிப்பாய்கள் கூட்டத்தைக் கொண்டும் தயாராக இருக்கின்றேன் என்று நமக்குச் சூழ்ச்சி காட்டுவது எவ்வளவு அருமையாக இருக்கின்றது என்பதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். அவர் காட்டும் சூழ்ச்சி மிகச் சிறியதாகவும், அதனால் விளையும் பயன் மிகப் பெரியதாகவும் இருப்பதால், அதைப்போன்ற சூழ்ச்சி அவரைப்போன்ற ஆற்றல் மிக்க மனத்தைப் பெற்றவர்களுக்குத்தான் செய்ய முடியும். அங்குள்ள குடிகள் அவர் ஆளுகைக்கு உட்பட்டு, அவர் அரசாட்சிக்குட்பட்டு மிக ஊக்கத்துடன் பாடுபடுகின்றனர். அவர் அரசியலின் பாக்கியத்தைப் பெற்ற ஒரு இராச்சியம் உலகிலுள்ள மிகச் சிறந்த அரசாங்கங்களில் ஒன்றாக இருக்

கும் என்பது திண்ணம். மன்ரோ இப்பெரிய விவகாரத்தில் உதவி பெற்றது அவர் அத்தேசத்தில் பெற்றுள்ள நற்கீர்த்தியே காரணம் என்று சொல்லக் கேள்விப்படுகின்றேன். அவ்வாறாயின், அவர் பெருமை இன்னும் அதிகமாகின்றது. அவர் தங்கி இருக்கும் ஜில்லாக்களில் அவர் எல்லோர் நன்மதிப்பையும் பெற்றிருப்பதின் காரணங்கள் அவருக்கு இயற்கையாக அமைந்துள்ள பேர் ஆற்றலும், பெரும் குணமுமேயாகும். அவர் எழுதிய கடிதத்தைப் படித்த பிறகு நான் ஒப்பற்ற சக்தி வாய்ந்த அவரை முன்னுக்குக் கொண்டுவர வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதைப்பற்றித் தங்களுக்கு மிக ஆவலோடு தெரிவிக்க எனக்கு உரிமை உண்டு என்று நம்புகின்றேன் தாங்கள் அவரைப்பற்றித் தூரத்திலிருந்து கேள்விப்பட்டீர்கள். நானோ அருகாமையில் அவரை நேராகக் கண்டேன்.''

மன்ரோ சென்னைத் துரைத்தனத்தாரிடமிருந்து போதிய சேனையைப் பெறாவிட்டாலும், ஊக்கமாகப் படை எடுத்துப் படாமி கோட்டையையும். பெல்காம் கோட்டையையும் பிடித்துவிட்டார். பெல்காம் கோட்டையைப் பிடித்ததால், அவருக்குப் போர்க்குரிய சாமான்களும், பீரங்கிப்படைகளும் கிடைத்தன. பெல்காம் கோட்டையைப் பிடித்தது ஆங்கிலேயர்களுக்கு மிக நன்மையாக இன்றும் இருந்து வருகின்றது. இந்தியாவின் அப்பக்கத்தில் பெல்காமே எல்லாவற்றைக் காட்டிலும் சிறந்த இராணுவஸ்தலமாக இப்போது இருக்கின்றது. பின்னர் மன்ரோ மிகச் சமர்த்தாகப் போர் நடத்தி ஷோலாப்பூரையும் கைப்பற்றிக்கொண்டார். அதன்பிறகு தென்மஹாராஷ்டிரதேசம் ஆங்கிலேய அதிகாரத்திற்குள் முற்றிலும் அடங்கிவிட்டது. மன்ரோ துரை தேக சவுக்கியமின்மையால், தம்

உத்தியோகத்தை விட்டுவிட்டுத் தம் சொந்த தேசத்திற்குச் செல்லும் பொருட்டுச் சென்னைமாநகரம் வந்துவிட்டார். அவர் பெல்காமிலிருந்து தம் சகோதரிக்கு எழுதிய கடிதம் ஒவ்வொருவர் உள்ளத்தையும் உருக்குவதால், அதைக்கீழ் குறிக்காமலிருப்பது நியாயமாகாது:—

"அருமைச் சகோதரி! நான் இப்போது உனக்கு மெழுக்குவத்தி விளக்கின் வெளிச்சத்தில் கடிதம் எழுத முடியாது. உனக்கு எப்போதும் இரவில் கடிதங்கள் எழுதுவது பழக்கம். ஆனால், உனக்கும், என் சகோதரனுக்கும் கடிதம் எழுதாமல் தடைப்படுவதின் முக்கிய காரணம் நான் பொதுமக்களின் நன்மையின் பொருட்டு முடிவில்லாமல் எழுதிக் கொண்டிருப்பதேயாகும். இந்த வேலை எனக்குத் தலைக்கு மேல் இருக்கின்றது. அதிர்ஷ்டம் என்பது என்னை இந்தியாவில் உத்தியோகத்திற்கு அடிமையாக்கிவிட்டது. இது தான் என் இந்திய வாழ்க்கையின் நலமாகும். பொறுமையும், நற்குணமும் அவசியமாக இருக்கவேண்டிய உத்தியோகம் எதுவோ அது எனக்கு எப்போதும் வந்து கொண்டிருக்கின்றது. ஆனால், அத்தகைய உத்தியோகத்தில் எவ்வித பெருமையும், கீர்த்தியும் வருவதில்லை. சிவில் உத்தியோகத்திலும், இராணுவ உத்தியோகத்திலும் எனக்கு வந்த வேலை ஒவ்வொன்றும் அத்தன்மையது. இதுதான் என் அதிர்ஷ்டம் போலும்! நான் அநேக ஆண்டுகளாகத் தலைவலியைக் கொடுக்கும் மிக நுணுக்கமான விஷயங்களையும், மிகக் கஷ்டப்பட்டு ஆராய்ச்சிசெய்து, தேகப்பிரயாசையைப் பாராமல் உழைத்து வந்தேன். அவ்வாறு நான் மிக நுணுக்கமான விஷயங்களை ஆராயக் கடமைப்பட்டில்லை என்றாலும், அவை அத்தியாவசியம் என்று எனக்குத் தோன்றியதால், நான் அவ்வளவு

கஷ்டம் எடுத்துக்கொண்டேன். அதன் பயனாக என் கண் பார்வை கெட்டுவிட்டது. அதுவுமன்றி, உறக்கத்தை நெடுங் காலமாக இழந்திருந்தவன் எவ்வித சோர்வை அடைவானோ அத்தகைய சோர்வையும் நான் அடைந்து விட்டேன்.''

அதிகாரம் பதின்மூன்று.

மறுமுறை இங்கிலாந்து போதல்.

1819-ம் வருஷம் ஜனவரி மாதம் மன்ரோ துரையும், அவர் மனைவியாரும் சென்னையிலிருந்து இங்கிலாந்திற்குப் பிரயாணப்பட்டார்கள். அவர்கள் கப்பல் சென்ட் எலினா என்னுமிடத்தில் சில நாட்கள் தங்கியிருந்தது. அப்போது மன்ரோ ஆங்குள்ள நெபோலியன் தங்கியிருந்த பல இடங் களைப் போய்ப் பார்த்தார். மே மாதம் 30-ஆம் தேதி அவர் மனைவி ஒரு ஆண் குழந்தையைப் பெற்றாள். ஜூன் மாதம் இறுதியில் அவரும், அவர் மனைவியாரும் இங்கிலாந்து போய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு உடனே ஸ்காத்லாந்து தேசத்திலுள்ள தங்கள் சிநேகிதர் வீடு களுக்குச் சென்றார்கள்.

மன்ரோ அங்குச் செல்வதற்கு முன்னர் அவரது புகழ் அத்தேசத்திற்கு எட்டியிருந்தது. அவரது பெரும்புகழ் கர்நாடகம், பரமஹால், மஹராஷ்டிராதேசம் ஆகிய இந்த இடங்களோடு நின்று விடவில்லை. கானிங் என்பவர் மஹ ராஷ்டிர யுத்தம் முடிந்த பின்னர் இங்கிலாந்திலுள்ள பார்லி மெண்டார் முன்னிலையில் மன்ரோ புரிந்த பெருமைமிக்க நற்செய்கைகளைப் பற்றிக் கீழ் வருமாறு உரைத்தார் :—

“ இந்தியாவின் தென்கோடியில் பொதுமக்களின் பார்வைக்கு எட்டாத ஒரு ஜில்லாவில் எடுத்த படையில் ஒருவர் மிகச் சிறந்த காரியம் செய்தனர். அவரைப்பற்றி எவரும் ஒன்றும் சரியாக இத்தேசத்தில் அறிந்திருக்கமாட்டார்கள். நானும் இதுகாறும் அவர் பெயரைக் குறித்துச் சிறப்பாக ஒன்றும் பேசாமலிருந்ததை எண்ணி மனம் வருந்துகின்றேன். நான் இங்கே தாமஸ் மன்ரோவைத்தான் குறிக்கின்றேன். அவர் பேராற்றல் எத்துணையதென்று ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் ஒப்பந்தம் (Charter) புதுப்பிக்கப்பட்ட பொழுது பார்லிமெண்டார் அறிந்திருக்கின்றார்கள். மன்ரோவைப்போல் பேராற்றல் மிகுந்த இராஜாங்க தந்திர நிபுணர்கள் ஐரோப்பாவில் பிறந்ததில்லை. சுத்த வீரர்களை ஏராளமாகப் பிறப்பித்த இந்தியா தேசத்திலும் அவரைக் காட்டிலும் சிறந்த யுத்தவீரர் ஒருவரும் இலர். இவர் அநேக வருஷங்களாகச் சிவில் உத்தியோகத்தையே அதிகமாகப் பார்த்திருந்த போதிலும், இப்போது நடந்த யுத்தத்தில் இவர் உதவியைத் துரைத்தனத்தார் நாடும்படியாயிற்று. இவரது போர் நுணுக்கத்தின் ஆற்றல்களெல்லாம் அநுபவத்திலில்லாமலிருந்தபோதிலும், அவை ஒருவிதத்திலும் கெட்டுப்போகவில்லை. இவர் யுத்தகளத்திற்கு 500, 600 போர் வீரர்கள்தான் கொண்டுபோனர். அவர்களில் ஐரோப்பியர்கள் மிகச் சொற்பமாக இருந்தார்கள். இவர் அச்சேனையோடு மஹாராஷ்டிர இராச்சியத்தில் சென்று, மஹாராஷ்டிரர்கள் பூனா உடன்படிக்கையின்படி நமக்கு அளித்த நாட்டைக் கைப்பற்றுவதற்கு முயற்சித்தார். இவர்தம் யுத்த வீரர்களைக் கொண்டு அடக்கிய குடிகளிடம் மிக்க நியாயமாகவும், மரியாதையாகவும், ஒழுங்காகவும், புத்திசாலித்தனமாகவும் நடந்து,

அம்மக்களின் உள்ளங்களில் அன்புருவாய ஒரு இராச்சியத்தை ஸ்தாபித்துவிட்டார். இவர் படையெடுத்துக்கொண்டு போகும் வழியில், ஒன்பது கோட்டைகள் தாமாகவே இவர் வசத்தில் அகப்பட்டன; ஒருவரும் அறியாமல் குடிகளுக்குப் பெரிய நன்மைசெய்து, எங்கும் சமாதானமும், நிர்ப்பயமும் நிலவச்செய்திருக்கின்றார். இவர் பெருமையை விளக்கிக் காட்டுவது அவசியமில்லை என்று நினைக்கின்றேன்."

துரைத்தனத்தார் மன்ரோ பெரியாருக்குக் கவர்னர் வேலை யளிக்கவேண்டுமென்று முன்னமே நினைத்திருந்தார்கள். 1818-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் பம்பாய் கவர்னர் வேலை காலியாவதாக இருந்தபடியால், கானிங் துரை என்பவர் காரிய நிருவாக சபையாருக்கு அவ்வுத்தியோகத்திற்குத் தகுதி உடையவர்களாக சர். ஜான்மால்காம், எல்பின்ஸ்டோன், கர்னல் மன்ரோ ஆகிய இம்மூவர்கள் பெயர்களையும் குறிப்பித்திருந்தார். அவர் அவ்வுத்தியோகத்தின் சம்பந்தமாக, "காரிய நிருவாக சபையார் இதுவரையில் கவர்னர்கள் வேலைக்கு இத்தேசத்திலுள்ள திறமை மிக்க மக்களையே பொறுக்கி எடுப்பது வழக்கமாக இருந்தபோதிலும், ஈஸ்ட் இந்தியாகம்பெனியில் வேலை பார்க்கும் உத்தியோகஸ்தர்களுக்கு அப்பெரிய பதவியைக் கொடுப்பது வழக்கமில்லை என்றாலும், யாவரும் வியக்கத்தக்க ஊக்கமும், சமர்த்தும், சிவில் உத்தியோகத்திலும், இராணுவ உத்தியோகத்திலும் துரைத்தனத்தாருக்குப் பெருநன்மை விளைவித்துள்ள மக்களுக்குத் தகுந்த பரிசு நாம் அளிக்கவேண்டியது அவசியமாக இருப்பதால், காரிய நிருவாக சபையார் தங்கள் புராதன வழக்கத்தை மாற்றுவது தவறில்லை என்று நான் நினைக்கின்றேன். மேலே குறிப்பிட்ட மூன்று உத்தியோகஸ்தர்களும் பல

துறைகளில் துரைத்தனத்தில் வேலை செய்து, நிற்கீர்த்தி பெற்றவர்கள்.'' என்று எழுதியிருந்தனர்.

மேற்கூறிய மூன்று கனவான்களும் இந்தியா தேசத்தில் கவர்னர் பதவியை அடையும் பாக்கியத்தைப் பெற்றார்கள் எல்பின்ஸ்டோன் என்பவர் முதலாவதாகப் பம்பாய் இராஜதானிக்குக் கவர்னராக நியமிக்கப்பட்டார். அவருக்குப் பின் சர்ஜான்மால்காம் அவர் பதவியைப்பெற்றார். மன்ரோ பெரியார் இந்தியாவை விட்டு இங்கிலாந்திற்குச்சென்ற சில மாதங்களுக்குள் சென்னைக் கவர்னராக நியமிக்கப்பட்டார். அவர் கவர்னர் உத்தியோகத்தை வகிக்க ஒத்துக்கொண்டதும் அவருக்குத் துரைத்தனத்தார் கே. சி. பி (K. C. B.) என்னும் பட்டத்தை அளித்தனர். அவர் இந்தியாவிற்கு வருவதற்கு முன் காரிய நிர்வாக சபையார் ஒரு விருந்து ஏற்பாடு செய்தனர். அப்போது அவரைக் குறித்து அவர் பழைய நண்பராகிய வெல்லிங்டன் பிரபு மிகச்சிறப்பாகக் கீழ்வருமாறு பேசினார்:—

"நாம் எல்லோரும் இத்தேசத்தில் அதிகாரம் எவ்வழிகளிலிருந்து உண்டாகின்றது என்று சரியாக அறியாமல் அவமை் உறுகின்றோம். இவ்வதிகாரம் மக்களிடமிருந்துதான் உண்டாகின்றது என்று சிலர் நினைக்கிறார்கள்; மற்றவர்களோ வேறுவிதமாக அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால், எல்லா மக்களும் இவ்வதிகாரத்தை மக்களிடம்தான் உபயோகப்படுத்த வேண்டும் என்று ஒரேவிதமான அபிப்பிராயத்தைக் கொள்ளுகின்றார்கள். சென்னை இராஜதானிக்குக் கவர்னராக ஏற்படுத்தப்பட்ட பெருங்குணமும், பேராற்றலும் வாய்ந்த மன்ரோ 120 லக்ஷம் குடிகளின் சந்தோஷகரமான வாழ்க்கைக்கு என்னென்ன முயற்சிகள் செய்யவேண்டுமோ அவற்றையெல்

லாம் தளராமல் செய்வார் என்று நான் நிச்சயமாக நம்பு கின்றேன்."

மன்றோ பெருந்தகையார் இந்தியாவிற்கு வர இரண்டொரு நாட்களிருந்தபோது, தம் நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதம் அவர் எத்தகைய பெருந்தன்மையும், உண்மையே ஒளிரும் உள்ளமும் வாய்ந்தவர் என்பதைக் காட்டுதலால், அதையும் கீழே குறிக்கின்றோம்:—

"பார்லிமெண்டில் என்னைப்பற்றி நிகழ்ந்த இன்பகரமான சம்பவத்தில் நான் அடைந்த நல்லின்பத்தைப்போல் இனி நான் செய்யும் கவர்னர் உத்தியோகத்தில் உண்மையில் அடைவேன் என்று நான் நினைக்கவில்லை. கானிங் பெரியாரைப் போல் ஒரு சிறந்த குணவந்தர் மிகச் சிறப்பாக எடுத்துப் புகழ்ந்து பேசும் பாக்கியத்தை ஒருவர் அடைய வேண்டுமானால், அவர் கவர்னர் பதவியை அடையவேண்டியது மிகவும் அவசியமே."

மன்றோவும், அவர் மனைவியாரும் டிசம்பர் மாதத்தில் இந்தியாவிற்குப் புறப்பட்டு மே மாதம் பம்பாய் நகரை வந்தடைந்தனர். அந்நகரிலிருந்த எல்பின்ஸ்டோன் என்னும் கவர்னர் அவ்விருவருக்கும் தம் அரண்மனையில் இரண்டு வாரம் விருந்து வைத்தனர். அதன் பின்னர் அவர்கள் கடல் மார்க்கமாகப் பிரயாணம் செய்து, 1820 ஆம் வருஷம் ஜூன் மாதம் 8-ஆம் தேதி சென்னைமாநகருக்கு வந்தனர். மன்றோ சென்னைக்கு வந்து இரண்டு தினங்கள் கழிந்ததும், கவர்னர் பதவியை வகித்தார். பம்பாய் கவர்னர் மன்றோவைப்பற்றிக் கீழ்வருமாறு புகழ்ந்து எழுதினார்:—

"மன்றோவும், அவர் மனைவியாரும் இவ்விடத்தைவிட்டுப் பிரிந்தனர். இதுவரையில் நான் அவர் கூட்டுறவில் அடை

ந்த சந்தோஷத்தைக் காட்டிலும் அதிக சந்தோஷம் இப்பொழுது அடைந்தேன். அழுத்தமான அறிவும், உயர்ந்த அந்தஸ்துப், வேடிக்கையாகப் பேசும் திறமையும், கள்ளமில்லாக்குணமும், தருமசிந்தனையும் அவருக்கு நெடுங்காலமாக இருப்பதோடு, இப்போது புதிததாக இலக்கியத்தில் பழக்கமும், பாட்டில் விருப்பமும், கற்பனைகளில் ஆர்வமும் அவருக்கு உண்டாயிருக்கின்றன. இப்புதிய தன்மைகள் அவரது தலைசிறந்த குணத்தின் மாட்சிமையை முற்றிலும் பொலியச் செய்கின்றன. அவரிடத்தில் நான் கொண்டுள்ள மரியாதை என் தந்தையினிடத்தில் நான் வைத்துள்ள மரியாதைக்கு இணையாகும். நான் அவரிடத்தில் களங்கமின்றி நடக்கும் தன்மை நான் என் சகோதரனிடத்துக் கள்ளமின்றி நடந்து கொள்ளும் தன்மைக்குச் சமானமாகும். அவர் இயற்கையாகவே தலைசிறந்த ஞானம் அமையப்பெற்றவர் என்பதும், அச்சிறந்த ஞானம் அவர் பல போர்களிலும், உடன்படிக்கைகளிலும் நெடுங்காலமாக உழைத்த உழைப்புக்களால் பழுத்து ஒளிர்கின்றது என்பதும் முற்றிலும் உண்மை."

அதிகாரம் பதினான்கு.

சென்னைக் கவர்னர்.

சர் தாமஸ் மன்ரோ சென்னைக்கவர்னர் உத்தியோகத்தை வகித்தபோது அவருக்கு முன்னிருந்த கவர்னரிடம் வேலை பார்த்த பழைய உத்தியோகஸ்தர்களுக்கு விருப்பமில்லாத பல சீர்திருத்தங்களும், புதிய ஏற்பாடுகளும் செய்யவேண்டியவராக இருந்தார். அவர் எத்துணைய புத்தி சாதுரியமாகத் தம்

உத்தியோகத்தைக் கவனித்தார் என்பதை விளக்குதற்குத் திருவாங்கூரில் புதிதாக நியமிக்கப்பட்ட புது மந்திரியாகிய கர்னல் நீயூவால் என்பவருக்கு அவர் சென்னைக்கு வந்து சில மாதங்கள் கழிந்ததும் எழுதி அனுப்பிய நன்மதியே போதுமானது. அதாவது, "பொதுமக்களின் காரியங்கள் முன் நடைபெற்ற தன்மையைப்போலவே நடைபெறுமாறு செய்வீர் என்று நான் நம்புகின்றேன். புதிதாக ஒரு ஆபீசுக்குத் தலைவர் வந்தால் எவ்வாறு ஆயிரக்கணக்கான பிரயாதுகள் பழைய உத்தியோகஸ்தர்களின் மீது வருகின்றனவோ அவ்வாறே உம்மீதும் பல பிரயாதுகள் வரக்கூடும். அவற்றை எல்லாம் நீர் நிதானமாகவும், பொறுமையாகவும் கேட்கவேண்டும். அவ்வாறு கேட்பதால் பிரயாது செய்யப்பட்ட உத்தியோகஸ்தர்மீது தவறு இருப்பது உண்மை என்று உம்வரையில் தீர்மானமாக ஏற்பட்டால், அவரை நீர் வேலையினின்று நீக்கி விடலாம். ஆனால், இத்தகைய விஷயங்களிலெல்லாம் அதிக முன்ஜாக்கிரதை வைக்கமுடியாது. நீர் ஏதாவது ஒரு காரியத்தைப் புதிதாகச் செய்யவேண்டியதாக இருந்தால், எனக்குக் கடிதம் வரைந்து, எனது அபிப்பிராயத்தைப் பெறுவீர் என்று நம்புகின்றேன். நாம் முன்னமே இத்தேசத்தில் அநேக விதமான புதிய ஏற்பாடுகள் செய்திருக்கின்றோம்."

மன்ரோ துரை, "1816-ஆம் வருஷம் ஏற்பட்ட சட்டங்களின்படி நான் ஒன்றும் சீர்திருத்தம் இதுவரையில் செய்யாமலிருந்தபோதிலும், அச்சட்டங்களின் நோக்கங்களை நான் எப்போதும் மறக்கவில்லை. அவை கோர்ட்டு சம்பந்தமாகப் பல புதிய சட்டங்களை ஏற்படுத்திக் குடிகளைக் கஷ்டப்படுத்தாமலிருப்பதும், ஐரோப்பியர்களுக்கும், இந்தியர்களுக்கும் அவரவர் ஆற்றலுக்கும், தன்மைக்கும் ஏற்ப உத்தியோகங்

கள் அளித்து அரசாங்க முறைமையை ஒழுங்கு படுத்துவதும், இந்தியர்களுடைய பழைய வழக்க ஒழுக்கங்களை நாம் பாதுகாத்து, அவர்களது அபிமானத்தையும், அன்பையும் பெறுவதும் ஆகிய இவைகளாம்.'' என்று கானிங் துரைக்கு எழுதி இருந்தனர்.

மன்ரோ இந்தியர்களின் முன்னேற்றத்தின் சம்பந்தமாக வெளியிட்ட அருமையான கருத்துக்கள் புதுமையாகவும், அழகாகவும் இருத்தலால், அவற்றையும் கீழே குறிக்கின்றோம்:—

''இந்தியா போர்டின் தலைவராக (India Board) வருபவர் என்ன மாறுபாடுகள் செய்து விடுவாரோ என்று எப்போதும் அஞ்சுகின்றேன். ஏனென்றால், எப்போதாகிலும் ஒருகாலத்தில் அஞ்சா நெஞ்சு படைத்த ஒரு ஆங்கிலேயர் மேற்கூறிய போர்டின் தலைவராக நியமிக்கப்பெற்றால், அவர் இந்தியர்களையெல்லாம் கிறிஸ்தவர்களாக மாற்றிவிடவேண்டுமென்று ஒரே வைராக்கியம் கொண்டுவிடக்கூடும். அந்த விதமான மாறுதல் இந்தியாவில் முன்னதாகவே சிறிது செய்துவிடப்பட்டது என்று எண்ணுகின்ற மக்களும் இங்கிலாந்தில் இருக்கின்றார்கள். இன்னும், அவர்கள் இந்தியாவிலுள்ள கம்பெனி உத்தியோகஸ்தர்கள் மாத்திரம் தடைசெய்யாமலிருந்திருந்தால், அத்தகைய மாறுதல் இந்தியா முழுமையும் உண்டாய்விட்டிருக்கும் என்று கருதுகின்றார்கள். இந்தியர்களாவது அல்லது வேறு எத்தேசத்துக் குடிகளாவது விரைவில் விருத்தி அடைந்துவிடுவார்களென்று இக்காலத்து ஆங்கிலேயர்களில் சிலர் கொள்ளும் கொள்கையில் எனக்கு நம்பிக்கையில்லை. இந்தியர்களின் மனப்பாங்கு இப்போதும் வாஸ்கோடி காமா முதல் முதலில் இந்தியாவிற்கு வந்த

போது எத்தன்மையில் இருந்ததோ அத்தன்மையிலேயே தான் இருக்கின்றது. அது இன்னும் ஒரு நூற்றாண்டு கழிந்தாலும் இதைக் காட்டிலும் அதிக மேன்மையாக இருக்குமென்று நினைக்க இடமில்லை.''

''இந்த நூற்றாண்டில் இந்தியாவில் அடிக்கடி நிகழும் போர்களை நிகழாமல் தடுப்பதால், நமது வன்மையுள்ள அரசாட்சி இத்தேசத்து மக்களின் செல்வத்தையும், அவர்கள் தொகையையும் அவசியம் விருத்தி செய்யும் என்பது திண்ணம். நாம் கல்விச்சாலைகள் ஏற்படுத்தி, அவர்கள் பாஷையில் இலக்கியத்தில் நல்ல ஞானத்தையும், ஆங்கில மொழியின் இலக்கியத்தில் நல்ல ஞானத்தையும் அவர்களுக்குக் கொடுக்கலாம். ஆனால், இவைகளெல்லாம் அவர்கள் மனப்பான்மையை மாற்றிவிடுமென்று எண்ணுவது தவறு. அவர்களை எவ்வளவு அதிகமாக வேண்டுமானாலும் அடிமைகளாகவும், அடக்க முடையவர்களாகவும், உழைப்பாளிகளாகவும் பற்பல கலைகளில் வல்லுநர்களாகவும் செய்துவிடலாம். ஆனால், அவர்களது நன்னடக்கையை (Moral Excellence) விருத்தி செய்ய நம்மால் ஆகாது. அவர்களது நல்லொழுக்கத்தை நமது சட்டங்களும், கல்விச்சாலையில் வைத்துள்ள புத்தகங்களும் விருத்தி செய்வதைக் காட்டிலும் நமது அரசியல் அதை இன்னும் கீழ் நிலைக்குக் கொண்டு வந்துவிடும் என்பது நிச்சயம் ஏனென்றால், நமது அரசாங்க முறைமை இந்தியர்கள் ஒருவித அதிகாரத்தையும், நம்பிக்கையையும், இலாபகரத்தையும் அடையாதபடி அமைக்கப்பட்டுளது. நாம் நம் நோக்கங்களுக்கு விரோதமாகவே சகல காரியங்களையும் நிகழ்த்துகின்றோம். நாம் இந்தியர்களுக்கு நன்மையை விளைவிக்க வலிவற்ற கருவியையும், அந்நன்மையைக் கெடுக்க

வன்மையுள்ள கருவியையும் உபயோகப் படுத்திக்கொண்டு வருவதால், அவர்கள் விருத்தி ஆவார்களென்று எதிர்பார்க்க முடியாது. ஒரு தேசத்துக் குடிகளின் நல்லொழுக்கத்தை விருத்தி செய்வதும், அவர்கள் அதைப் பாதுகாப்பதும் ஆகிய இவ்விரண்டும் அவர்கள் அந்நியர் ஆளுகைக்குட்பட்டிருக்கையில், ஒன்றுக்கொன்று பொருந்தாதனவாகும். இந்தியர்கள் எவ்வளவு ஆற்றல் பெற்றவர்களாக இருந்தாலும், அவர்களுக்கு ஒரு சிறிய உத்தியோகத்திற்கு மேல் அடைவதற்கு வழியில்லாமலிருப்பதாலும், அத்தகைய ஆற்றல்கள் அவர்களுக்கு ஐஸ்வரியத்தையாகிலும், கௌரவத்தையாகிலும் கொடுப்பதற்குச் சக்தியற்றவைகளாக இருப்பதாலும், அவர்கள் விருத்தியாகக் கூடிய வழிகளில் எவ்வாறு ஊக்கம் கொள்வார்கள்? அவர்கள் மேல் அந்தஸ்திற்கு வரவொட்டாமல் தடுக்கும் தடைகள் பல இருத்தலால், அவர்கள் நன்னடக்கையை விருத்தி செய்ய நாம் எடுக்கும் முயற்சி ஒவ்வொன்றும் எவ்வாறு பயன்படும்? மற்றத் தேசங்களில் எவ்வாறு மக்கள் அதிக உழைப்பின் பயனாக உயர்ந்த நிலைகளை அடைகின்றார்களோ, அத்தன்மையைப்போல் இந்திய நாட்டிலும் வசதிகள் ஏற்படுத்தினாலன்றி, அவர்கள் ஒழுக்கத்தின் முன்னேற்றத்திற்கு நாம் பாடுபடுவதில் பயனில்லை அவர்களை விருத்தி செய்யும் விஷயத்தில் நாம் எவ்வித முயற்சி எடுத்தாலும், மிக நிதானமாக இருக்க வேண்டும். நாம் அவர்களிடத்தில் எவ்வளவு நம்பிக்கை வைக்கின்றோமோ அதற்குத் தகுந்தாற்போல் அது உயர்த்தப்படவேண்டும். நம் விருத்திக்கு இடையூறு இல்லாத விதங்களில், அவர்களை எவ்வளவு வேண்டுமானாலும் நாம் விருத்தி செய்யலாம் உண்மையான இராணுவ அதிகாரம் முற்றிலும் நம் கையி

லேயே இருக்கவேண்டும். அவர்களுக்கு இனிமேல் ஆங்கிலேயரின் பார்வையிலுள்ள எல்லாச் சிவில் உத்தியோகங்களையும் கொடுக்கலாம். ஆனால், அவர்களுக்குப் படிப்படியாகத் தான் உயர்ந்த உத்தியோகங்கள் நாம் கொடுத்துக்கொண்டு வரவேண்டும். ஏனென்றால், அவர்களுக்கு ஒரு உயர்ந்த சிவில் உத்தியோகத்தை நம் சட்டங்களுக்கும், கருத்துக்களுக்கு இணங்க வகிக்க இன்னும் திறமை வரவில்லை. இந்தியா தேசத்தில் வரி உயர்த்தும் வழிகளைப்பற்றிச் சரியான ஞானம் நமக்கு என்றும் உண்டாகவே மாட்டாது. நாம் வரிகளை மிகக் குறைவாகவோ அல்லது மிக உயர்வாகவோ போட்டு விடுவோம். ஆனால், இந்தியர்களில் உயர்ந்த வகுப்பாரைச் சார்ந்த மக்களைக் கனவான்களாக நாம் பாராட்டவும், இங்கிலாந்தில் கீழ் பார்லிமெண்டில் (House of Commons) உள்ள அங்கத்தினர்கள் வரிகள் உயர்த்துவதிலும், குறைப்பதிலும் எவ்வாறு நம்மவர்களுக்கு உதவியாக இருக்கின்றார்களோ, அதைப்போல இந்தியர்கள் இந்தியாவில் வரி உயர்த்துகிற அல்லது குறைக்கிற விஷயங்களில் நமக்கு உதவியாக இருக்குமாறு செய்யவும், நாம் கற்றுக் கொள்வோமானால், வரி சம்பந்தமான விஷயங்களில் நமக்குச் சரியான ஞானம் உண்டாகும்.''

மன்ரோ பெருந்தகையார் பல்லாரியிலிருந்த ஒரு சப் கலெக்டரைப்பற்றி எழுதிய வரலாறு இந்தியர்களாகிய நாம் மிகவும் பாராட்டத்தக்கதாக இருப்பதால், அதைப்பற்றி ஈண்டு வரைவது குற்றமாகாது.

''சப் கலெக்டர் தம் லிகிதத்தில் எழுதிய விஷயங்கள் எல்லாம் மிக அதிகமாகப் புகழத்தக்கவைகளே. ஆனால், அவர் அதில் இந்துக்களுடைய குணத்தைப்பற்றியும், அவர்களுக்குப்

புத்தகங்கள் தாம் பரிமாறிய விஷயத்தைப் பற்றியும், அவர் அதில் எழுதியிருப்பது சரியாகத் தோன்றவில்லை. அவர் இந்தியர்களிடத்தில் மிக்க கேவலமான துர்அபிப்பிராயம் வைத்திருப்பதை அதில் காட்டுகின்றார். இன்னும் இந்தியாவிலுள்ள உழவர்களின் அறியாமையைப் பற்றியும், அவலக்ஷணமான பேச்சைப் பற்றியும் அவர் மிகவும் வருந்துவதாக அதில் காட்டியிருக்கின்றார் அதுவுமல்லாமல், அவர்களின் அறியாமையும், அவலக்ஷணமான பேச்சும் எக்காலத்திலும் அவர்களும், ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களும் நேருக்கு நேராக எவ்வித சமாசாரமும் பேசிக்கொள்ளத் தடையாக இருக்குமென்றும் அவர் அபிப்பிராயப்படுகின்றார். மேற்கூறிய குறைகள் இந்தியா தேசத்திற்குத்தான் இருப்பது போலவும், இங்கிலாந்திலுள்ள உழவர்களும், வேலைக்காரர்களும் மிகக் கற்றவர்கள் போலவும், புனிதமான ஆங்கிலம் பேசுபவர்கள் போலவும் அவர் விஷயங்கள் எழுதியிருக்கிறார்."

"அந்தச் சப்கலெக்டர் ஒரு மதப்பிரசங்கி என்ன வேலைகள் செய்யவேண்டுமோ அவற்றையெல்லாம் உண்மையாகச் செய்திருக்கிறார்; அந்த வேலையில் தம் கச்சேரியையும், ஜில்லாக் கச்சேரிகளையும் உபயோகப்படுத்தி இருக்கிறார். அவரே புத்தகங்கள் பரிமாறியும் இருக்கிறார், பிரசங்கம் செய்துமிருக்கிறார். மதப்பிரசங்கியாக இருந்தால், அவற்றைக் காட்டிலும் வேறு என்ன அவர் செய்திருக்கக் கூடும்? வேண்டுமானால், அவர் அப்போது அத்துறையில் அவ்வளவு செய்திருக்க முடியாது என்று சொல்லலாம். அவர் மதப்பிரசங்கியாக மாத்திரம் இருந்திருந்தால், குடிகளைக் கூட்டியிருக்க முடியாது; தம் மதப்புத்தகங்களைப் பரிமாறக் கச்சேரி

களை உபயோகப்படுத்தி இருக்க முடியாது. ஒரு சிவில் உத்தியோகஸ்தர் தவிர மற்ற எவரும் இதைச் செய்திருக்கமுடியாது. பல்லாரியிலும், அர்ப்பனஅல்லியிலும் அதை அவர் தவிர வேறொருவர் செய்திருக்க முடியாது. இவ்வளவுக்கும் தம் உத்தியோகத்தின் அதிகாரத்தை மதசம்பந்தத்தில் உபயோகப்படுத்தியதாக அவர் உணரவேயில்லை.''

" தம் உத்தியோகத்தின் அதிகாரத்தை மதசம்பந்தமாக உபயோகப் படுத்தியது தவறு என்று அவர் மேல் உத்தியோகஸ்தர் கூறினால், அது சரியென்று அவர் கிறிஸ்துவ வேத திலிருந்து மேற்கோள்கள் எடுத்துக் காட்டுகின்றார். அதனும் துரைத்தனத்தார் அவர் கருத்தின்படி நடக்க வேண்டும், இல்லையானால் கடவுள் ஆணைக்கு மாறாக நடக்க வேண்டும் என்று நாம் உணருமாறு எழுதியிருக்கின்றார். சப் கலெக்டராகவும், நியாயாதிபதியாகவும் உத்தியோகம் பார்க்கும் ஒருவர் அத்தகைய விஷயங்களை வாதத்திற்குக் கொண்டுவந்ததும் அல்லாமல் அவற்றைத் துரைத்தனத்தார் பரிசோதிக்க ரிகார்டில் எழுதிவைக்கவும் வேண்டுமென்று மிக விருப்பம் கொள்வாரானால், அவருக்குத் தம் உத்தியோ த்தின் எல்லைக்குள் அடங்கி இருக்கத்தக்க மனச்சக்தி கிடையாதென்பது தெளிவாகின்றது.''

"ஒவ்வொரு தேசத்திலும், அதிலும் முக்கியமாக இந்தியா தேசத்தில் அரசாட்சி செய்பவர்கள் மிகக் குறைவாக இருப்பதால், அவர்களுடைய மத சம்பந்தமான விஷயங்களில் நாம் தலையிடுவது மிக ஆபத்தாகும் அவர்கள் இப்போது தூங்குபவர்கள்போல் வெளிக்குக் காணப்பட்டாலும், நாம் பத்திரமாக இருக்கின்றோம் என்று முற்றிலும் நம்பிக்கொண்டிருக்கையில், அவர்கள் திடீ

றென்று கிளம்பி, வேலூரில் நடந்ததுபோல் நம்மீது பாய்வார்கள். மிகச் சிறிய நிகழ்ச்சி ஒன்று நேர்ந்தால், அவர்கள் கிளம்பி, நூறு வருடங்களில் மதசம்பந்தமாக கலெக்டர்கள் உழைக்கும் உழைப்புக்களுக்குமேல் ஒரு வருடத்தில் தீமையை விளைவிப்பார்கள். அவர்கள் சச்சரவு சிறிதே உண்டு பண்ணினாலும், அது சீக்கிரத்தில் அடக்கப்பட்டாலும், அதனால் விளையும் தீமை அழியாமல் நீடித்துக் கொண்டே இருக்கும். குடிகளுக்கும், துரைத்தனத்தாருக்கும் அவந[illegible] நம்பிக்கையை அதிகரிக்கும். அது எப்போதும் முற்றிலும் குறையவே மாட்டாது. எந்த ஜில்லாவில் சச்சரவு நேர்ந்[illegible]தா அந்த ஜில்லா முன்போலப் பத்திரமான நிலையிலும் [illegible]ராது. கலெக்டரும், நியாயாதிபதிகளும் மதபோதகர்களாக வேலை செய்வார்களானால், ஒருவித நன்மையும் உண்மையில் உண்டாகாது. அது அந்நோத்துக்குச் சில பேராசையுள்ள மக்களின் நம்பிக்கைகளை அதிகப்படுத்தலாம். ஆனால், அது கடைசியில் நிறைவேறாமல் போய்விடும்.''

"இந்தியர்களுக்குப் போதனைசெய்வதற்கு எல்லாவற்றிலும் சிறந்த வழியாக ஒரு கலெக்டருக்கு இருப்பது யாதென்றால், அவர் தம் சொந்த நடத்தையிலேயே அவர்களுக்கு உதாரணமாக இருக்க வேண்டும் என்பதாகும். அவர்கள் வழக்குகளைத் தாங்களே தீர்த்துக்கொள்ளும்படி அவர் முயற்சிசெய்ய வேண்டும்; அவர்களைக் கோர்ட்டுக்குப் போகாமல்படி தடுக்க வேண்டும்; அவர்கள் தம்மீதும், தம் கீழ் உத்தியோகஸ்தர் மீதும் செய்யும் பிரயாதுகளையெல்லாம் பொறுமையாகச் சகித்துக்கொள்ளவேண்டும். அக்குடிகள் பயிர் நன்றாக விளையவில்லை என்று பருவத்தின்மேல் குற்றம் சுமத்தினாலும் பொறுத்துக்கொள்ளவேண்டும்; தம்மாலியன்றவரையில் அவர்

களுக்கு எல்லா உதவியும் செய்ய வேண்டும்; அவ்வாறு அவரால் ஒன்றும் செய்யமுடியாமற்போனால், அவரிடத்து நன்மொழிகளாகிலும் பேசவேண்டும்''

"இந்தியர்களின் குணத்தை விருத்தி செய்ய அவர்கள் மதசம்பந்தமாக நுழையாமல் என்ன முயற்சிகள் வேண்டுமோ னலும் செய்துகொள்ளலாம். இங்கிலாந்திலுள்ள காரிய நிர்வாக சபையார் மதப்பிரசங்கிகளை ஒழுங்காக இந்தியாவிற்கு அனுப்பிக்கொண்டு வருகிறார்கள். அவர்களல்லாமல் மற்றும் பற்பல ஐரோப்பிய துரைத்தனத்தார்களும் மதப்பிரசங்கிகளை இந்தியாவிற்கு அனுப்புகிறார்கள். அம்மதப்பிரசங்கிகள் இந்தியாவில் ஒவ்வொரு பாகத்திலும் சென்று, தினைத்துணை இடையூறுமில்லாமல் தங்கள் வேலைகளைச் செய்து வருகின்றார்கள். அவர்களுக்கு அதிகாரம் ஒன்றுமில்லாமையால், அவர்களை எல்லோரும் வரவேற்கிறார்கள். இந்தியர்களை நம் போதனையை எடுத்துக்கொள்ளும்படி செய்வதற்கும், நம் கருத்துக்களின்படி நடக்கும்படி செய்வதற்கும், முதலில் அவர்களுக்கு நம்மிடத்தில் அன்பும், நம்பிக்கையும் உண்டாகும்படி செய்யவேண்டும். நாம் பக்ஷபாதமில்லாமல் எல்லோரிடத்திலும் நியாயமாக நடந்து கொள்வதாலும், நியாயமான தீர்வை போடுவதாலும், அவர்கள் வழக்கங்களை நாம் மதித்து வருவதாலும், எவ்விடத்திலும் நல்ல ஆட்சி செய்வதாலும், அவர்களின் அன்பையும், நம்பிக்கையையும் பெறமுடியும்.''

1822-ஆம் வருஷம் மன்ரோ பெரியார் ரெவின்யூ போர்ட்டாரை (Board of Revenue) சென்னை இராஜதானியில் எத்தனைப்பள்ளிக்கூடங்கள் இருக்கின்றனவென்றும், இந்தியர்களின் கல்வி எந்நிலையில் உளது என்றும் தமக்கு அறிவிக்கும்படி கட்டளை விதித்தார். கலெக்டர்களிடமிருந்து அவற்

திற்குப் பதில் வந்தபோது அவற்றைப்பார்த்துக் கீழ்வருமாறு எழுதியிருந்தார்:—

"இந்தியர்களின் கல்வி மிகத்தாழ்ந்த நிலையிலிருப்பதற்கு முக்கிய காரணங்கள் என்னவென்றால், துரைத்தனத்தார் அம்மக்களின் கல்வி சம்பந்தமாக மிகுதியாக ஊக்கம் காட்டாமையும், அம்மக்களின் வறுமையுமாகும். ஆனால், இக் கஷ்டங்களை நிவர்த்தி செய்துகொள்ள இரண்டு வழிகள் உண்டு. அவை எவையெனின், உயர்ந்த கல்வி எல்லார்க்கும் பொதுவாகக் கற்றுக்கொள்ளும் வசதிகள் செய்வதும் ஆபீசுகளில் எல்லாம் நன்கு கற்றவர்களுக்கு மற்றவர்களைக் காட்டிலும் உத்தியோகங்கள் கொடுப்பதுமாகும்."

ஆதலால், மன்ரோ துரை உபாத்தியாயர்களுக்குக் கல்வி கொடுப்பதற்குப் பணம் கொடுக்க ஒத்துக்கொண்டார். ஒவ்வொரு ஜில்லாவிலும் இரண்டு பெரிய கல்விச்சாலைகள் ஸ்தாபிக்கும்படி கட்டளையிட்டார். அவை ஒன்று இந்து சமயத்தார்க்கும், மற்றொன்று மகம்மதியர்களுக்கும் ஏற்படுத் தப்பட்டன. ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒவ்வொரு பள் ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டது. அவர் உபாத்தியாயர்களின் மாதச்சம்பளம் பதினைந்து ரூபாயும், ஒன்பது ரூபாயுமாகவே இருக்கவேண்டும். என்றும்ஏனென்றால், ஒவ்வொரு உபாத்தி யாயரும் தம் மாணுக்கர்களிடம் தம் சம்பளத்திற்குமேல் பணம் வாங்குகிறார்கள். என்றும், துரைத்தனத்தார் இந்தியர் களின் கல்வி சம்பந்தமாக எவ்வளவு பணம் செலவு செய்த போதிலும், அதனால் தேசம் விருத்தியாகுமேயன்றிக் கீழ்நிலை அடையாது. என்றும், அதனால் எல்லா மக்களுக்கும் நல்லறி வும், நல்ல பழக்கங்களும், கைத்தொழில் விருத்தியும், வாழ்க் கையைச் சுகப்படுத்திக்கொள்ள ஆர்வமும், ஐஸ்வரிய விருத்தி யும் உண்டாகும் என்றும் எழுதினர்."

அதிகாரம் பதினைந்து.

மன்ரோவின் உலவாப் பெருமை.

மன்ரோ துரையைப்போல் இந்தியா தேசத்தைப்பற்றிப் பூரண ஞானம் பெற்றவர்கள் அவர்களுக்கு முன் சென்னைக் கவர்னராக வந்த ஒருவருக்கும் இல்லை. அவரைப்போல் அவருக்கு முன்வந்த கவர்னர்களும், பின் வந்த கவர்னர்களும் சென்னை இராஜதானி முழுவதும் நீண்ட பிரயாணம் செய்ததில்லை. அருகாமையில்வந்த கவர்னர்கள் அடிக்கடி பிரயாணங்கள்செய்து ஒவ்வொரு ஜில்லாவையும் பார்வையிட்டார்கள். அவர்கள் மிகக் கொடிய கோடைக்காலத்திலும் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் சென்று, பஞ்சமும், பல கஷ்டங்களும் தேசத்தில் வருகின்றபோது ஜனங்களுக்குத் தைரியமும், ஊக்கமும் உண்டாகுமென்றும், துரைத்தனத்தார்மீது நல்லஅபிப்பிராயமும், நம்பிக்கையும் ஏற்படுமென்றும் கலெக்டர்களுக்குக் காட்டும்பொருட்டுத் தாங்களே பிரயாணம் செய்திருக்கின்றார்கள். ஆனால், இக்காலத்தில் கவர்னர்களெல்லாம் ரயில்வே உதவியால் சவுக்கியமாகப் பிரயாணம் செய்கிறார்கள். ஆனால், மன்ரோதுரையின் காலத்தில் ரயில்வே கிடையாது. அவர் ஒவ்வொரு நாளும் தளராமல் எவ்விதம் தகுந்த வசதியுமின்றிப் பிரயாணம் செய்துகொண்டிருந்தார்.

1822-ஆம் வருஷம் மன்ரோ சென்னையிலிருந்து கஞ்சம் ஜில்லாவரையில் மூன்று மாதம் பிரயாணம் செய்தார். அவர் வழியில் ஜமீன்தார்களிடத்திலும், விஜயநகரம், வெங்கடகிரி, காளாஸ்திரி முதலிய பதிகளின் அரசர்களிடத்திலும் சம்பாஷணை புரிந்து, அவர்களைப்பற்றிப் பல அருமையான

விஷயங்களும், அபிப்பிராயங்களும் எழுதியிருக்கின்றார். 1821-ஆம் வருஷம் அவர் பரமஹால் நாட்டிற்குச் சென்றார். அவர் அங்குச் சென்றமைக்குக் காரணங்கள் என்னவென்றால், அங்குள்ள குடிகளை அவர் பார்ப்பதற்கும், அந்நாட்டின் நிலைமையை விசாரிப்பதற்கும், தாம் முப்பது வருடங்களுக்கு முன் அந்நாட்டில் பார்த்த பழைய காட்சிகளை மறுபடியும் கண்டு களிப்பதற்கும் அவர் கொண்ட எண்ணங்களே ஆகும்.

1823-ஆம் வருஷம் மன்ரோ கடப்பை, கர்நூல் முதலிய ஜில்லாக்களுக்குப் பிரயாணம் செய்தார். வெய்யிலில் அதிக கொடுமையாக இருந்தமையால், கடப்பையை விட்டுப் போவதற்கு அவர் பிரியப்பட்டார். ஆனால், அவர் ''இங்கு எவ்வளவு சூரிய வெப்பமிருந்தாலும், "நான் இப்பதியிலிருக்க இன்னும் விரும்புகின்றேன். ஏனென்றால், இங்கு மிக உழைப்புள்ள உழவர்களிருக்கின்றார்கள். அவர்களில் அநேகர் என் பழைய நண்பர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் என்னைப் பார்க்க விரும்புகின்றார்கள்; நானும் அவர்களைப் பார்க்க விரும்புகின்றேன்'' என்று கூறியுள்ளார்.

1826-ஆம் வருஷம் சர் தாமஸ் மன்ரோ தம் கவர்னர் வேலையை விட்டுவிடத் தம் மேலதிகாரியின் அனுமதியைக் கேட்டிருந்தார். அவர் அடுத்த வருஷத்தில் சீக்கிரமாக வேறொருவர் தமக்குப் பதிலாகக் கவர்னராக வந்துவிடுவாரென்று ஆவலாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். அவர் மனைவி அவர் துணையின்றியே அவருக்கு முன் இங்கிலாந்திற்குப் போகவேண்டியவளாக இருந்தாள். ஏனென்றால், அவர்கள் இரண்டாவது குமாரன் அப்போது நோயால் பீடிக்கப்பட்டிருந்தான். அவன் இந்தியாவை விட்டுப்போய் விட்டால்தான் உயிர் பிழைத்திருப்பான் என்று வைத்தியர்

கள் சொல்லிவிட்டார்கள். மன்ரோவின் மனைவி 1826-ஆம் வருஷம் மார்ச்சுமாதம் சென்னையை விட்டு இங்கிலாந்திற்குச் சென்றுவிட்டாள். அதற்குப் பின்னர் அவள் தம் கணவனைப் பார்க்கும் பாக்கியம் பெறவேயில்லை.

1826-ஆம் வருஷம் சர்தாமஸ் மன்ரோ செங்கல்பட்டு, தென்னாற்காடு, தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், நீலகிரி, முதலிய ஜில்லாக்களுக்குப் பிரயாணம் செய்தார். அவர் உதகமந்திலிருந்து தம் மனைவிக்கு நீலகிரி குன்றுகளைப்பற்றி வர்ணித்து எழுதியிருப்பது மிக அழகாக இருக்கின்றது. அவர் நீலகிரியை விட்டுப் பெங்களூர் மார்க்கமாகச் சென்னைக்கு வரும் வழியில் காவேரி நீர் வீழ்ச்சியைக்கண்டு களித்தர். அக்காட்சியைப் பற்றி மிக அழகாகவும் வர்ணித்து எழுதியிருக்கின்றார். அவர் இங்கிலாந்திற்குப் போகத் தடைகள் வந்துகொண்டே இருந்தன. அது அவருக்கு மிக மனவருத்தமாகவே இருந்தது. அவ்வாறு தடைப்பட்டதின் காரணம் என்னவென்றால், அவரிடத்திற்குப் புதிய கவர்னர் கொஞ்சத்தில் வரவில்லை. ஆதலால், அவர் 2827-ஆம் வருஷம் மே மாதம் கடப்பை, கர்நூல் முதலிய ஜில்லாக்களைக் கடைசி முறையாகப் பார்த்துவிட்டுவரச் சென்றார்.

மன்ரோ துரை கடப்பை ஜில்லாவிற்குப் பிரயாணம் செய்தபோது ஒரு சம்பவம் அங்கே நிகழ்ந்ததாக ஒரு புராதன கதை இன்றும் வழங்குகின்றது. அதாவது, அவர் அங்குள்ள சில குன்றுகளின் பக்கம் சென்றபோது, அவர் திடீரென்று செங்குத்தான சிகரங்களைப் பார்த்து, "ஆஹா! இந்தப் பள்ளத்தாக்கின் குறுக்கே என்ன அழகான பூமாலையைப் போட்டிருக்கின்றார்கள்." என்று தம் துணைவரிடம்

சொன்னர். அவர் துணைவர்கள் நாலாப்பக்கங்களிலும் சுற்றிப் பார்த்துப் பூமாலை எங்கும் காணுமே என்று அவரிடம் சொன்னர்கள். அதைக்கேட்டு அவர், "நண்பர்களே ! அதோ இருக்கின்றதே. உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா ?' அது முற்றிலும் பொன்னல் செய்யப்பட்டிருக்கின்றது." என்று கூறினர். மறுபடியும் அவர் துணைவர்கள் மேலும், கீழும் நாலாப்பக்கங்களிலும் சுற்றிப் பார்த்தார்கள். ஆனல், அவர்கள் கண்களுக்கு ஒரு மாலையும் காணப்படவில்லை இருப்பினும், அவர்களில் ஒருவர், " ஐயோ பாவம் ! எவரோ ஒரு நல்ல மகான் இறக்கப்போகிருர்." என்று கூறினர்.

மன்ரோ அனந்தபுரத்தில் சில தினங்கள் தங்கி, தாமும் தம் துணைவரும் ஜூலை மாலை 4 ஆம் தேதி குத்தியைப் (Gooty) போய்ச் சேர்ந்தனர். அங்கே அநேக சிப்பாய்கள் விஷபேதி கண்டு, மரணமடைந்தார்கள். மறுநாள் காலையில் எல்லோரும் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, 6 ஆம் தேதி குத்தியிலிருந்து இருபத்தைந்து மைல் தூரமுள்ள கிருஷ்ண ஜில்லாவைச் சேர்ந்த பட்டிக்கொண்டா என்னும் பதியைப் போய்ச் சேர்ந்தனர். அங்குச் சேர்ந்த இரண்டொரு மணி களுக்குள் மன்ரோ துரைக்கு விஷபேதி கண்டுவிட்டது. முதலில் பயங்கரமான குறிகள் ஒன்றும் அவரிடத்தில் காணப்படவில்லை. அன்று மத்தியானம் அவர் பிழைத்து விடுவாரென்று எல்லோரும் நம்பியிருந்தார்கள். மன்ரோ தம் இன்பமான குரலில் வேடிக்கையாக, "எனக்கு உபசார மும், பணிவிடைகளும் செய்வதுபோல் ஒருவருக்குக் கிடைப் பதாயிருந்தால், அவர் நோயாக இருப்பது விருப்பத்தக்கதே. என்று கூறினர். மன்ரோ அன்று சாயங்காலம் மிகப் பயங் கரமான நிலைக்கு வந்து, 1827-ஆம் வருஷம் ஜூலை மாதம்

6-ஆம் தேதி இரவு ஒன்பதரைமணிக்கு இம்மண்ணுலகை விட்டு விண்ணுலகம் சேர்ந்தார்.

அவர் உடல் குத்திக்குக் கொண்டு (Gotoy) போகப் பட்டு, அங்குள்ள கோட்டையின் அருகேயுள்ள ஆங்கிலேயர் மயானத்தில் அடைக்கலம் செய்யப்பட்டது அவருக்கு அங் குக் கட்டிய கோரி இப்போதும் வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. 1831-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் அவர் உடல் சென்னைமாநகருக்குக் கொண்டு போகப் பட்டு, அங்குள்ள சென்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சென்ட் மேரி ஆலயத்தில் அடைக்கலம் செய்யப்பட்டது.

மன்ரோ பெருந்தகையாரின் மரணத்தைக் கேட்ட சென்னைவாசிகள் திடுக்குற்று, அவரை நினைந்து, மிக வருத்தமுற்றனர். துரைத்தனத்தார் ஜூலை மாதம் 9-ஆம் தேதி கீழ்வருமாறு பிரசுரம் செய்தார்கள். "மன்ரோ பெரியாரது மேலான நல்லுணர்ச்சியும், அபார ஆற் றல்களும், தளரா உழைப்பும், பற்பல துறைகளில் பெற்றுள்ள பற்பல ஞானப்பொக்கிஷங்களும், பொறை யும், குணமும் எவரையும் வரவேற்கும் பெருந்தன்மையும், அன்பின் மாட்சியும், குடிகளிடத்தும், போர்வீரர்களிடத் தும் இருந்த சகவாசமும் அவருக்கு எந்த உத்தியோகத்திலும் மிக உன்னத ஸ்தானத்தைக் கொடுத்திருக்கும் என்பது நிச் சயம். இவ்வித நற்குணங்களை அவர் தம் உத்தியோகத்திற்கு ஏற்ப, நன்கு உபயோகப்படுத்தித் தேசத்தைவிருத்திசெய்து, எங்கும் ஒழுங்கும், அமைதியும் நிலைபெறுமாறு செய்தனர்',

சென்னையில் ஒரு பொது மக்கள் கூட்டம் கூடிற்று. அதில் கீழ்குறிக்கும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

" இங்குக் குழுமியுள்ள ஒவ்வொருஜாதியாருமாகிய நாங் கள் இச்சென்னை நகரின் பெருமை வாய்ந்த கவர்னர் காலம்

சென்றமைக்கு மிகவும் வருந்துகின்றோம். அவர் கொண்ட பெரும்புகழில் நாங்கள் கொண்ட செருக்கை நினைந்து மனம் கவல்கின்றோம். அவர் நீதியும், தரும குணமும், கள்ள மின்மையும், கருணைமாட்சியும், அவரது அபார ஆற்றல் களுக்கு அணுவளவும் குறைந்தனவல்ல. அப்பெரியாரின் ஞாபகார்த்தமாக அவருக்கு ஒரு பிரதிமை செய்து வைக்கக் குடிகள் தங்களாலியன்ற பொருளுதவி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.''

பட்டிக்கொண்டா என்னும் பதியில் மன்ரோ மரண மடைந்த இடத்தின் அருகே ஒரு சோலையையும், படிகள் வைத்த ஒரு குளத்தையும் துரைத்தனத்தார் உண்டு பண்ணி னார்கள். குத்தியில் அதைப் போலவே ஒரு குளத்தையும், இந் யர்களுக்காக ஒரு பெரிய சத்திரத்தையும் அவர் பெயரால் ஏற்படுத்தினார்கள். அச்சத்திரத்தில் அநேக ஆண்டுகளாக அவர் ஞாபகார்த்தமாக ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப் பட்டது. அதில் மன்ரோ துரை தேகம் முழுமையும் ஒளி ரும் ஒரு பிரதிமை வைக்கப்பட்டிருக்கின்றது. அதேமாதிரி பிரதிமைகள் பல்லாரி நகரிலுள்ள கச்சேரியிலும், பல்லாரி, கடப்பை ஜில்லாக்களிலுள்ள அநேக பொதுமக்கள் கட்டிடங் களிலும், சென்னையிலுள்ள போர்டு ஆபீசிலும் வைக்கப்பட் டிருக்கின்றன.

1839-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 23-ஆம் தேதி மன்ரோ துரையின் அழகான பெரிய பிரதிமை ஒன்று சென் னையில் தகுதியான இடத்தில் குடிகள் கண்டு அப்பெரியாரை என்றும் ஞாபகத்தில் வைக்கும் பொருட்டு எல்லாச் சடங்கு களுடனும் ஒழுங்காக வைக்கப்பட்டது.

முடிவு.

சிலப்பதிகாரவிளக்கம்

[ஆர். பி. சேதுப்பிள்ளை பி. ஏ., பி.எல். எழுதியது.]

இது ஒரு சிறந்த ஆராய்ச்சி நூல். சிலப்பதிகாரக் கதை, சிலப்பதிகார ஆராய்ச்சி ஆகிய இரண்டு பாகங்களை யுடையது. இந்நூலின் இரண்டாம் பாகம் நூலாசிரியர் பெருமை, அரச நீதியும், அரசியலும், ஆரிய அரசரும் தமிழ் அரசரு கண்ணகியின் கற்பின்திறம், வினையின் பயனே பயன், டைக்காலத் தமிழ் மக்கள் நாகரிகம், சிலப்பதிகார நூல் நயம் ஆகிய ஏழு வியாசங்கள் ஆராய்ச்சி முறையில் எழுதப்பட் டுள்ளன. விலை ரூ. 1-8-0

ராஜ ராஜன்

[மணி திருநாவுக்கரசு முதலியார் எழுதியது.]

இது ஓர் உயர்ந்த இனிய நாவல். இது படிப் மனதைக் கவர்வது. இதை எடுத்து வாசிக்க ஆரம்ப விட்டால் முடிக்குமட்டும் கீழே வைக்க மனம் வராது. ந யும் தமிழ்ப்போக்கும் சிறந்தது. விலை ரூ. 1-8-0

ராஜாதிராஜன்

இதில் ஏசுகிறிஸ்து நாதரின் ஜீவிய சரித்திரமும், செய்த உபதேசங்களும் சுருக்கமாக சிறு பிள்ளைகளுக்கு கூறப்பட்டிருக்கின்றன. பெரிய எழுத்து. எளிய விலை அணா 5.

ஒற்றுமை ஆபீஸ், சைதாப்பேட்டை, ம

ஒற்றுமை ஆபீஸ் பிரசுரங்கள்.

1.	ராஜராஜன் ...	1	8
2.	திருவள்ளுவர் நூல் நயம் ...	1	0
3.	சிலப்பதிகார விளக்கம் ...	1	8
4.	சிலப்பதிகாரக்-கதை மாத்திரம் ...	0	8
5.	வள்ளிநாயகி ...	1	8
6.	தமிழ்நாட்டு நவமணிகள் ...	0	8
7.	புகைவண்டிக் கொலை ...	0	12
8.	கோபால கிருஷ்ண கோக்ஹேல் சரிதை ...	0	10
9.	சர் தாமஸ் மன்ரோ சரிதை ...	0	12
10.	ராஜாதிராஜன் அல்லது கிறிஸ்து சரிதை ...	0	5
11.	இந்தியத் தலைவர்கள் ...	0	4
12.	அன்பின் மாட்சி அல்லது நன்றியுள்ள வேலையாள் ...	0	8
13.	ஞானகுரு அல்லது நல்லாசிரியன் ...	0	10
14.	நஞ்சங்கோடு தாசில்தார் ...	0	2
15.	ராஜி அல்லது என் உயிரைக் காப்பாற்றிய நாய் ...	0	5

விரிவான விளம்பர கியாட்லாக் இனாம்

ஒற்றுமை ஆபீஸ், சைதாப்பேட்டை, மதருஸ்.